ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

* மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்கள்

அருளிச்செய்த

நித்யாநுஸந்தாநம்

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

உபதேசரத்தினமாலை,

திருவாய்மொழி நூற்றந்தாதி,

ஆர்த்தி ப்ரபந்தம்,

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த

ஞானஸாரம், ப்ரமேயஸாரம்,

விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்த

ஸப்தகாதை.

இஃது

ஸ்ரீமான். உ. வே. அரசாணிபாலை

கந்தாடை

கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகளால்

பரிசோதித்தச்சியற்றிய பிரதிக்கிணங்கியது.

B. இரத்தின. நாயகர் ஸன்ஸ்,


திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

1931.

* இந்தக்குறிப்பு திருத்தி சேவிக்கவேண்டு மிடங்களைக் காட்டும்.

⁑ இந்தக்குறிப்பு இரட்டித்துச் சேவிக்கும் பாசுரங்களைக் காட்டும்.



பரமபதநாதன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அவதாரிகை

ஆழ்வார்கள் அவதரித்ததற்குக் காரணம்.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், வேதங்களாலும், வேதாந்தங்களாலும், ரிஷிகளாலும், ஆழ்வார்களாலும் கொண்டாடப்பட்ட அதிசயத்தையுடைய பரமபதத்தில், நீண்ட மதிள்களையும் கோபுரங்களையுமுடைய திருப்படை வீட்டில், மணிமாடமாளிகைகளால் சூழப்பட்ட செம்பொன்செய் கோயிலிலே, ஆயிரம் மாணிக்கக்கால்கள் நிறுத்தப்பட்டு ரத்நமயமான திருமாமணிமண்டபத்தின் நடுவே விளங்குகிற ஸிங்காஸநத்தின்மேலே, உடனமர் காதல்மகளிர் திருமகள் மண்மகள் ஆயர் மடமகள் ஆகிய ஸ்ரீ பூமிநீளைகளோடேகூட உபய விபூதிக்கும் நிர்வாஹனாய்க்கொண்டு எழுந்தருளி யிருந்து, தானும் நிரதிசய ஆநந்தயுக்தனாய், அநந்தகருட விஷ்வக்ஸேனர் முதலான நித்யஸூரிகளையும், நிவ்ருத்த ஸம்ஸாரருமாய் நித்யரோபாதி லப்த கைங்கர்யருமான முக்தரையும் ஆநந்திப்பித்துக்கொண்டு போராநிற்கச்செய்தே; "இவர்களைப்போலே ஸம்ஸாரிகளும் நம்மை அநுபவித்து, அவ்வநுபவத்தாலுண்டான நிரதிசய ஆநந்தரூபமத் கைங்கர்யமாகிற மஹா ஸம்பத்தைப்பெற்று வாழுகைக்கு யோக்யதை உண்டாயிருக்க இத்தை யிழந்திருப்பதே" என்று அங்குத்தை அநுபவங்களொன்றும் உண்டதுருக்காட்டாதே அவன் தனியரைப் போலே மிகவும் நொந்து, இவர்கள் கரணகளேபரங்களின்றியே இறகொடிந்த பக்ஷியைப்போலே யிருக்கிறபடியைக்கண்டு, பரம தயாளுவாய்க் கொண்டு ஸகலாத்மாக்களுக்கும் கரணகளேபர ப்ரதானம்பண்ணியருள; இவர்களும் ஸர்வேச்வரன் தன் திருவடிகளைக் கிட்டி ஆச்ரயிக்கைக்காகக் கொடுத்த சரீரத்தைக்கொண்டு அவன் நினைவின்படி செய்யாதே, ஸமித்தை தறிக்கக்கொடுத்த கத்தியைக் கொண்டு பசுவின்வாலைத் தறிப்பாரைப்போலவும், களையெடுக்கக் கொடுத்த கோலைக்கொண்டு கண்ணைக் கிளரிக்கொள்வாரைப்போலவும், ஆறு நீந்தக்கொடுத்த தெப்பத்தைக்கொண்டு கரையேறாதே நீர்வாய்க்காலே பொழுகிக் கடலில் புகுவாரைப்போலவும், இச்சரீரத்தை ஶப்தாதிவிஷய ப்ராவண்யத்துக்கு உறுப்பாக்கி பிறவியென்

னும் கடலில் புக்கு அநர்த்தப்படுகிறபடியைக்கண்டு நல்வழி கண்டு நடக்கைக்குடலாக, தன் க்ருபையாலே, ஶாஸ்த்ர ப்ரதானம்பண்ணியருள, அந்த சாஸ்த்ரங்களை அப்யஸிக்கைக்கு அநேக யோக்யதை வேண்டியும் நெடுங்காலம் அப்யஸித்தாலன்றி ஸாதிக்கக்கூடாமலும் இருக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி, ஸுலபமான திருவஷ்டாக்ஷர ப்ரம்ஹவித்தையை தானே வெளிப்படுத்தினவிடத்திலும், அதின்படி செய்யாதே, எல்லாப் பாபங்களுக்கும் ஹேதுவாய் தன் ஸ்வாதந்த்ர்யரூபமான ஆத்மாபஹாரத்தைப்பண்ணி அநாதிகர்ம வாஸனா தூஷிதராயிருக்கிறபடியைக்கண்டு சீட்டுக்கு இசையாதாரைச் சேனையைத்திரட்டி வெல்லும் ராஜாக்களைப் போலே, ஸர்வேஸ்வரன் "நாமேபோய் இவர்களை வாரிப் பிடியாகப் பிடித்துக்கொண்டு வர வேணும்" என்று ராமக்ருஷ்ணாத்யவதாரமாக அவதரித்து, ஶாஸ்த்ரீயமர்யாதிகளைத் தான் அநுஷ்டித்தும் அநுஷ்டிப்பித்தும் படாதன பட்டு திருத்தப்பார்த்தவிடத்திலும், ஆஸுர ப்ரக்ருதிகளாய்த் தன்னைவந்து கிட்டாதே எதிரிட்டு அதமமான கதிகளில் விழுகிறபடியைப்பார்த்து, "விஜாதியரான நமக்கு இது சாத்யமன்று, இனக்குப் பார்வைபிட்டு ம்ருகம் பிடிப்பாரைப்போலே மநுஷ்யஜாதியரான ஆழ்வார்களைக்கொண்டே கார்யங் கொள்ளவேணும்" என்று அறுதியிட்டு ஸ்ரீவத்ஸ கௌஸ்துப வைஜயந்தி வனமாலைகளையும், ஸ்ரீ பூமிநீளைகளையும் ஸ்ரீ பஞ்சாயுத ஆழ்வார்களையும், அநந்த கருட விஷ்வக்ஸேன ப்ரப்ருதிகளையும் பார்த்து, "நீங்கள் போய் லீலா விபூதியில் நாநாவர்ணங்களிலும் அவதரித்து எல்லா ஆத்மாக்களையும் உத்தரிப்பியுங்கள்" என்று நியமித்தருள; அவர்களும், தாம்ரபர்ணி காவேரி முதலான நதிகளின் சமீபங்களான தமிழ்த் தேசங்களில், தாழ்ந்தாரை உயர்த்துகைக்காக நாநாவர்ணங்களில் வந்தவதரிக்க; சர்வேஸ்வரனும் ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநல மருளி, அவர்கள்முகேந, சர்வாதிகாரமான த்ரவிட வேதரூப திவ்ய ப்ரபந்தங்களை ப்ரகாசிப்பித்தருளினான்.

வேறொன்றில் கண்வையாதே பகவத்குணங்களிலேயே ஆழங்கால் பட்டிருந்தமையால், இவர்களுக்கு 'ஆழ்வார்கள்' என்று பேராயிற்று.



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஆழ்வார் திருவடிகளே சரணம். சீயர் திருவடிகளே சரணம்.

தனியன்கள்

மணவாளமாமுனிகள் தனியன்.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

குருபரம்பரையின் தனியன்.

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.)

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌂 ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

எம்பெருமானார் தனியன்.

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.)

𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇 ।

𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌசரணம்ப்ரபத்யே.

நம்மாழ்வார் தனியன்.

(ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தது.)

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌳𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌲𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யநஃகுலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா.

ஆழ்வார்கள் தனியன்.


ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது.

𑌭𑍂𑌤𑌂 † 𑌸𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥
𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌪𑌰𑌕𑌾𑌲𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

பூதம்ஸரஸ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்.

---

† '𑌸𑌰𑌸𑍍𑌯' என்றும் பெரியோர்கள் அநுஸந்திப்பது உண்டு.



பெரியாழ்வார்.

பெரியாழ்வார் அருளிச்செய்த

வேதாந்தஸாரமாகும்

திருப்பல்லாண்டு

தனியன்

(நாதமுனிகள் அருளிச்செய்தது.)

𑌗𑍁𑌰𑍁𑌮𑍁𑌖𑌮𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹𑌵𑍇𑌦𑌾𑌨𑌶𑍇𑌷𑌾𑌨𑍍
𑌨𑌰𑌪𑌤𑌿𑌪𑌰𑌿𑌕𑍍𑌲𑍢𑌪𑍍𑌤𑌂 𑌶𑍁𑌲𑍍𑌕𑌮𑌾𑌦𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃 ।
𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌮𑌮𑌰𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌰𑌂𑌗𑌨𑌾𑌥𑌸𑍍𑌯𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑍁𑌲𑌤𑌿𑌲𑌕𑌂 𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஸுல்கமாதாதுகாம꞉
ஸ்வஸுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம் விஷ்ணுசித்தம் நமாமி.

(பட்டர் அருளிச்செய்தது.)

நேரிசை வெண்பா.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால் *
சொன்னார் கழற்கமலம் சூடினோம் * —முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் * கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று *
ஈண்டிய சங்க மெடுத்தூத *—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான் *
பாதங்கள் யாமுடைய பற்று.

வெண்செந்துறை.

நாட்டைராகம்-அடதாளம்.

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம் *
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! * உன்
சேவடி செவ்வி திருக்காப்பு. (௧)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

‡ அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு *
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. (௨)

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமுங்கொண்மின் *
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினில்புகுதலொட்டோம் *
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ் * இலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௩)

ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக்கூடுமினோ *
நாடுநகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்! வந்துபல்லாண்டுகூறுமினே. (௪)

அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த இருடீகேசன்றனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர்! வந்தடிதொழுது ஆயிரநாமஞ்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே. (௫)

எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழியாட்செய்கின்றோம் * திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை *
§ பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே. (௬)

தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்று குடிகுடியாட்செய்கின்றோம் *
மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி
பாய * சுழற்றியஆழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௭)

நெய்யிடைநல்லதோர்சோறும் நியதமும்அத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும் *
மெய்யிடைநல்லதோர்சாந்தமும்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (௮)

உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம் *

---

§ பந்தனை-அனுக்கம்; பிள்ளைகட்குவரும் வியாதி.

விடுத்ததிசைக்கருமம்திருத்தித் திருவோணத்திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே.

எந்நாளெம்பெருமான் உன்தனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்ததுகாண் *
செந்நாள்தோற்றித் திருமதுரையுள்சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகந்தலைப்பாய்ந்தவனே ! உன்னைப்பல்லாண்டுகூறுதுமே. (௧௰)


‡ அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்
செல்வனைப்போலத்திருமாலே ! நானும்உனக்குப்பழவடியேன் * [கன்
நல்வகையால்நமோநாராயணாவென்று நாமம்பலபரவி *
பல்வகையாலும்பவித்திரனே ! உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (௧௧)

‡ பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் *
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாவென்று *
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (௧௨)

அடிவரவு:—பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[ஆதிகூறுதும், அநந்தரம்கூறுமின், அண்டம்என்மின், எந்தை பாடுதும், தீஉடுத்து எந்நாள் கூறுதும், நெய்யும் அல்லும் கூறுவனே.]

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.



தொண்டரடிப்பொடியாழ்வார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

வேதாந்தஸாரமாகும்

திருப்பள்ளியெழுச்சி.

தனியன்கள்.

(திருமாலையாண்டான் அருளிச்செய்தது.)

𑌤𑌮𑍇𑌵𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯𑌂 𑌰𑌾𑌜𑌵𑌦𑌰𑍍𑌹𑌣𑍀𑌯𑌂 ।
𑌪𑍍𑌰𑌾𑌬𑍋𑌧𑌕𑍀𑌂𑌯𑍋𑌕𑍃𑌤𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌲𑌾𑌂
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌂 𑌭𑌗𑌵𑌂𑌤𑌮𑍀𑌡𑍇 ॥

தமேவமத்வாபரவாஸுதேவம்
ரங்கேஸயம்ராஜவதர்ஹணியம்*
ப்ராபோதகீம்யோக்ருதஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.

(திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.)

நேரிசை வெண்பா.

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர் *
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம் *—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானை * பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்த வூர்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பூபாளராகம்-அடதாளம்.

கதிரவன்குணதிசைச் சிகரம்வந்தணைந்தான்
கனையிருளகன்றது காலையம்பொழுதாய் *
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவரரசர்கள் வந்துவந்தீண்டி *
எதிர்திசைநிறைந்தனர் இவரொடும்புகுந்த
இருங்களிற்றீட்டமும் பிடியொடுமுரசும் *
அதிர்தலில்அலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (க)

கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக்
    கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ *
எழுந்தனமலரணைப் பள்ளிகொண்டன்னம்
    ஈன்பனிநனைந்த தமிருஞ்சிறகுதறி *
விழுங்கியமுதலையின் பிலம்புரைபேழ்வாய்
    வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி *
அழுங்கியவானையி னருந்துயர்கெடுத்த
    அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (உ)

சுடரொளிபரந்தன சூழ்திசையெல்லாம்
    துன்னியதாரகை மின்னொளிசுருங்கி *
படரொளிபசுத்தனன் பனிமதிஇவனோ
    பாயிருளகன்றது பைம்பொழிற்கமுகின் *
மடலிடைக்கீறி வண்பாளைகள்நாற
    வைகறைகூர்ந்தது மாருதம்இதுவோ *
அடலொளிதிகழ்தரு திகிரியந்தடக்கை
    அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (ங)

மேட்டிளமேதிகள் தளைவிடும்ஆயர்கள்
    வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும் *
ஈட்டியவிசைதிசை பரந்தனவயலுள்
    இரிந்தனசுரும்பினம், இலங்கையர்குலத்தை *
வாட்டியவரிசிலை வானவரேறே!
    மாமுனிவேள்வியைக் காத்து * அவபிரதம்
ஆட்டியவடுதிற லயோத்தியெம்மரசே!
    அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (ச)

புலம்பினபுட்களும் பூம்பொழில்களின்வாய்
    போயிற்றுக்கங்குல் புகுந்ததுபுலரி *
கலந்ததுகுணதிசைக் கனைகடலரவம்
    களிவண்டுமிழற்றிய கலம்பகம்புனைந்த *
அலங்கலந்தொடையல்கொண்டு அடியிணைபணிவான்
    அமரர்கள்புகுந்தன ராதலில்அம்மா! *
இலங்கையர்கோன் வழிபாடுசெய்கோயில்
    எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. (ரு)

இரவியர்மணிநெடுந் தேரொடும்இவரோ
    இறையவர்பதினொரு விடையரும்இவரோ *
மருவியமயிலினன் அறுமுகன் இவனோ
    மருதரும்வசுக்களும் வந்துவந்தீண்டி *
புரவியோடாடலும் பாடலும்தேரும்
    குமரதண்டம்புகுந் தீண்டியவெள்ளம் *

அருவரையனையநின் கோயில்முன்னிவரோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (௬)

அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ
அருந்தவமுனிவரும் மருதரும்இவரோ *
இந்திரனானையும் தானும்வந்திவனோ
எம்பெருமான்! உன கோயிலின்வாசல் *
சுந்தரர்நெருக்கவிச் சாதரர்நூக்க
இயக்கருமயங்கினர் திருவடித்தொழுவான் *
அந்தரம்பாரிட மில்லைமற்றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (எ)

வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க
மாநிதிகபிலையொண் கண்ணாடிமுதலா *
எம்பெருமான்! படிமக்கலம்காண்டற்கு
வற்பனவாயின கொண்டுநன்முனிவர் *
தும்புருநாரதர் புகுந்தனர்இவரோ
தோன்றினன்இரவியும் துலங்கொளிபரப்பி *
அம்பரதலத்தினின்று அகல்கின்றது இருள்போய்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (அ)

‡ ஏதமில்தண்ணுமை எக்கம்மத்தளி
யாழ்குழல்முழவமோடு இசைதிசைகெழுமி *
கீதங்கள்பாடினர் கின்னரர்கெருடர்கள்
கந்தருவரவர் கங்குலுளெல்லாம் *
மாதவர்வானவர் சாரணர்இயக்கர்
சித்தருமயங்கினர் திருவடித்தொழுவான் *
ஆதலில்அவர்க்குநா ளோலக்கமருள
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (௯)

‡ கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தனஇவையோ
கதிரவன்கனைகடல் முளைத்தனன்இவனோ *
துடியிடையார்சுரி குழல்பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா! *
தொடையொத்ததுளவமும் கூடையும்பொலிந்து
தோன்றியதோள்தொண்ட ரடிப்பொடியென்னும்
அடியனை * அளியனென் றருளிஉன்னடியார்க்கு
ஆட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே. (௰)

அடிவரவு—கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவி அந்தரம் வம்பவிழ் ஏதம் கடி அமலன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

நித்யாநுஸந்தாநம்

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

உபநிஷத்ஸாரமாகும்

திருப்பாவை

தனியன்கள்.

(ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது.)

𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯𑌕𑍃𑌷𑍍𑌣𑌂
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂𑌸𑍍𑌵𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌶𑌿𑌰𑌃𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀 ।
𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌰𑌜𑌿 𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌂𑌯𑌾 𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇
𑌗𑍋𑌦𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌨𑌮 𑌇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌭𑍂𑌯𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌭𑍂𑌯𑌃 ॥

நீளாதுங்கஸ்தநகிரிதடீ ஸுப்தமுத்போத்யக்ருஷ்ணம்
பாரார்த்யம்ஸ்வம்ஸ்ருதி ஸதஸிரஸ்ஸித்தமத்யாபயந்தீ-
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம்யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யைநம இதமிதம் பூயஏவாஸ்துபூயஃ

(உய்யக்கொண்டார் அருளிச்செய்தது.)

நேரிசைவெண்பா.

அன்ன வயல்புதுவை யாண்டாள் * அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் *—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய் *—நாடிநீ
வேங்கடவற்கு என்னைவிதி என்ற இம்மாற்றம் *
நாம்கடவா வண்ணமே நல்கு.



ஸ்ரீ ஆண்டாள்.

எட்டடி நாற்சீ ரொருவிகற்பக் கொச்சகக்கலிப்பா.

பிலஹரிராகம்-அட தாளம்.

† மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால் *
நீராடப்போதுவீர் போதுமினோ, நேரிழையீர்! *
சீர்மல்கும்ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்! *
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன் *
ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ்சிங்கம் *
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான் *
நாராயணனே நமக்கேபறைதருவான் *
பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய். (க)

பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

வையத்துவாழ்வீர்காள்! நாமுந்நம்பாவைக்கு *
செய்யுங்கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி *
நெய்யுண்ணோம்பாலுண்ணோம் நாட்காலேநீராடி *
மையிட்டெழுதோம் மலரிட்டுநாம்முடியோம் *
செய்யாதனசெய்யோம் தீக்குறளைசென்றோதோம் *
ஐயமும்பிச்சையும் ஆந்தனையுங்கைகாட்டி *
உய்யுமாறெண்ணி உகந்தேலோரெம்பாவாய். (உ)

பந்துவராளிராகம்-திரிபுடைதாளம்.

† ஓங்கியுலகளந்த உத்தமன்பேர்பாடி *
நாங்கள்நம்பாவைக்குச் சாற்றிநீராடினால் *
தீங்கின்றிநாடெல்லாம் திங்கள்மும்மாரிபெய்து *
ஓங்குபெருஞ்செந்நெலூடு கயலுகள *
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப *
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க * குடம்நிறைக்கும் வள்ளல்பெரும்பசுக்கள் *
நீங்காதசெல்வம் நிறைந்தேலோரெம்பாவாய். (ங)

காம்போதிராகம்-ஆதிதாளம்.

ஆழிமழைக்கண்ணா! ஒன்றுநீகைகரவேல் *
ஆழியுள்புக்கு முகந்துகொடுஆர்த்தேறி *
ஊழிமுதல்வ னுருவம்போல்மெய்கறுத்து *
பாழியந்தோளுடைப் பற்பநாபன்கையில் *

ஆழிபோல்மின்னி வலம்புரிபோல்நின் றதிர்ந்து *
தாழாதேசார்ங்க முதைத்தசரமழைபோல் *
வாழவுலகினில்பெய் திடாய் * நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய். (ச)

தோடிராகம்-ரூபகதாளம்.

மாயனை மன்னுவடமதுரைமைந்தனை *
தூயபெருநீர் யமுனைத்துறைவனை *
ஆயர்குலத்தினில்தோன்றும் அணிவிளக்கை *
தாயைக்குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை *
தூயோமாய்வந்துநாம் தூமலர்தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால்சிந்திக்க *
போயபிழையும் புகுதருவான்நின் றனவும் *
தீயினில்தூசாகும் செப்பேலோரெம்பாவாய். (ரு)

பூபாளராகம்-ஆதிதாளம்.

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன்கோயிலில் *
வெள்ளைவிளிசங்கின் பேரரவம்கேட்டிலையோ *
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலைநஞ்சுண்டு *
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி *
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை *
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும்யோகிகளும் *
மெள்ளஎழுந்து அரியென்றபேரரவம் *
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (சு)

பூபாளராகம்-ரூபகதாளம்.

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் * கலந்து
பேசினபேச்சரவம் கேட்டிலையோபேய்ப்பெண்ணே! *
காசும்பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து *
வாசநறுங்குழலாய்ச்சியர் * மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம்கேட்டிலையோ *
நாயகப்பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும்நீ கேட்டேகிடத்தியோ *
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய். (எ)

பூபாளராகம்-அடதாளம்.

கீழ்வானம்வெள்ளென்று எருமைசிறுவீடு *
மேய்வான்பரந்தனகாண் மிக்குள்ளபிள்ளைகளும் *

போவான்போகின்றாரைப் போகாமல்காத்து * உன்னைக்
கூவுவான்வந்து நின்றோம் * கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு *
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய *
தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால் *
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய். (அ)

மோஹனராகம்-ஆதிதாளம்.

தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரிய *
† தூபம்கமழத் துயிலணைமேல்கண்வளரும் *
மாமான்மகளே! மணிக்கதவம்தாள் திறவாய் *
மாமீர்! அவளையெழுப்பீரோ? * உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ *
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ *
மாமாயன்மாதவன் வைகுந்தனென்றென்று *
நாமம்பலவும் நவின்றேலோரெம்பாவாய். (௯)

அசாவேரிராகம்-ஆதிதாளம்.

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்! *
மாற்றமும்தாராரோ வாசல்திறவாதார் *
நாற்றத்துழாய்முடி நாராயணன் * நம்மால்
போற்றப்பறைதரும்புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகரணனும் *
தோற்றும்உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ *
ஆற்றஅனந்த லுடையாய்! அருங்கலமே! *
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய். (௧௦)

ஸஹாநாராகம்-திரிபுடைதாளம்.

கற்றுக்கறவைக் கணங்கள்பலகறந்து *
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும் *
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே! *
புற்றரவல்குல் புனமயிலே! போதராய் *
சுற்றத்துத்தோழிமாரெல்லாரும்வந்து * நின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாட *
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டி! * நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய். (௧௧)

† 'தூமம்' என்பதும் பாடம்.

கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி *
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர *
நனைத்தில்லம்சேறுக்கும் நற்செல்வன்தங்காய்! *
பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றி *
சினத்தினால் தென்னிலங்கைக்கோமானைச்செற்ற *
மனத்துக்கினியானைப் பாடவும்நீவாய்திறவாய் *
இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்? *
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோரெம்பாவாய். (௧௨)

அடாணாராகம்-ரூபகதாளம்.

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாஅரக்கனை *
கிள்ளிக்கலைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய் *
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார் *
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று *
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்! *
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே *
பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீநன்னாளால் *
கள்ளம்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய். (௧௩)

ஸாரங்கராகம்-ஆதிதாளம்.

உங்கள்புழைக்கடைத் தோட்டத்துவாவியுள் *
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்கூம்பினகாண் *
செங்கல்பொடிக்கூறை வெண்பல்தவத்தவர் *
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான்போதந்தார் *
எங்களைமுன்னம் எழுப்புவான்வாய்பேசும் *
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய் *
சங்கொடுசக்கரம் ஏந்தும்தடக்கையன் *
பங்கயக்கண்ணானைப் பாடேலோரெம்பாவாய். (௧௪)

ஸௌராஷ்டிரராகம்-அடதாளம்.

எல்லே! இளங்கிளியே! இன்னமுறங்குதியோ? *
சில்லென் றழையேன்மின் நங்கைமீர்! போதருகின்றேன் † *
வல்லைஉன்கட்டுரைகள் பண்டேஉன்வாயறிதும் *
வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக *

---

† 'போதர்கின்றேன்' என்பதும் பாடம்.

ஒல்லைநீபோதாய் உனக்கென்னவேறுடைமை † *
எல்லாரும்போந்தாரோ போந்தார்போந்தெண்ணிக்கொள் *
வல்லானைகொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானை * மாயனைப் பாடேலோரெம்பாவாய். (கரு)

யமுனாகலியாணிராகம்-ஆதிதாளம்.

‡ நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே! * கொடித்தோன்றுந்தோரண
வாசல்காப்பானே! * மணிக்கதவம்தாள்திறவாய் *
ஆயர்சிறுமியரோமுக்கு * அறைபறை
மாயன்மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான் *
தூயோமாய்வந்தோம் துயிலெழப்பாடுவான் *
வாயால்முன்னம்முன்னம் மாற்றாதேஅம்மா! * நீ
நேசநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். (கசு)

யமுனாகலியாணிராகம்-ரூபகதாளம்.

அம்பரமேதண்ணீரே சோறேஅறஞ்செய்யும் *
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய் *
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தேகுலவிளக்கே! *
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய் *
அம்பரமூடறுத் தோங்கிஉலகளந்த *
உம்பர்கோமானே! உறங்காதுஎழுந்திராய் *
செம்பொற்கழலடிச் செல்வா! பலதேவா! *
உம்பியும்நீயும் உறங்கேலோரெம்பாவாய். (கஎ)

சாவேரிராகம்-ஆதிதாளம்.

‡ உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன் *
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்! *
கந்தம்கமழும்குழலீ! கடைதிறவாய் *
வந்தெங்கும்கோழி அழைத்தனகாண் * மாதவிப்
பந்தல்மேல் பல்கால்குயிலினங்கள்கூவினகாண் *
பந்தார்விரலி! உன்மைத்துனன்பேர்பாட *
செந்தாமரைக்கையால் சீரார்வளைஒலிப்ப *
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். (கஅ)

† 'உடைமை' என்பதும் பாடம்.

ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால்கட்டில்மேல் *
மெத்தென்ற பஞ்சசயனத்தின்மேலேறி *
கொத்தலர்பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல் *
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய் *
மைத்தடங்கண்ணினாய்! நீஉன்மணாளனை *
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண் *
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால் *
தத்துவமென்று தகவேலோரெம்பாவாய். (௧௯)

தேசியராகம்-ஆதிதாளம்.

முப்பத்துமூவர் அமரர்க்குமுன்சென்று *
கப்பம்தவிர்க்கும் கலியே! துயிலெழாய் *
செப்பமுடையாய்! திறலுடையாய்! * செற்றார்க்கு
வெப்பம்கொடுக்கும் விமலா! துயிலெழாய் *
செப்பன்னமென்முலை செவ்வாய் சிறுமருங்குல் *
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய் *
உக்கமும்தட்டொளியும் தந்துஉன்மணாளனை *
இப்போதேஎம்மை நீராட்டேலோரெம்பாவாய். (௨௦)

அபுரூபராகம்-ஆதிதாளம்.

ஏற்றகலங்கள் எதிர்பொங்கிமீதளிப்ப *
மாற்றாதேபால்சொரியும் வள்ளல்பெரும்பசுக்கள் *
ஆற்றப்படைத்தான்மகனே! அறிவுறாய் *
ஊற்றமுடையாய்! பெரியாய்! * உலகினில்
தோற்றமாய்நின்ற சுடரே! துயிலெழாய் *
மாற்றார்உனக்கு வலிதொலைந்துஉன்வாசற்கண் *
ஆற்றாதுவந்து உன்னடிபணியுமாபோலே *
போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய். (௨௧)

பைரவிராகம்-ஆதிதாளம்.

அங்கண்மாஞாலத்துஅரசர் * அபிமான
பங்கமாய்வந்து நின்பள்ளிக்கட்டில்கீழே *
சங்கமிருப்பார்போல் வந்துதலைப்பெய்தோம் *
கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே *

செங்கண் சிறுச்சிறிதே எம்மேல்விழியாவோ *
திங்களும்ஆதித்யனும் எழுந்தாற்போல் *
அங்கணிரண்டும்கொண்டு எங்கள்மேல்நோக்குதியேல் *
எங்கள்மேல்சாபம் இழிந்தேலோரெம்பாவாய். (௨௨)

அடாணாராகம்-ஆதிதாளம்.

‡ மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துஉறங்கும் *
சீரியசிங்கம் அறிவுற்றுத்தீவிழித்து *
வேரிமயிர்பொங்க எப்பாடும்பேர்ந்துதறி *
மூரிநிமிர்ந்து முழங்கிப்புறப்பட்டு *
† போதருமாபோலே நீபூவைப்பூவண்ணா! * உன்
கோயில்நின்றும் இங்ஙனேபோந்தருளி * கோப்புடைய
சீரியசிங்காசனத்துஇருந்து * யாம்வந்த
காரியம் ஆராய்ந்தருளேலோரெம்பாவாய். (௨௩)

பியாகடைராகம்-ஆதிதாளம்.

‡ அன்றுஇவ்வுலகம்அளந்தாய்! அடிபோற்றி *
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய்! திறல்போற்றி *
பொன்றச்சகடம்உதைத்தாய்! புகழ்போற்றி *
கன்றுகுணிலாஎறிந்தாய்! கழல்போற்றி *
குன்றுகுடையாஎடுத்தாய்! குணம்போற்றி *
வென்றுபகைகெடுக்கும் நின்கையில்வேல்போற்றி *
என்றென்றுஉன்சேவகமே ஏத்திப்பறைகொள்வான் *
இன்றுயாம்வந்தோம் இரங்கேலோரெம்பாவாய். (௨௪)

சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

ஒருத்திமகனாய்ப் பிறந்து * ஓரிரவில்
ஒருத்திமகனாய் ஒளித்துவளர *
தரிக்கிலானாகித் தான்தீங்குநினைந்த *
கருத்தைப்பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில் *
நெருப்பென்னநின்ற நெடுமாலே! * உன்னை
அருத்தித்துவந்தோம் பறைதருதியாகில் *
திருத்தக்கசெல்வமும் சேவகமும்யாம்பாடி *
வருத்தமும்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய். (௨௫)

---

† 'போருமாபோலே' என்பது எதுகைக்கு ஒத்தபாடம்.

ஆபரிராகம் - ஆதிதாளம்.

மாலே! மணிவண்ணா! மார்கழிநீராடுவான் *
மேலையார்செய்வனகள் வேண்டுவனகேட்டியேல் *
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன *
பாலன்னவண்ணத்து உன்பாஞ்சசன்னியமே *
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே *
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே *
கோலவிளக்கே கொடியேவிதானமே *
ஆலினிலையாய்! அருளேலோரெம்பாவாய். (உசு)

ஆனந்தபைரவிராகம் - ஆதிதாளம்.

⁂ கூடாரைவெல்லும்சீர்க் கோவிந்தா! * உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம் *
நாடுபுகழும்பரிசினால் நன்றாக *
சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே *
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம் *
ஆடையுடுப்போம் அதன்பின்னேபாற்சோறு
மூட * நெய்பெய்து முழங்கைவழிவார *
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (உஎ)

தன்யாசிராகம் - ஆதிதாளம்.

⁂ கறவைகள்பின்சென்று கானம்சேர்ந்துண்போம் *
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து * உன்தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம்யாமுடையோம் *
குறையொன்றும் † இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல்நமக்குஇங்கு ஒழிக்கஒழியாது *
அறியாதபிள்ளைகளோம் அன்பினால் * உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே *
இறைவா! நீதாராய் பறையேலோரெம்பாவாய். (உஅ)

சாற்றுப்பாட்டுகள்.

கல்யாணிராகம் - ஆதிதாளம்.

⁂ சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து * உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய் *

---

† 'இல்லாக்கோவிந்தா' என்னும் பாடம் தளைக்குச் சேரும்.

பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில்பிறந்து * நீ
குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது *
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா! *
எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் * உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம் *
மற்றைநம் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். (உகூ)

சுருட்டிராகம்-ரூபகதாளம்.

‡ வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை *
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி *
அங்கப்பறைகொண்ட ஆற்றை * அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான்கோதைசொன்ன *
சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே *
இங்குஇப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள் *
செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் *
எங்கும்திருவருள்பெற்று இன்புறுவரெம்பாவாய். (௩௦)

அடிவரவு:—மார்கழி வையம் ஓங்கி ஆழி மாயன் புள்ளும் கீசு கீழ்வானம் தூமணி நோற்று கற்று கனைத்து புள்ளின் உங்கள் எல்லே நாயகன் அம்பரம் உந்து குத்து முப்பத்து ஏற்ற அங்கண் மாரி அன்று ஒருத்தி மாலே கூடாரை கறவைகள் சிற்றம் வங்கம் தை.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

திருமஞ்சந காலத்தில் அநுஸந்திப்பது.

நீராட்டம்.

பெரியாழ்வார் திருமொழி உ-ஆம் பத்து, ச-ஆம்-திருமொழி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பிலஹரிராகம்-சம்பைதாளம்.

‡ வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியும்கொண்டு *
திண்ணென இவ்விரா உன்னைத் தேய்த்துக்கிடக்கநானொட்டேன் *
எண்ணெய்ப்புளிப்பழங்கொண்டு இங்கெத்தனைபோதும்இருந்தேன் *
நண்ணலரியபிரானே! நாரணா! நீராடவாராய். (க)

கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால் *
தென்றிக்கெடுமாகில் வெண்ணெய்திரட்டிவிழுங்குமா காண்பன் *
நின்றமராமரம்சாய்த்தாய்! நீபிறந்த திருவோணம் *
இன்று, நீராடவேண்டும் எம்பிரான்! ஓடாதேவாராய். (உ)

பேச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாதுஎன்னெஞ்சம் *
ஆய்ச்சியரெல்லாருங்கூடி அழைக்கவும்நான்முலைதந்தேன் *
காய்ச்சினநீரொடுநெல்லி கடாரத்தில்பூரித்துவைத்தேன் *
வாய்த்தபுகழ்மணிவண்ணா! மஞ்சனமாடநீவாராய். (௩)

கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து *
வஞ்சகப்பேய்மகள்துஞ்ச வாய்முலைவைத்தபிரானே! *
மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறுசாந்தும் *
அஞ்சனமும்கொண்டுவைத்தேன் அழகனே! நீராடவாராய். (௪)

அப்பம்கலந்தசிற்றுண்டி அக்காரம்பாலில்கலந்து *
சொப்படநான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பி! *
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர் *
சொப்படநீராடவேண்டும் சோத்தம்பிரான்! இங்கேவாராய். (௫)

எண்ணெய்க்குடத்தையுருட்டி இளம்பிள்ளைகிள்ளியெழுப்பி *
கண்ணைப்புரட்டிவிழித்துக் கழகண்டுசெய்யும்பிரானே! *
உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே *
வண்ணம்அழகியநம்பீ! மஞ்சனமாடநீவாராய். (௬)

கறந்தநல்பாலும்தயிரும் கடைந்துஉறிமேல்வைத்தவெண்ணெய் *
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேன்எம்பிரானே! *
சிறந்தநற்றாய் அலர்தூற்றும் என்பதனால்பிறர்முன்னே *
மறந்தும்உரையாடமாட்டேன் மஞ்சனமாடநீவாராய். (௭)

கன்றினைவாலோலைகட்டிக் கனிகளுதிரவெறிந்து [லும் *
பின்தொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய்போ
நின்திறத்தேனல்லேன்நம்பீ! நீபிறந்ததிருநன்னாள் *
நன்றுநீநீராடவேண்டும் நாரணா! ஓடாதேவாராய். (௮)

பூணித்தொழுவினில்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி *
காணப்பெரிதும்உகப்பன் ஆகிலும்கண்டார்பழிப்பர் *
நாணித்தனையுமிலாதாய்! நப்பின்னைகாணிற்சிரிக்கும் *
மாணிக்கமே! என்மணியே! மஞ்சனமாடநீவாராய். (௯)

‡ கார்மலிமேனிநிறத்துக் கண்ணபிரானையுகந்து *
வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை *
பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதும்இலரே. (௧௦)

அடிவரவு:—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமஞ்சநகாலத்தில் சேர்ந்து அநுஸந்திக்கும் பாசுரங்கள்.

திருக்குறுந்தாண்டகம்.

முன்பொலா இராவணன் தன் முதுமதிளிலங்கைவேவித்து *
அன்பினால்அநுமன்வந்து ஆங்கடியிணைபணியநின்றற்கு *
என்பெலாம்உருகியுக்கிட்டு என்னுடையநெஞ்சமென்னும் *
அன்பினால்ஞானநீர்கொண்டு ஆட்டுவன் அடியனேனே. (கரு)

மாயமான்மாயச்செற்று மருதிறநடந்து * வையம்
தாயமாபரவைபொங்கத் தடவரை திரித்து * வானோர்க்கு
ஈயுமாலெம்பிரானார்க்கு என்னுடையச்சொற்களென்னும் *
தூயமாமாலைகொண்டு சூட்டுவன்தொண்டனேனே. (கசு)

திருவிருத்தம்.

சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி * விண்ணோர்கள்நன்னீ
ராட்டி அந்தூபம்தராநிற்கவே அங்கு * ஓர்மாயையினால்
ஈட்டியவெண்ணெய்தொடுவுண்ணப்போந்து இமிலேற்றுவன்கூன்
கோட்டிடையாடினைகூத்து * அடலாயர்தம்கொம்பினுக்கே. (உக)

பெரியாழ்வார் திருமொழி ௩-ஆம்-பத்து, ௩-ஆம்-திருமொழி.

காடுகளூடுபோய்க்கன்றுகள்மேய்த்து மறியோடி * கார்க்கோடல்பூச்
சூடிவருகின்றதாமோதரா! கற்றுத்தூளிகாண்உன்னுடம்பு *
பேடைமயிற்சாயல்பின்னைமணாளா! நீராட்டமைத்துவைத்தேன் *
ஆடிஅமுதுசெய்அப்பனுமுண்டிலன் உன்னோடுஉடனேயுண்பான். ()

நின்ஊர்வெண்சங்குடையாய்! திருநாள்திருவோணமின்றேழுநாள் * முன்
பண்ணேர்மொழியாரைக்கூவி முளையட்டிப் பல்லாண்டுகூறுவித்தேன் *
கண்ணாலம்செய்யக்கறியும் கலத்ததரிசியுமாக்கிவைத்தேன் *
கண்ணா! நீநாளைத்தொட்டுக்கன்றின்பின்போகேல்கோலம்செய்துஇங்கேயிரு.

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்.

அந்திவேளையில் திருமாலைசாத்தும்போது அநுஸந்திப்பது.

பூச்சூட்டல்.

பெரியாழ்வார் திருமொழி உ-ஆம்-பத்து, எ-ஆம்-திருமொழி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடாணாராகம்-ரூபகதாளம்.

‡ ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாம்திரிந்து உன்கரியதிருமேனிவாட *
பானையில்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம்சிரிப்ப *
தேனிலினியபிரானே! செண்பகப்பூச்சூட்டவாராய். (க)

கருவுடைமேகங்கள்கண்டால்உன்னைக் கண்டாலொக்கும்கண்கள் *
உருவுடையாய்! உலகேழும் உண்டாகவந்துபிறந்தாய்! *
திருவுடையாள்மணவாளா! திருவரங்கத்தேகிடந்தாய்! *
மருவிமணம்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (உ)

மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு *
கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி *
நிச்சலும்தீமைகள்செய்வாய்! நீள்திருவேங்கடத்தெந்தாய்! *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (ங)

தெருவின்கண்நின்று இளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே *
மருவும்தமனகமும்சீர் மாலைமணம்கமழ்கின்ற *
புருவம்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே *
உருவமழகியநம்பி! உகந்துஇவைசூட்டநீவாராய். (ச)

புள்ளினைவாய்பிளந்திட்டாய்! பொருகரியின்கொம்பொசித்தாய்! *
கள்ள அரக்கியைமூக்கோடு காவலனைத்தலைகொண்டாய்! *
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதுஅடியேன்அடித்தேன் *
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (ரு)

எருதுகளோடுபொருதி ஏதும்உலோபாய்காண்நம்பீ! *
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் *
தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு *
பொருதுவருகின்றபொன்னே! புன்னைப்பூச்சூட்டவாராய். (சு)

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லஎங்கோவே! *
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லஎன்மைந்தா! *
இடந்திட்டுஇரணியன்நெஞ்சை இருபிளவாகமுன்கீண்டாய்! *
குடந்தைக்கிடந்தஎங்கோவே! குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (எ)

சீமாலிகனவனோடு தோழமைகொள்ளவும்வல்லாய் *
சாமாறுஅவனைநீஎண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய் *
ஆமாறுஅறியும்பிரானே! அணியரங்கத்தேகிடந்தாய்! *
ஏமாற்றம்என்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (அ)

அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய்! *
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய்! தூமலராள்மணவாளா! *
உண்டிட்டுஉலகினையேழும் ஓராலிலையில்துயில்கொண்டாய்! *
கண்டுநான்உன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (கூ)

‡ செண்பகமல்லிகையோடு செங்கழுநீர்இருவாட்சி *
எண்பகர்பூவும்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று *
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துஉரைசெய்தஇம்மாலை *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (க0)

அடிவரவு:—ஆநிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சீமாலிகன் அண்டம் செண்பகம் இந்திரன்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருவமுதிற்குத் தோஷம்வாராதபடி திருவந்திக்காப்பிடுதல்.

காப்பிடல்.

பெரியாழ்வார் திருமொழி உ-ஆம்-பத்து, அ-ஆம்-திருமொழி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தோடிராகம்-ரூபகதாளம்.

‡ இந்திரனோடுபிரமன் ஈசன் இமையவரெல்லாம் *
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார் *
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய் ! *
அந்தியம்போதிதுவாகும் அழகனே ! காப்பிடவாராய். (க)

கன்றுகள் இல்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம் *
நின்றொழிந்தேன் உன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய் ! *
மன்றில்நில்லேல்அந்திப்போது மதிள் திருவெள்ளறைநின்றாய் ! *
நன்றுகண்டாய்என்தன்சொல்லு நான்உன்னைக்காப்பிடவாராய். (உ)

செப்போதுமென்முலையார்கள் சிறுசோறும்இல்லும்சிதைத்திட்டு *
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலைஆள்வாய் ! *
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்றாய் ! *
இப்போதுநான்ஒன்றும்செய்யேன் எம்பிரான் ! காப்பிடவாராய். (௩)

கண்ணில்மணல்கொடுதூவிக் காலினால்பாய்ந்தனையென்றென்று *
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டு இவரால்முறைப்படுகின்றார் *
கண்ணனே ! வெள்ளறைநின்றாய் ! கண்டாரோடே†தீமைசெய்வாய் *
வண்ணமேவேலையதொப்பாய் ! வள்ளலே ! காப்பிடவாராய். (ச)

பல்லாயிரவர் இவ்வூரில்பிள்ளைகள் தீமைகள்செய்வார் *
எல்லாம்உன்மேலன்றிப்போகாது எம்பிரான் ! நீஇங்கேவாராய் *
நல்லார்கள்வெள்ளறைநின்றாய் ! ஞானச்சுடரே ! உன்மேனி *
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய். (௫)

கஞ்சன்கறுக்கொண்டுநின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை ! *
வஞ்சிப்பதற்குவிடுத்தான் என்பதோர்வார்த்தையும்உண்டு *
மஞ்சுதவழ்மணிமாட மதில்திருவெள்ளறைநின்றாய் !
அஞ்சுவன்நீஅங்குநிற்க அழகனே! காப்பிடவாராய். (சு)

கள்ளச்சகடும்மருதும் கலக்கழியஉதைசெய்த *
பிள்ளையரசே ! நீ பேயைப்பிடித்துமுலையுண்டபின்னை *
உள்ளவாறொன்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய் ! *
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனே ! காப்பிடவாராய். (எ)

---

† 'தீமைகள்' என்பதும் பாடம்.

இன்பமதனையுயர்த்தாய்! இமையவர்க்கென்றுமரியாய்! *
கும்பக்களிறட்டகோவே! கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே! *
செம்பொன்மதிள்வெள்ளறையாய்! செல்வத்தினால்வளர்பிள்ளாய்! *
கம்பக்கபாலிகாண்அங்குக் கடிதோடிக்காப்பிடவாராய். (அ)

இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார் *
தருக்கேலம்நம்பி! சந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள் *
திருக்காப்புநான்உன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய்! *
உருக்காட்டும்அந்திவிளக்கு இன்றுஒளிகொள்ளஏற்றுகேன்வாராய்.()

✠ போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை *
மாதர்க்குயர்ந்தஅசோதை மகன்தன்னைக்காப்பிட்டமாற்றம் *
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை *
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (௧௦)

அடிவரவு:—இந்திரன் கன்று செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பம் இருக்கொடு போதமர் வெண்ணெய்விழுங்கி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

மண்ணோர்விண்ணோர்தொழும் திருவேங்கடத்தானிடத்தில்

சேஷத்வமாக அநுஸந்திக்குமது.

சென்னியோங்கு.

பெரியாழ்வார் திருமொழி ரு-ஆம்-பத்து, ச-ஆம்-திருமொழி.

கலிவிருத்தம்.

ஸ்ரீராகம்-திரிபுடைதாளம்.

✠ சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்! * உலகு
தன்னைவாழநின்ற நம்பீ! தாமோதரா! சதிராக *
என்னையும் என்னுடைமையையும் உன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு *
நின்னருளேபுரிந்திருந்தேன் இனிஎன்திருக்குறிப்பே. (௧)

பறவையேறுபரம்புருடா! நீஎன்னைக்கைக்கொண்டபின்
பிறவியென்னும்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால்
இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால் *
அறிவையென்னும்அமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே. (௨)

எம்மனா! என்குலதெய்வமே! என்னுடையநாயகனே!
நின்னுள்ளேனாய்ப்பெற்றநன்மை இவ்வுலகினில்ஆர்பெறுவார் *
நம்மன்போலேவீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ளபாவமெல்லாம் *
சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (௩)

கடல்கடைந்து அமுதம்கொண்டு கலசத்தைநிறைத்தாற்போல் *
உடலுருகிவாய்திறந்து மடுத்துஉன்னைநிறைத்துக்கொண்டேன் *
கொடுமைசெய்யும்கூற்றமும் என்கோலாடிகுறுகப்பெறா *
தடவரைத்தோள்சக்கரபாணீ! சார்ங்கவில்சேவகனே! (௪)

பொன்னைக்கொண்டுஉரைகல்மீதேநிறமெழஉரைத்தாற்போல் *[ன் *
உன்னைக்கொண்டுஎன்நாவகம்பால் மாற்றின்றிஉரைத்துக்கொண்டே
உன்னைக்கொண்டுஎன்னுள்வைத்தேன் என்னையும்உன்னிலிட்டேன் *
என்னப்பா! என்னிருடீகேசா! என்னுயிர்க்காவலனே! (௫)

உன்னுடையவிக்கிரமம் ஒன்றொழியாமல்எல்லாம் *
என்னுடையநெஞ்சகம்பால் சுவர்வழிஎழுதிக்கொண்டேன் *
மன்னடங்கமழுவலங்கைக்கொண்டஇராமநம்பீ! *
என்னிடைவந்துஎம்பெருமான்! இனியெங்குப்போகின்றதே? (௬)

பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர்குலபதிபோல் *
திருப்பொலிந்தசேவடி என்சென்னியின்மேல்பொறித்தாய் *
மருப்பொசித்தாய்! மல்லடர்த்தாய்! என்றென்றுஉன்வாசகமே *
உருப்பொலிந்தநாவினேனை உனக்குஉரித்தாக்கினையே. (௭)

அனந்தன்பாலும்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து * என்
மனந்தனுள்ளேவந்துவைகி வாழச்செய்தாய்எம்பிரான்! *
நினைந்தென்னுள்ளேநின்றுநெக்குக் கண்களசும்பொழுக *
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே! (௮)


† பனிக்கடலில்பள்ளிகோளைப் பழகவிட்டு * ஓடிவந்துஎன்
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பீ! *
தனிக்கடலேதனிச்சுடரே தனியுலகேஎன்றென்று *
உனக்கிடமாயிருக்க என்னை உனக்குஉரித்தாக்கினையே. (௯)

† தடவரைவாய்மிளிர்ந்துமின்னும் தவளநெடுங்கொடிப்போல் *
சுடரொளியாய்நெஞ்சினுள்ளே தோன்றும்என்சோதிநம்பி! *
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவாரபதியும் *
இடவகைகளிகழ்ந்திட்டு என்பால்இடவகைகொண்டனையே. (௧௦)

† வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை *
ஆயரேற்றைஅமரர்கோவை அந்தணர்தமமுதத்தினை *
சாயைப்போலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (௧௧)

அடிவரவு:—சென்னி பறவை எம்மனா கடல் பொன் உன் பருப்பு அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.



திருப்பாணாழ்வார்.

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனாதிபிரான்

திருமேனிஸௌந்தர்ய தர்ஸநாந்தரப்பேறுதருமது.

வேதஸாரமாகும்

தனியன்கள்.

(பெரியநம்பிகள் அருளிச்செய்தது.)

ஆபாதசூடமநுபூய ஹரிம் ஶயாநம்
மத்யே கவேர்துஹிதுர் முதிதாந்தராத்மா ।
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ॥

ஆபாதசூடமநுபூய ஹரிம்ஶயாநம்
மத்யேகவேரதுஹி தூர்முதிதாந்தராத்மா
அத்ரேஷ்ட்ருதாம்நயநயோர் விஷயாந்தராணும்
யோநிஸ்சிகாயமநவை முநிவாஹநந்தம்.

(திருமலைநம்பிகள் அருளிச்செய்தது.)

கலிநிலைத்துறை.

காட்டவேகண்டபாதகமலம் நல்லாடைஉந்தி *
தேட்டருமுதரபந்தம் திருமார்வுகண்டம்செவ்வாய் *
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து *
பாட்டினால்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

ஆசிரியத்துறை.

யமுநாகல்யாணிராகம்-திரிபுடைதாளம்.

‡ அமலனாதிபிரான் அடியார்க்குஎன்னை ஆட்படுத்த
விமலன் * விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன் *
நிமலன்நின்மலன்நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் * திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளனஒக்கின்றதே. (௧)

உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்துஅண்டமுற *
நிவந்தநீள்முடியன் அன்றுநேர்ந்தநிசாசரரைச் *
கவர்ந்தவெங்கணைக்காகுத்தன் கடியார்பொழி லரங்கத்தம்மான் * அ
சிவந்தஆடையின்மேல் சென்றதாம்என்சிந்தனையே. (௨)

‡ மந்திபாய் வடவேங்கடமாமலை * வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான் *
அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. (௩)

சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி * ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன் *
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் * திருவயிற்று
உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே. (௪)

பாரமாய பழவினைபற்றறுத்து * என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி என்னுள்புகுந்தான் *
கோரமாதவம்செய்தனன்கொல்அறியேன் அரங்கத்தம்மான் * திரு
வாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே. (௫)

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் * அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேயஅப்பன் *
அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலம்எழுமால்வரை * முற்றும்
உண்டகண்டம்கண்டீர் அடியேனையுய்யக்கொண்டதே. (௬)

கையினார்சுரிசங்கனலாழியர் * நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீள்முடிஎம்
ஐயனார் * அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார் *
செய்யவாய்ஐயோ! என்னைச்சிந்தைகவர்ந்ததுவே. (௭)

பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட * அமரர்க்கு
அரியஆதிப்பிரான் அரங்கத்தமலன்முகத்து *
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி * நீண்டஅப்
பெரியவாயகண்கள் என்னைப்பேதைமைசெய்தனவே. (௮)

‡ ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனாய் *
ஞாலமேழும்உண்டான் அரங்கத்தரவினணையான் *
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில் *
நீலமேனிஐயோ! நிறைகொண்டது என்நெஞ்சினையே. (௯)

‡ கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன் * என்னுள்ளம் கவர்ந்தானை *
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் * மற்றொன்றினைக் காணாவே. (௧௦)

அடிவரவு:—அமலன் உவந்த மந்தி சதுரம் பாரம் துண்டம் கை பரி ஆலம் கொண்டல் கண்ணி.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

மாயவன் தன்னை மணஞ்செய்யக்கண்ட தூயநற்கனவைத்
தோழிக்கு உரைத்தல்.

ஆண்டாள் அருளிச்செய்த

(நாச்சியார் திருமொழி, ௬-ஆம்-திருமொழி.)

வாரணமாயிரம்

தனியன்கள்.

திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச்செய்தவை.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

அல்லிநாள் தாமரைமே லாரணங்கின் இன்துணைவி *
மல்லிநாடாண்ட மடமயில்—மெல்லியலாள் *
ஆயர் குலவேந்த னாகத்தாள் * தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

கட்டளைக்கலித்துறை.

† கோலச் சுரிசங்கை மாயன்செவ் வாயின் குணம்வினவும்
சீலத்தனள் * தென் திருமல்லி நாடி * செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக்கிளி * அவள் தூயநற் பாதம் துணைநமக்கே.

கலிவிருத்தம்.

கல்யாணிராகம்-ரூபகதாளம்.

‡ வாரண மாயிரம் சூழ வலஞ்செய்து *
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர் *
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும் *
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (௧)

நாளை வதுவை மணமென்று நாளிட்டு *
பாளை கமுகு பரிசுடைப் பந்தல்கீழ் *
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர் *
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். (௨)

இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம் *
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து *
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை *
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (௩)

---

† இத்தனியன் இந்த ப்ராந்தங்களில் அநுஸந்திப்பதில்லை.

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி *
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி *
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்தன்னை *
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௪)

கதிரொளி தீபம் கலசமுட னேந்தி *
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள *
மதுரையார் மன்னன் அடிநிலைதொட்டு * எங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௫)

மத்தளம் கொட்ட வரிசங்கம்நின் றூத *
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தல்கீழ் *
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து * என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௬)

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால் *
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து *
காய்சினமாகளி றன்னான்என் கைப்பற்றி *
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௭)

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் *
நம்மை யுடையவன் நாராயணன்நம்பி *
செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி *
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௮)

வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம்வந்திட்டு *
எரிமுகம் பாரித்து என்னைமுன் னேநிறுத்தி *
அரிமுகன் அச்சுதன் கைம்மேல்என் கைவைத்து *
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௯)

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து *
மங்கலவீதி வலம்செய்து மணநீர் *
அங்கு அவனோடும் உடன்சென்று அங்கு ஆனைமேல் *
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீ ! நான். (௧௦)

‡ ஆயனுக் காகத் தான்கண்ட கனாவினை *
வேயர் புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல் *
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர் *
வாயும்நன் மக்களைப் பெற்று மகிழ்வரே. (௧௧)

அடிவரவு:—வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய்நல்லார் இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.



மதுரகவியாழ்வார்.

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

கண்ணிநுண்சிறுத்தாம்பு

(நாதனுக்கு நாலாயிரமுரைக்கைக்கு மூலமந்திரமானது.)

தனியன்கள்.

(நாதமுனிகள் அருளிச்செய்தவை.)

𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌶𑌠𑌾𑌰𑍇
𑌰𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌮𑍁𑌪𑌗𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃 ।
𑌅𑌪𑌿𑌚𑌗𑍁𑌣𑌵𑌶𑌾𑌤𑍍𑌤𑌦𑍇𑌕𑌶𑍇𑌷𑍀
𑌮𑌧𑍁𑌰𑌕𑌵𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇𑌮𑌮𑌾𑌵𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 ।

அவிதிதவிஷயாந்தரஸ்ஸடாரே ருபநிஷதாமுபகாநமாத்ரபோக:
அபிசகுணவஸாத்ததேகஸேஷீ மதுரகவிர்ஹ்ருதயேமமாவிரஸ்து.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
மாறன்சடகோபன் வண்குருகூர் - ஏறு * எங்கள்
வாழ்வாமென் றேத்தும் மதுரகவியார் * எம்மை
ஆள்வா ரவரே § அரண்.

கலிவிருத்தம்.

ஆரபிராகம்-ஆதிதாளம்.

கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் * என்னப்பனில் *
நண்ணித்தென்குருகூர் நம்பிஎன்றக்கால் *
அண்ணிக்கும்அமுதூறும் என்நாவுக்கே. (௧)

நாவினால்நவிற்று இன்பமெய்தினேன் *
மேவினேன் அவன்பொன்னடிமெய்ம்மையே *
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி *
பாவினின்னிசை பாடித்திரிவனே. (௨)

திரிதந்தாகிலும் தேவபிரானுடை *
கரியகோலத் திருவுருக்காண்பன்நான் *
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்குஆள்
உரியனாய் * அடியேன்பெற்றநன்மையே. (௩)

---

§ 'சரண்' என்று பாடாந்தரம்; அரண்-சரண்-ரக்ஷை.

நன்மையால்மிக்க நான்மறையாளர்கள் *
புன்மையாகக் கருதுவராதலில் *
அன்னையாய்அத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையான் * சடகோபன்என்நம்பியே. (௪)

நம்பினேன் பிறர்நன்பொருள்தன்னையும் *
நம்பினேன் மடவாரையும்முன்னெலாம் *
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு
அன்பனாய் * அடியேன் சதிர்த்தேன் இன்றே. (௫)

இன்றுதொட்டும் எழுமையும்எம்பிரான் *
நின்றுதன்புகழ் ஏத்தஅருளினான் *
குன்றமாடத் திருக்குருகூர்நம்பி *
என்றும்என்னை இகழ்விலன் காண்மினே. (௬)

கண்டுகொண்டுஎன்னைக் காரிமாறப்பிரான் *
பண்டைவல்வினை பாற்றியருளினான் *
எண்திசையும் அறிய இயம்புகேன் *
ஒண்தமிழ்ச் சடகோபனருளையே. (௭)

அருள்கொண்டாடும் அடியவர்இன்புற *
அருளினான் அவ்வருமறையின்பொருள் *
அருள்கொண்டு ஆயிரம்இன்தமிழ்பாடினான் *
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. (௮)

மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் *
நிற்கப்பாடி என்நெஞ்சுள்நிறுத்தினான் *
தக்கசீர்ச் சடகோபன்என்நம்பிக்கு * ஆள்
புக்ககாதல் அடிமைப்பயனன்றே. (௯)

‡ பயனன்றாகிலும் பாங்கலராகிலும் *
செயல்நன்றாகத் திருத்திப் பணிகொள்வான் *
குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி! *
முயல்கின்றேன் உன்தன்மொய்கழற்கன்பையே. (௧௦)

‡ அன்பன்தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் * தென்குருகூர் நகர்நம்பிக்கு *
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதி * வைகுந்தம்காண்மினே. (௧௧)

அடிவரவு:—கண்ணி நாவினால் திரி நன்மை நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்க பயன் அன்பன் வாடி.

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.



நம்மாழ்வார்.

ஸ்ரீய:பதியின் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவி என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து உரைத்தல்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

கோயில் திருவாய்மொழி

தனியன்கள்.

(நாதமுனிகள் அருளிச்செய்தது.)

பக்தாம்ருதம்விஸ்வஜநாநுமோதநம்·ஸர்வார்த்ததம்ஸ்ரீசடகோபவாங்மயம்
ஸஹஸ்ரஸாகோபநிஷத்ஸமாகமம்·நமாம்யஹம்த்ராவிடவேதஸாகரம்.

(ஈசுவரமுனிகள் அருளிச்செய்தது.)

இருவிகற்ப நேரிசைவெண்பா.

திருவழுதி நாடென்றும் தென்குருகூ ரென்றும் *
மருவினிய வண்பொருந லென்றும் *—அருமறைக
ளந்தாதி செய்தா னடியிணையே எப்பொழுதும் *
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து.

சொட்டைநம்பிகள் அருளிச்செய்தது.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும் *
இனத்தாரை யல்லா திறைஞ்சேன் *—தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன் *
பாதங்கள் யாமுடைய பற்று.

(அனந்தாழ்வான் அருளிச்செய்தது.)

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுசமுனிதன் *
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் *—ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும் *
பேராத வுள்ளம் பெற.

(பட்டர் அருளிச்செய்தவை.)

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் *
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும் *—ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த *
இதத்தாய் இராமாநுசன்.

மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும் *
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும் *
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் *
யாழினிசை வேதத் தியல்.

திருவாய்மொழி, முதற்பத்து, முதல்திருவாய்மொழி.

கலிவிருத்தம்.

கமாஸ்ராகம்-ஆதிதாளம்.

✠ உயர்வறவுயர்நலம் உடையவன்எவனவன் *
மயர்வறமதிநலம் அருளினன்எவனவன் *
அயர்வறுமமரர்கள் அதிபதிஎவனவன் *
துயரறுசுடரடி தொழுதெழுஎன்மனனே ! (௧)

மனனகமலமற மலர்மிசையெழுதரும் *
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன் *
இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும் *
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. (௨)

இலனதுவுடையனிதெனநினைவரியவன் *
நிலனிடைவிசும்பிடை உருவினன்அருவினன் *
புலனொடுபுலனலன் ஒழிவிலன்பரந்த * அந்
நலனுடையொருவனை நணுகினம்நாமே. (௩)

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள் *
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது *
வீமவையிவையுவை அவைநலம்தீங்கவை *
ஆமவையாயவை யாய்நின்றஅவரே. (௪)

அவரவர்தமதமது அறிவறிவகைவகை *
அவரவரிறையவர் எனவடியடைவர்கள் *
அவரவரிறையவர் குறைவிலர்இறையவர் *
அவரவர்விதிவழி அடையநின்றனரே. (௫)

நின்றனர்இருந்தனர் கிடந்தனர்திரிந்தனர் *
நின்றிலர்இருந்திலர் கிடந்திலர்திரிந்திலர் *
என்றுமோரியல்வினர் எனநினைவரியவர் *
என்றுமோரியல்வொடு நின்றவெந்திடரே. (௬)

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதொறும் *
உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன் *
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. (௭)

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும் *
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன் *
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து *
அரனயனென உலகழித்தமைத்துளனே. (௮)

உளனெனிலுளன் அவனுருவம்இவ்வுருவுகள் *
உளனலனெனில் அவனருவம்இவ்வருவுகள் *
உளனெனஇலனென இவைகுணமுடைமையில் *
உளனிருதகைமையொடு ஒழிவிலன்பரந்தே. (௯)

பரந்ததண்பரவையுள் நீர்தோறும் பரந்துளன் *
பரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவற *
கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ்பொருள்தொறும் *
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே. (௧௦)
✠ கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
வரனவில்திறல்வலி அளிபொறையாய்நின்ற *
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொல் *
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

இதரவிஷயங்களைவிட்டு பகவத்பக்தியைப்பண்ணி ஸ்ரீய:பதியை உஜ்ஜீவியுங்கோள் என்று பரரைக்குறித்து உபதேசிக்கிறார்.

திருவாய்மொழி, முதற்பத்து, ௨-ஆம் திருவாய்மொழி.

வஞ்சித்துறை.

செஞ்சுருட்டிராகம் - அடதாளம்.

✠ வீடுமின்முற்றவும் *
வீடுசெய்து * உம்முயிர்
வீடுடையானிடை *
வீடுசெய்ம்மினே. (௧)
மின்னின்நிலையில *
மன்னுயிராக்கைகள் *
என்னுமிடத்து * இறை
உன்னுமின்நீரே. (௨)
நீர்நுமதென்றிவை *
வேர்முதல்மாய்த்து * இறை
சேர்மின் * உயிர்க்கு அதன்
நேர்நிறையில்லே. (௩)
இல்லதும்உள்ளதும் *
அல்லதுஅவனுரு *
எல்லையில்அந்நலம் *
புல்குபற்றற்றே. (௪)
அற்றதுபற்றெனில் *
உற்றதுவீடுஉயிர் *
செற்றதுமன்னுறில் *
அற்றிறைபற்றே. (௫)
பற்றிலன்ஈசனும் *
முற்றவும்நின்றனன் *
பற்றிலையாய் * அவன்
முற்றிலடங்கே. (௬)
அடங்கெழில்சம்பத்து *
அடங்கக்கண்டு * ஈசன்
அடங்கெழிலஃதென்று *
உடங்குகஉள்ளே. (௭)
உள்ளமுரைசெயல் *
உள்ளஇம்மூன்றையும் *
உள்ளிக்கெடுத்து * இறை
உள்ளிலொடுங்கே. (௮)
ஒடுங்கஅவன்கண் *
ஒடுங்கலுமெல்லாம் *
விடும்பின்னும்ஆக்கை *
விடும்பொழுதெண்ணே. (௯)
✠ எண்பெருக்கந்நலத்து *
ஒண்பொருளீறில *
வண்புகழ்நாரணன் *
திண்கழல்சேரே. (௧௦)
✠ சேர்த்தடத் * தென்குரு
கூர்ச்சடகோபன்சொல் *
சீர்த்தொடையாயிரத்து *
ஓர்த்தஇப்பத்தே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

இளமை கெடுவதன்முன்னம் திருமாலிருஞ் சோலைமலையைச் சேர்ந்து உய்யும்படி உபதேசிக்கிறார்.

திருவாய்மொழி, உ-ஆம் பத்து, கo-ஆம்-திருவாய்மொழி.

கலிவிருத்தம்.

கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

✠ கிளரொளியிளமை கெடுவதன்முன்னம் *
வளரொளிமாயோன் மருவியகோயில் *
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை *
தளர்விலராகில் சார்வதுசதிரே. (க)

சதிரிளமடவார் தாழ்ச்சியை மதியாது *
அதிர்குரல்சங்கத்து அழகர்தம்கோயில் *
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை *
பதியதுவேத்தி எழுவதுபயனே. (உ)

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே! *
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில் *
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை *
அயல்மலையடைவது அதுகருமமே. (ங)

கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே *
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில் *
வருமழைதவழும் மாலிருஞ்சோலை *
திருமலையதுவே அடைவதுதிறமே. (ச)

திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது *
அறமுயலாழிப் படையவன்கோயில் *
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை *
புறமலைசாரப் போவதுகிறியே. (ரு)

கிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே *
உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில் *
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை *
நெறிபடஅதுவே நினைவதுநலமே. (சு)

நலமெனநினைமின் நரகழுந்தாதே *
நிலமுனம்இடந்தான் நீடுறைகோயில் *
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை *
வலமுறையெய்தி மருவுதல்வலமே. (எ)

வலம்செய்துவைகல் வலம்கழியாதே *
வலம்செய்யும் ஆயமாயவன்கோயில் *
வலம்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை *
வலம்செய்துநாளும் மருவுதல்வழக்கே. (அ)

வழக்கென நினைமின் வல்வினைமூழ்காது *
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில் *
மழக்களிற்றினம்சேர் மாலிருஞ்சோலை *
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (௯)
சூதென்று களவும் சூதும்செய்யாதே *
வேதம்முன்விரித்தான் விரும்பியகோயில் *
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை *
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (௧௦)
‡ பொருளென்று இவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல் *
மருளில்வண்குருகூர் வண்சடகோபன் *
தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து *
அருளுடையவன்தாள் அணைவிக்கும்முடித்தே. (௧௧)
நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

தெற்குத்திருமலையில் தாமநுபவிக்கக்கோலி, பெறாதுசோகிக்கிற ஆழ்வார்க்கு ஈஸ்வரன் வடக்குத்திருமலையைக்காட்டக் கண்டு நிலைபெறுகிறார்.

திருவாய்மொழி, ௩-ஆம் பத்து, ௩-ஆம் திருவாய்மொழி.

கலிவிருத்தம்.

ஸௌராஷ்ட்ரராகம்-அடதாளம்.

‡ ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி *
வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம் *
தெழிகுரலருவித் திருவேங்கடத்து *
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. (௧)
எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
முந்தை * வானவர்வானவர்கோனொடும் *
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து *
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. (௨)
அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்
கண்ணன் * செங்கனிவாய்க் கருமாணிக்கம் *
தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து *
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. (௩)
ஈசன்வானவர்க்கு என்பனென்றால் * அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு ? *
நீசனேன் நிறைவொன்றுமிலேன் * என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. (௪)
சோதியாகி எல்லாவுலகும்தொழும் *
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ ? *

வேதியர் முழுவேதத் தமுதத்தை *
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. (ரு)

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும் *
தாங்கள்தங்கட்கு நல்லனவேசெய்வார் *
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாம்கடமைஅது * சுமந்தார்கட்கே. (சு)

சுமந்துமாமலர் நீர்சுடர்தூபம்கொண்டு *
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும் *
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்கு *
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. (எ)

‡ குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன் *
அன்றுஞாலம் அளந்தபிரான் * பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை *
ஒன்றுமேதொழ நம்வினைஓயுமே. (அ)

ஓயும்மூப்புப் பிறப்பிறப்புப்பிணி *
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தாயன் *
நாள்மலராம் அடித்தாமரை *
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. (கூ)

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று *
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ *
பைத்தபாம்பணையான் திருவேங்கடம் *
மொய்த்தசோலை மொய்பூந்தடம்தாழ்வரே. (க0)

‡ தாள்பரப்பி மண்தாவியஈசனை *
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல் *
கேழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. (கக)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

† குறைதீர்ந்த இவர், இதர விஷயங்களை ஸ்தோத்ரம் செய்யாதே "திருநாரணன் திருவடியைப் பஜியுங்கோள்" என்று உபதேசிக்கிறார்.

திருவாய்மொழி, ச-ஆம் பத்து, க-ஆம் திருவாய்மொழி.

கலிநிலைத்துறை.

சுருட்டிராகம்-திரிபுடைதாளம்.

‡ ஒருநாயகமாய் ஓடவுலகுடனாண்டவர்
கருநாய்கவர்ந்தகாலர் சிதைகியபானையர் *
பெருநாடுகாண இம்மையிலேபிச்சைதாம்கொள்வர் *
திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ. (க)

---

† இத்திருவாய்மொழி திருநாரணன் விஷயமாகையால், திருநாராயணபுர முதலான மேனாட்டு திவ்ய தேசங்களில் வழங்குகிறார்கள்.

உய்ம்மின் திறைகொணர்ந்து என்றுலகாண்டவர் * இம்மையே
தம்மின்சுவைமடவாரைப் பிறர்கொள்ளத்தாம்விட்டு *
வெம்மினொளிவெயில் கானகம்போய்க்குமைதின்பர்கள் *
செம்மின்முடித்திருமாலை விரைந்தடிசேர்மினோ. (௨)

அடிசேர்முடியினராகி அரசர்கள்தாம்தொழ *
இடிசேர்முரசங்கள் முற்றத்தியம்பஇருந்தவர் *
பொடிசேர்துகளாய்ப்போவர்கள் ஆதலில்நொக்கென *
கடிசேர்துழாய்முடிக் கண்ணன்கழல்கள்நினைமினோ. (௩)

நினைப்பான்புகில் கடலெக்கலின் நுண்மணலின்பலர் *
எனைத்தோருகங்களும் இவ்வுலகாண்டுகழிந்தவர் *
மனைப்பால்மருங்கற மாய்தலல்லால்மற்றுக்கண்டிலம் *
பனைத்தாள்மதகளிறட்டவன் பாதம்பணிமினோ. (௪)

பணிமின்திருவருளென்னும் அம்சீதப்பைம்பூம்பள்ளி *
அணிமென்குழலார் இன்பக்கலவியமுதுண்டார் *
துணிமுன்புநாலப் பல்லேழையர்தாமிழிப்பச்செல்வர் *
மணிமின்னுமேனி நம்மாயவன்பேர்சொல்லிவாழ்மினோ. (௫)

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது மாமழைமொக்குளின்மாய்ந்துமாய்ந்து *
ஆழ்ந்தாரென்றல்லால் அன்றுமுதலின்றறுதியா *
வாழ்ந்தார்கள்வாழ்ந்தேநிற்பர் என்பதில்லை, நிற்குறில் *
ஆழ்ந்தார்கடற்பள்ளி அண்ணலடியவராமினோ. (௬)

ஆமின்சுவையவை ஆறோடடிசிலுண்டார்ந்தபின் *
தூமென்மொழிமடவாரிரக்கப் பின்னும்துற்றுவார் *
ஈமினெமக்கொருதுற்றென்று இடறுவராதலின் *
கோமின்துழாய்முடி ஆதியஞ்சோதிகுணங்களே. (௭)

குணங்கொள்நிறைபுகழ்மன்னர் கொடைக்கடன்பூண்டிருந்து *
இணங்கியுலகுடனாக்கிலும் ஆங்கவனையில்லார் *
மணங்கொண்டபோகத்துமன்னியும் மீள்வர்கள்மீள்வில்லை *
பணங்கொளரவணையான் திருநாமம்படிமினோ. (அ)

படிமன்னுபல்கலன் பற்றோடறுத்துஐம்புலன்வென்று *
செடிமன்னுகாயம்செற்றார்களும் ஆங்கவனையில்லார் *
குடிமன்னுமின்சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்மீள்வில்லை *
கொடிமன்னுபுள்ளுடை அண்ணல்கழல்கள்குறுகுமினோ. (௯)

குறுகமிகவுணர்வத்தொடுநோக்கி எல்லாம்விட்ட *
இறுகலிறப்பென்னும்ஞானிக்கும் அப்பயனில்லையேல் *
சிறுகநினைவதோர்பாசமுண்டாம் பின்னும்வீடில்லை
மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில்வீடஃதே. (௧௦)

‡ அஃதேஉய்யப்புகுமாறென்று கண்ணன் கழல்கள்மேல் *
கொய்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள் *
செய்கோலத்தாயிரம் சீர்த்தொடைப்பாடலிவைபத்தும் *
அஃகாமல்கற்பவர் ஆழ்துயர்போகஉய்யற்பாலரே. (௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

இதரதேவதைகள்பக்கல் உண்டான பரத்வசங்கையை அறுத்து ஸர்வஸ்ருஷ்டாவான நாராயணன் தான் ஸந்நிதிகொண்டு திருநகரியிலே ஸந்நிஹிதமானாகையால் அவனை ஆஸ்ரயியுங்கோள் என்று அருளிச்செய்கிறார்.

திருவாய்மொழி-௪-ஆம்-பத்து, ௧௦-ஆம்-திருவாய்மொழி.

அறுசீராசிரியவிருத்தம்.

சுருட்டிராகம் - ரூபகதாளம்.

‡ ஒன்றும்தேவும்உலகும் மற்றும்யாதுமில்லா
அன்று * நான்முகன்தன்னொடுதேவருலகோடு உயிர்படைத்தான் *
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள்
நின்றஆதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்நாடுதிரே. (௧)
நாடிநீர்வணங்கும்தெய்வமும் உம்மையும்முன்படைத்தான் *
வீடில்சீர்ப்புகழாதிப்பிரான் அவன்மேவியுறைகோயில் *
மாடமாளிகைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை *
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்! பரந்தே. (௨)
பரந்ததெய்வமும்பல்லுலகும்படைத்து அன்றுடனேவிழுங்கி *
கரந்துமிழ்ந்துகடந்திடந்தது கண்டும்தெளியகில்லீர் *
சிரங்களால்அமரர்வணங்கும் திருக்குருகூரதனுள் *
பரன்திறமன்றிப்பல்லுலகீர்! தெய்வம்மற்றில்லைபேசுமினே. (௩)
பேசநின்றசிவனுக்கும்பிரமன் தனக்கும் பிறர்க்கும்
நாயகன்அவனே * கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின் *
தேசமாமதில்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள் *
ஈசன்பால்ஓரவம்பறைதல் என்னாவதிலிங்கியர்க்கே? (௪)
இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும்சாக்கியரும் *
† வலிந்துவாதுசெய்வீர்களும் மற்றுநுந்தெய்வமுமாகிநின்றான் *
மலிந்துசெந்நெல்கவரிவீசும் திருக்குருகூரதனுள் *
பொலிந்துநின்றபிரான்கண்டீர் ஒன்றும்பொய்யில்லைபோற்றுமினே.
போற்றிமற்றோர்தெய்வம் பேணப்புறத்திட்டு * உம்மைஇன்னே
தேற்றிவைத்தது எல்லீரும் வீடுபெற்றால்உலகில்லையென்றே *
சேற்றில்செந்நெல்கமலமோங்கு திருக்குருகூரதனுள் *
ஆற்றவல்லவன்மாயம்கண்டீர் அதறிந்தறிந்தோடுமினே. (௬)

---

† 'மலிந்து' என்றும் பாடாந்தரம்.

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர்தெய்வம் *
பாடியாடிப்பணிந்து பல்படிகால்வழியேறிக்கண்டீர் *
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள் *
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே. (எ)

புக்கடிமையினால்தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை *
நக்கபிரானும்அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே *
கொக்கலர்தடந்தாழைவேலித் திருக்குருகூரதனுள் *
மிக்கஆதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்விளம்புதிரே. (அ)

விளம்பும்ஆறுசமயமும் அவையாகியும்மற்றும்தன்பால் *
அளந்துகாண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும் *
வளங்கொள்தண்பணைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை *
உளங்கொள்ஞானத்துவைம்மின்உம்மையுய்யக்கொண்டுபோகுறிலே.

உறுவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால் *
மறுவில்மூர்த்தியோடொத்து இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே *
செறுவில்செந்நெல்கரும்போடோங்கு திருக்குருகூரதனுள் *
குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்குஆட்செய்வதே. (க௦)

‡ ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான் *
நாள்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன் *
வேட்கையால்சொன்னபாடல் ஆயிரத்துள் இப்பத்தும்வல்லார் *
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. (கக)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஈசுவரன் தர்ஸநஸ்பர்ஸநவார்த்தைகளொன்றும் செய்யாமை
யாலேபுக்கு தம்மபேக்ஷிதங்களைக் கிட்டுவோமென்று
கிட்டாமல் அவஸந்நராகிறார்.

திருவாய்மொழி-ரு-ஆம்-பத்து, அ-ஆம்-திருவாய்மொழி.

அறுசீராசிரியவிருத்தம்.

தந்யாசிராகம் - ஆதிதாளம்.

‡ ஆராவமுதே! அடியேனுடலம் நின்பால்அன்பாயே *
நீராயலைந்துகரைய உருக்குகின்றநெடுமாலே! *
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை *
ஏரார்கோலம்திகழக்கிடந்தாய்! கண்டேன்எம்மானே!. (க)

எம்மானே! என்வெள்ளைமூர்த்தி! என்னையாள்வானே! *
எம்மாவுருவும்வேண்டுமாற்றால் ஆவாய்! எழிலேறே! *
செம்மாகமலம் செழுநீர்மிசைகண்மலரும் திருக்குடந்தை *
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே! என்நான்செய்கேனே? (உ)

என்நான்செய்கேன் ? யாரேகளைகண் ? என்னைஎன்செய்கின்றாய் ? *
உன்னாலல்லால்யாவராலும் ஒன்றுங்குறைவேண்டேன் *
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய் ! அடியேனருவாணாள் *
சென்றாள்எந்நாள் ? அந்நாள் உனதாள்பிடித்தேசெலக்காணே. (௩)

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லும்கீர்த்தியாய் ! *
உலப்பிலானே ! எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி ! *
நலத்தார்மிக்கார்குடந்தைக்கிடந்தாய் ! உன்னைக்காண்பான்நான்
அலப்பாய் * ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனே. (௪)

அழுவன்தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன் *
தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன் *
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய் ! செந்தாமரைக்கண்ணா ! *
தொழுவனேனைஉனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். (௫)

சூழ்கண்டாய் ! என்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே * தூராக்குழிதூர்த்துஎனைநாள்அகன்றிருப்பன் ? *
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய் ! வானோர்கோமானே ! *
யாழினிசையே ! அமுதே ! அறிவின்பயனே ! அரியேறே ! (௬)

அரியேறே ! என்னம்பொற்சுடரே ! செங்கண்கருமுகிலே ! *
எரியேபவளக்குன்றே ! நால்தோளெந்தாய் ! உனதருளே *
பிரியாவடிமைஎன்னைக்கொண்டாய் ! குடந்தைத்திருமாலே ! *
தரியேன்இனிஉன்சரணம்தந்து என்சன்மம்களையாயே. (௭)

‡ களைவாய்துன்பம்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன் *
வளைவாய்நேமிப்படையாய் ! குடந்தைக்கிடந்தமாமாயா ! *
தளராவுடலம்எனதாவி சரிந்துபோம்போது *
இளையாதுஉனதாள்ஒருங்கப்பிடித்துப் போதஇசைநீயே. (௮)

இசைவித்துஎன்னைஉன்தாளிணைக்கீழ் இருத்தும்அம்மானே ! *
அசைவிலமரர்தலைவர்தலைவா ! ஆதிப்பெருமூர்த்தி ! *
திசைவில்வீசும்செழுமாமணிகள்சேரும் திருக்குடந்தை *
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் ! காணவாராயே. (௯)

வாராவருவாய்வருமென்மாயா ! மாயாமூர்த்தியாய் ! *
ஆராவமுதாய்அடியேனாவி யகமேதித்திப்பாய் ! *
தீராவினைகள்தீரஎன்னையாண்டாய் ! திருக்குடந்தை
ஊரா ! * உனக்காட்பட்டும் அடியேன்இன்னம்உழல்வேனோ ? (௧௦)

‡ உழலையென்பின்பேய்ச்சிமுலையூடு அவளைஉயிருண்டான் *
கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன் *
குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துள்இப்பத்தும் *
மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமலையிலே நாய்ச்சிமாருடனேகூடி நின்றருளின ஸௌஸீல்யத்தைக்கண்டு பெரியபிராட்டி முன்னிலையாக அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்து சரணம்புக்கு தம்முடைய அத்யவஸாயத்தை அறிவிக்கிறார்.

திருவாய்மொழி ௬-ஆம்-பத்து, ௰-ஆம்-திருவாய்மொழி.
அறுசீராசிரிய விருத்தம்.
நாதநாமக்ரியைராகம்-ஆதிதாளம்.

உலகமுண்டபெருவாயா! உலப்பில்கீர்த்தியம்மானே! *
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி! நெடியாய்! அடியேனாருயிரே! *
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே! *
குலதொல்லடியேன்உனபாதம் கூடுமாறுகூறாயே. (௧)

கூறாய்நீறாய் நிலனாகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம் *
சீறாவெறியும்திருநேமிவலவா! தெய்வக்கோமானே! *
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே! *
ஆறாவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம் அருளாயே. (௨)

வண்ணமருள்கொளணிமேகவண்ணா! மாயவம்மானே! *
எண்ணம்புகுந்துதித்திக்கும்அமுதே! இமையோரதிபதியே! *
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே! *
அண்ணலே! உன்னடிசேர அடியேற்குஆவாவென்னாயே. (௩)

ஆவாவென்னாதுஉலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல் *
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா! திருமாமகள்கேள்வா!
தேவா! * சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே! *
பூவார்கழல்கள்அருவினையேன் பொருந்துமாறு புணராயே. (௪)

புணராநின்றமரமேழ் அன்றெய்தஒருவில்வலவாவோ! *
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ! *
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே! *
திணரார்சார்ங்கத்துஉனபாதம் சேர்வதுஅடியேன்எந்நாளே? (௫)

எந்நாளேநாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று *
எந்நாளும்நின்றுஇமையோர்களேத்தி இறைஞ்சிஇனமினமாய் *
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே! *
மெய்ந்நானெய்திஎந்நாள் உன்னடிக்கண்அடியேன்மேவுவதே? (௬)

அடியேன்மேவியமர்கின்ற அமுதே இமையோரதிபதியே! *
கொடியாவடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே! *
செடியார்வினைகள்தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே! *
நொடியார்பொழுதும்உனபாதம் காணநோலாதாற்றேனே. (௭)

நோலாதாற்றேன்உனபாதம் காணவென்றுநுண்ணுணர்வின் *
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனும்இந்திரனும் *
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே! *
மாலாய்மயக்கிஅடியேன்பால் வந்தாய்போலேவாராயே. (௮)

வந்தாய்போலேவாராதாய்! வாராதாய்போல்வருவானே! *
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே! *
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே! *
அந்தோ! அடியேன்உன்பாதம் அகலகில்லேன் இறையுமே. (௯)
⁂ அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா! *
நிகரில்புகழாய்! உலகமூன்றுடையாய்! என்னையாள்வானே! *
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே! *
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே. (௧௦)
⁂ அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்வாழ்மினென்றென்றருள்கொடுக்கு
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன் * [ம் *
முடிப்பான்சொன்ன ஆயிரத்துத்திருவேங்கடத்துக்குஇவைபத்தும் *
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

சரணம்புக்கும் தம்மபேக்ஷிதம்பெறுமையாலே ஈசுவரன்
கைவிட்டானாகவெண்ணி, தம்மையும் ஸம்ஸாரியாகச் சங்கித்து
என்னைவிடாதொழியவேண்டுமென்று அவன்
குணங்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார்.

திருவாய்மொழி ௭-ஆம் பத்து, ௨-ஆம்-திருவாய்மொழி.

எழுசீராசிரிய விருத்தம்.

நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

⁂ கங்குலும் பகலும் கண்துயி லறியாள்
கண்ணநீர் கைகளா லிறைக்கும் *
சங்குசக் கரங்க ளென்றுகை கூப்பும்
தாமரைக்கண்ணென் றே தளரும் *
எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டு என்னும்
இருநிலம் கைதுழா விருக்கும் *
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறந்து என்செய்கின் றாயே? (௧)
என்செய் கின்றாய்? என்தா மரைக்கண்ணால்!
என்னும் கண்ணீர் மல்க இருக்கும் *
என்செய்கேன் எறி நீர்த்திரு வரங்கத்தா
யென்னும்வெவ் வுயிர்த்துயிர்த் துருகும் *
முன்செய்த வினையே முகப்படா யென்னும்
முகில்வண்ணா † தகுவதோ வென்னும் *
முன்செய்து இவ்வுலக முண்டுமிழ்ந் தளந்தாய்!
என்கொலோ முடிகின்றது இவட்கே? (௨)

---

† 'தகவிதோ' என்றும் பாடாந்தரம்.

வட்கில ளிறையும் மணிவண்ணாவென்னும்
வானமே நோக்கும்மை யாக்கும் *
உட்குடை யசுர ருயிரெல்லா முண்ட
ஒருவனே யென்னும்உள் ளுருகும் *
கட்கிலீ! உன்னைக் காணுமா றருளாய்
காகுத்தா கண்ணனே யென்னும் *
திட்கொடி மதிள்சூழ் திருவரங் கத்தாய்
இவள்திறத்து என்செய்திட் டாயே? (௩)
இட்டகா லிட்ட கையளா யிருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும் *
கட்டமே காத லென்றுமூர்ச் சிக்கும்
கடல்வண்ணா! கடியைகா ணென்னும் *
வட்டவாய் நேமி வலங்கையா வென்னும்
வந்திடாய் என்றென்றே மயங்கும் *
சிட்டனே! செழுநீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறத்து என்சிந்தித் தாயே? (௪)
சிந்திக்கும் திசைக்கும் தேறும்கை கூப்பும்
திருவரங்கத் துள்ளா யென்னும்
வந்திக்கும் * ஆங்கே மழைக்கண் ணீர்மல்க
வந்திடா யென்றென்றே மயங்கும் *
அந்திப்போ தவுண னுடலிடந் தானே!
அலைகடல் கடைந்த ஆரமுதே! *
சந்தித்துஉன் சரணம் சார்வதே வலித்த
தையலை மையல்செய் தானே! (௫)

மையல்செய்து என்னை மனம்கவர்ந் தானே
யென்னும் மாமாயனே யென்னும் *
செய்யவாய்மணியே யென்னும்தண் புனல்சூழ்
திருவரங்கத் துள்ளா யென்னும் *
வெய்யவாள் தண்டு சங்கு சக்கரம்
வில்லேந்தும் விண்ணோர் முதலென்னும் *
பைகொள்பாம் பணையாய்! இவள்திறத் தருளாய்
பாவியேன் செயற்பா லதுவே. (௬)

பாலதுன் பங்க ளின்பங்கள்படைத்தாய்!
பற்றிலார் பற்றநின் றானே! *
காலசக் கரத்தாய்! கடலிடங் கொண்ட
கடல்வண்ணா! கண்ணனே யென்னும் *
சேல்கொள் தண்புனல் சூழ்ந்திரு வரங்கத்தா
யென்னும் என்தீர்த்தனே யென்னும் *
கோலமா மழைக்கண் பனிமல்க இருக்கும்
என்னுடைக் கோமளக் கொழுந்தே. (௭)

கொழுந்து வானவர்கட் கென்னும் குன்றேந்திக்
கோனிரை காத்தவனென்னும் *
அழும்தொழும் ஆவிய னலவெவ் வுயிர்க்கும்
அஞ்சன வண்ணனே யென்னும் *
எழுந்துமேல் நோக்கி இமைப்பில ளிருக்கும்
எங்ஙனே நோக்குகே னென்னும் *
செழுந்தடம் புனல்சூழ் திருவரங்கத்தாய்!
என்செய்கேன் என் திரு மகட்கே? (அ)

‡ என் திரு மகள்சேர் மார்பனே யென்னும் *
என்னுடை யாவியே யென்னும் *
நின் திரு வெயிற்றால் இடந்துநீ கொண்ட
நிலமகள் கேள்வனே யென்னும் *
அன்றுரு வேழும் தழுவிநீ கொண்ட
ஆய்மக ளன்பனே யென்னும் *
தென் திரு வரங்கம் கோயில்கொண் டானே!
தெளிகிலேன் முடிவுஇவள் தனக்கே. (கூ)

முடிவுஇவள் தனக்கொன் றறிகிலே னென்னும்
மூவுல காளியே யென்னும் *
கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும்
நான்முகக் கடவுளே யென்னும் *
வடிவுடை வானோர் தலைவனே யென்னும்
வண் திரு வரங்கனே யென்னும் *
அடியடை யாதாள் போல்இவள் அணுகி
யடைந்தனள் முகில்வண்ண னடியே. (கo)

‡ முகில்வண்ண னடியை யடைந்தருள் சூடி
உய்ந்தவன் மொய்புனல் பொருநல் *
துகில்வண்ணத் தூநீர்ச் சேர்ப்பன் வண்டுபொழில்சூழ்
வண்குரு கூர்ச்சட கோபன் *
முகில்வண்ண னடிமேல் சொன்னசொல் மாலை
ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
முகில்வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர்பே ரின்பவெள் ளத்தே. (கக)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

பிரணவநமஸ்ஸுக்களில் போதரும் அநந்யார்ஹசேஷத்வத்துக்கு ஸீமாபூமி ததீயசேஷத்வமாகையாலே, அத்ததீயர்க்கு க்ரயவிக்ரயார்ஹமான சேஷத்வத்தைப் பிரார்த்திக்கிறார்.

திருவாய்மொழி-அ-ஆம்-பத்து, ௧௦-ஆம்-திருவாய்மொழி.

அறுசீராசிரியவிருத்தம்.

ஸஹாநாராகம்-அடதாளம்.

✝ நெடுமாற்கடிமைசெய்வேன்போல் அவனைக்கருதவஞ்சித்து *
தடுமாற்றற்றதீக்கதிகள் முற்றும்தவிர்ந்தசதிர்நினைந்தால் *
கொடுமாவினையேன் அவனடியாரடியே கூடும் இதுவல்லால் *
விடுமாறென்பதென்? அந்தோ! வியன்மூவுலகுபெறினுமே. (௧)

வியன்மூவுலகுபெறினும்போய்த் தானேதானேயானாலும் *
புயல்மேகம்போல்திருமேனியம்மான் புனைபூங்கழடிக்கீழ் *
சயமேஅடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி * இம்மையே
பயனேஇன்பம்யான்பெற்றது உறுமோபாவியேனுக்கே. (௨)

உறுமோபாவியேனுக்கு இவ்வுலகமூன்றும்உடன்நிறைய *
சிறுமாமேனிநிமிர்ந்த என்செந்தாமரைக்கண் திருக்குறளன் *
நறுமாவிரைநாள்மலரடிக்கீழ்ப் புகுதலன்றிஅவனடியார் *
சிறுமாமனிசராய்என்னையாண்டார் இங்கேதிரியவே. (௩)

இங்கேதிரிந்தேற்குஇழுக்குற்றென்? இருமாநிலம்முன்னுண்டுமிழ்ந்த
செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கண்என்னம்மான் *
பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப்புலன் கொள்வடிவுஎன்மனத்ததாய் *
அங்கேய்மலர்கள்கையவாய் வழிபட்டோடஅருளிலே. (௪)

வழிபட்டோடஅருள்பெற்று மாயன்கோலமலரடிக்கீழ் *
சுழிபட்டோடும்சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந்தாலும் *
இழிபட்டோடும்உடலினிற்பிறந்து தன்சீர்யான்கற்று *
மொழிபட்டோடும்கவியமுதநுகர்ச்சி உறுமோமுழுதுமே. (௫)

நுகர்ச்சியுறுமோ? மூவுலகின் வீடுபேறுதன்கேழில் *
புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கைஎன்னம்மான் *
நிகர்ச்செம்பங்கிஎரிவிழிகள்நீண்ட அசுரருயிரெல்லாம் *
தகர்த்துண்டுழலும்புட்பாகன் பெரியதனிமாப்புகழே. (௬)

தனிமாப்புகழேஎஞ்ஞான்றும் நிற்கும்படியாத்தான்தோன்றி *
முனிமாப்பிரமமுதல்வித்தாய் உலகமூன்றும்முளைப்பித்த *
தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றிஅவனடியார் *
நனிமாக்கலவிஇன்பமே நாளும்வாய்க்கநங்கட்கே. (௭)

நாளும்வாய்க்கநங்கட்கு நளிர்நீர்க்கடலைப்படைத்து * தன்
தாளும்தோளும்முடிகளும் சமனிலாதபலபரப்பி *
நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபல்நாயிற்றின் *
கோளுமுடையமணிமலைபோல் கிடந்தான்தமர்கள்கூட்டமே. (௮)

தமர்கள்கூட்டவல்வினையை நாசம்செய்யும் † சதுமூர்த்தி *
அமர்கொள்ஆழிசங்குவாள் வில்தண்டுஆதிபல்படையன் *
குமரன்கோலவைங்கணைவேள் தாதை கோதிலடியார்தம் *
தமர்கள்தமர்கள்தமர்களாம் சதிரேவாய்க்கதமியேற்கே. (௯)

வாய்க்கதமியேற்கு ஊழிதோறூழியூழி * மாகாயாம்
பூக்கொள்மேனிநான்குதோள் பொன்னாழிக்கை என்னம்மான் *
நீக்கமில்லாஅடியார்தம் அடியாரடியாரடியார்எம்
கோக்கள் * அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும் நல்லகோட்பாடே. (௰)

✢ நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும்தான்நிறைந்த *
அல்லிக்கமலக் ‡ கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன் *
சொல்லப்பட்ட ஆயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

சரீராவஸாநஸமயத்தில் இவன்பக்கல் ஆத்மஸமர்ப்பணம்பண்ணி
ப்ராப்யபூமியிலே போக்காமல் நமக்காக்கிக்கொள்ளுகிறோ
மென்னும் ஈசுவரனை வழித்துணையாகப் பற்றுதல்.

திருவாய்மொழி, ௯-ஆம் பத்து, ௰-ஆம் திருவாய்மொழி.

கலிவிருத்தம்.

கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

✢ மாலைநண்ணித் தொழுதெழுமினோவினைகெட *
காலைமாலை கமலமலரிட்டுநீர் *
வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து *
ஆலின்மேலாலமர்ந்தான் அடியிணைகளே. (௧)

கள்ளவிழும்மலரிட்டு நீர்இறைஞ்சுமின் *
நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை *
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி * நாளும்தொழுதெழுமினோ தொண்டரே! (௨)

தொண்டர்! நுந்தம்துயர்போக நீர்ஏகமாய் *
விண்டுவாடாமலரிட்டு நீர்இறைஞ்சுமின் *
வண்டுபாடும்பொழில்சூழ் திருக்கண்ணபுரத்து
அண்டவாணன் * அமரர்பெருமானையே. (௩)

---

† சதிர்மூர்த்தி என்றும் பாடம். ‡ கண்ணுனை என்பதும் பாடம்.

மானைநோக்கி மடப்பின்னை தன்கேள்வனை *
தேனைவாடாமலரிட்டு நீர் இறைஞ்சுமின் *
வானையுந்துமதிள்சூழ் திருக்கண்ணபுரம் *
தான்நயந்தபெருமான் சரணாகுமே. (௪)

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் *
மரணமானால் வைகுந்தம்கொடுக்கும்பிரான் *
அரணமைந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன் * தனதன்பர்க்குஅன்பாகுமே. (௫)

அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் *
செம்பொனாகத்து அவுணனுடல்கீண்டவன் *
நன்பொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
அன்பன் * நாளும் தனமெய்யர்க்குமெய்யனே. (௬)

மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம் *
பொய்யனாகும் புறமேதொழுவார்க்கெல்லாம் *
செய்யில்வாளையுகளும் திருக்கண்ணபுரத்து
ஐயன் * ஆகத்தணைப்பார்கட்கு அணியனே. (௭)

அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் *
பிணியும்சாரா பிறவிகெடுத்தாளும் *
மணிபொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின் * நாளும் பரமேட்டிதன்பாதமே. (௮)

பாதம்நாளும்பணியத் தணியும்பிணி *
ஏதம்சாரா எனக்கேல்இனியென்குறை? *
வேதநாவர்விரும்பும் திருக்கண்ணபுரத்து
ஆதியானை * அடைந்தார்க்கு அல்லலில்லையே. (௯)

இல்லையல்லல்எனக்கேல் இனியென்குறை? *
அல்லிமாதரமரும் திருமார்பினன் *
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல * நாளும் துயர்பாடுசாராவே. (௧௦)

‡ பாடுசாராவினை பற்றறவேண்டுவீர்! *
மாடநீடு குருகூர்ச்சடகோபன் * சொல்
பாடலானதமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்
பாடியாடி * பணிமின் அவன்தாள்களே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஈசுவரன், ஆழ்வாருக்கு அர்ச்சிராதிமார்க்கத்தையும், ஆதிவாஹிகத் ஸத்காரங்களையும், பரமபதத்தையும், தானும் நித்தியஸூரி களும் பிராட்டிமாரும் எதிரேவந்து ஆதரிக்கும்படியை யும், நித்தியஸூரி ஸேவிதராய் பிராட்டியோடு வீற் றிருக்கும்படியைக் கண்டு, தான் ஆனந்த நிர்ப் பரனாயிருக்கிறபடியையும் காட்ட அதைக் கண்டு ஆழ்வார் ப்ரீதராதல்.

திருவாய்மொழி, க0-ஆம்-பத்து, கூ-ஆம் திருவாய்மொழி.

கலிவிருத்தம்.

கல்யாணிராகம்-அடதாளம்.

‡ சூழ்விசும்பணிமுகில் தூரியம்முழக்கின *
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின *
ஏழ்பொழிலும் வளமேந்திய என்னப்பன் *
வாழ்புகழ்நாரணன் தமரைக் கண்டுகந்தே. (க)

நாரணன்தமரைக் கண்டுகந்து நல்நீர்முகில் *
பூரணபொற்குடம் பூரித்ததுஉயர்விண்ணில் *
நீரணிகடல்கள் நின்றார்த்தன * நெடுவரைத்
தோரணம்நிரைத்து எங்கும்தொழுதனருலகே. (உ)

தொழுதனர்உலகர்கள் தூபம்நல்மலர்மழை *
பொழிவனர் * பூமியன்றளந்தவன் தமர்முன்னே *
எழுமினென்று இருமருங்குஇசைத்தனர் முனிவர்கள் *
வழியிதுவைகுந்தற்கென்று வந்தெதிரே. (ங)

எதிரெதிர்இமையவர் இருப்பிடம்வகுத்தனர் *
கதிரவரவரவர் கைந்நிரைகாட்டினர் *
அதிர்குரல்முரசங்கள் அலைகடல்முழக்கொத்த *
மதுவிரிதுழாய்முடி மாதவன் தமர்க்கே. (ச)

மாதவன்தமரென்று வாசலில்வானவர் *
போதுமினெமதிடம் புகுதுகவென்றலும் *
கீதங்கள்பாடினர் கின்னரர்கெருடர்கள் *
வேதநல்வாயவர் வேள்வியுள்மடுத்தே. (ரு)

வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ்நறும்புகை *
காளங்கள்வலம்புரிகலந்து எங்கும்இசைத்தனா *
ஆண்மின்கள்வானகம் ஆழியான்தமரென்று *
வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர்மகிழ்ந்தே. (சு)

மடந்தையர்வாழ்த்தலும் மருதரும்வசுக்களும் *
தொடர்ந்தெங்கும் தோத்திரம்சொல்லினர் * தொடுகடல்
கிடந்தஎங்கேசவன் கிளரொளிமணிமுடி *
குடந்தை எங்கோவலன் குடியடியார்க்கே. (எ)
குடியடியார்இவர் கோவிந்தன் தனக்கென்று *
முடியுடைவானவர் முறைமுறைஎதிர்கொள்ள *
கொடியணிநெடுமதிள் கோபுரம்குறுகினர் *
வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே. (அ)
வைகுந்தம்புகுதலும் வாசலில்வானவர் *
வைகுந்தன் தமர்எமர் எமதிடம்புகுதென்று *
வைகுந்தத்தமரரும் முனிவரும்வியந்தனர் *
வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே. (கூ)
விதிவகைபுகுந்தனர்என்று நல்வேதியர் *
பதியினில்பாங்கினில் பாதங்கள்கழுவினர் *
நிதியும்நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் *
மதிமுகமடந்தையர் ஏந்தினர்வந்தே. (க0)
‡ வந்தவர்எதிர்கொள்ள மாமணிமண்டபத்து *
அந்தமில்பேரின்பத்து அடியரோடிருந்தமை *
கொந்தலர்பொழில் குருகூர்ச்சடகோபன் * சொல்
சந்தங்களாயிரத்து இவைவல்லார்முனிவரே. (கக)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஈசுவரன் பெரிய திருவடிமேல் தோற்றி ப்ரக்ருதி ஸம்பந்தத்தை ஒழித்து நித்தியஸூரிகளிலேபுகுந்து விடாய்தீர்ந்து இவர்க்கு மவ்வருகான தன்விடாய்திரும்படி ஸம்ஸ்லேஷித்தருளுதல்.

திருவாய்மொழி, க0-ஆம் பத்து, க0-ஆம் திருவாய்மொழி.

அறுசீராசிரிய விருத்தம்.

கல்யாணிராகம்-அடதாளம்.

‡ முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா! * என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்கருமாணிக்கமே! என்கள்வா! *
தனியேனாருயிரே! என்தலைமிசையாய்வந்திட்டு *
இனிநான்போகலொட்டேன் ஒன்றும்மாயம்செய்யேல்என்னையே. (க)
மாயம்செய்யேல்என்னை உன் திருமார்வத்துமாலைநங்கை *
வாசம்செய்பூங்குழலாள் திருவாணை நின்னாணைகண்டாய் *
நேசம்செய்துஉன்னோடுஎன்னை உயிர்வேறின்றிஒன்றாகவே *
கூசம்செய்யாதுகொண்டாய் என்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ!
கூவிக்கொள்ளாய்வந்தந்தோ! என்பொல்லாக்கருமாணிக்கமே! *
ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலால்அறிகின்றிலேன்நான் *

மேவித்தொழும்பிரமன்சிவன் இந்திரனாதிக்கெல்லாம் *
நாபிக்கமலமுதற்கிழங்கே! உம்பரந்ததுவே. (௩)

உம்பரந்தண்பாழேயோ! அதனுள்மிசைநீயேயோ! *
அம்பரநற்சோதிஅதனுள் பிரமன் அரன்நீ *
உம்பரும்யாதவரும்படைத்த முனிவனவன்நீ *
எம்பரம்சாதிக்கலுற்று என்னைப்போரவிட்டிட்டாயே. (௪)

போரவிட்டிட்டென்னை நீபுறம்போக்கலுற்றால் * பின்னையான்
ஆரைக்கொண்டெங்ஙனிங்கே என்தென்பதென்? யானென்பதென்? *
தீரஇரும்புண்டநீரதுபோல என்னாருயிரை
ஆரப்பருக * எனக்குஆராவமுதானாயே. (௫)

எனக்காராவமுதாய் எனதாவியை இன்னுயிரை *
மனக்காரமைமன்னியுண்டிட்டாய் இனியுண்டொழியாய் *
புனக்காயாநிறத்த புண்டரீகக்கண் செங்கனிவாய் *
உனக்கேற்கும்கோலமலர்ப்பாவைக்கன்பா! என்னன்பேயோ! (௬)

⸸ கோலமர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ! *
நீலவரைஇரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப *
கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக்கொண்டஎந்தாய்! *
நீலக்கடல்கடைந்தாய்! உன்னைப்பெற்றுஇனிப்போக்குவனோ? (௭)

பெற்றினிப்போக்குவனோ? உன்னைஎன் தனிப்பேருயிரை *
உற்றஇருவினையாய் உயிராய்ப்பயனாய்அவையாய் *
முற்றஇம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றில்புக்கு *
முற்றக்கரந்தொளித்தாய்! என்முதல்தனிவித்தேயோ! (௮)

முதல்தனிவித்தேயோ! முழுமூவுலகாதிக்கெல்லாம் *
முதல்தனிஉன்னைஉன்னை எனைநாள்வந்துகூடுவன்நான்? *
முதல்தனிஅங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய் *
முதல்தனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவிலீயோ! (௯)

⸸ சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ! *
சூழ்ந்ததனில்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ! *
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞானவின்பமேயோ! *
சூழ்ந்ததனில்பெரிய என்னவாவறச்சூழ்ந்தாயே. (௧௦)

⸸ அவாவறச்சூழ் அரியைஅயனைஅரனைஅலற்றி *
அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன *
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும் * முடிந்த
அவாவிலந்தாதிஇப்பத்துஅறிந்தார் பிறந்தார்உயர்ந்தே. (௧௧)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

கோயில்திருவாய்மொழி ஸம்பூர்ணம்.



உடையவர்.

திருவாய்மொழி யநுசந்திக்கவநந்தரம் நெடுஞ்சாவித்ரிபோலே பத்தாயிருக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பநுசந்தித்தவநந்தரம் குறுஞ்சாவித்ரியைப்போலே நூற்றெட்டாயிருக்கும் நூற்றந்தாதி யநுஸந்தித்தல்.

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த
ப்ரபந்நகாயத்ரி என்னும்

இராமாநுச நூற்றந்தாதி.

(வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தவை.)

ஒருவிகற்ப நேரிசைவெண்பா.

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன் *
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் *—என்னுடைய
சென்னிக்குஅணியாகச் சேர்த்தினேன் * தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்.

கட்டளைக்கலித்துறை.

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றிநண்ணினர்பால் *
சயந்தருகீர்த்தி இராமாநுசமுனிதாளிணைமேல் *
உயர்ந்தகுணத்துத் திருவரங்கத்தமுதோங்கும் * அன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதிஓத இசைநெஞ்சமே!
இனியென்குறைநமக்கு? எம்பெருமானார் திருநாமத்தால் *
முனிதந்த "நூற்றெட்டுச் சாவித்திரி" என்னுநுண்பொருளை *
கனிதந்தசெஞ்சொற் கலித்துறை யந்தாதிபாடித்தந்தான் *
புனிதன் திருவரங்கத்தமுதாகியபுண்ணியனே.

(அமுதனாரருளிச்செய்ததாதல், அவரபிப்ராயத்தாலே
அபிநிவேசமுடைய ஆஸ்திகர் அருளிச்செய்தது.)

சொல்லின்தொகைகொண்டு உனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்தும்உன்நாமமெல்லாம் என்றன்நாவினுள்ளே *
அல்லும்பகலும் அமரும்படிநல்கு அறுசமயம்
வெல்லும்பரம! * இராமாநுச! இதுஎன்விண்ணப்பமே.

பைரவிராகம்-ரூபகதாளம்.

✠ பூமன்னுமாது பொருந்தியமார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாறன் அடிபணிந்துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்னவந்தஇராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே! சொல்லுவோம்அவன்நாமங்களே.

தோடி ராகம்-ரூபக தாளம்.

கள்ளார்பொழில் தென்னரங்கன் * கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளா மனிசரை நீங்கி * குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமாநுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாது என்நெஞ்சு * ஒன்றறியேன்எனக்குற்றபேரியல்வே. (௨)

பேரியல்நெஞ்சே! அடிபணிந்தேன்உன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம்புலற்றி * பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மைஇராமாநுசமுனிக்குஅன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீழ்என்னைச்சேர்த்ததற்கே. (௩)

என்னைப்புவியில் ஒருபொருளாக்கி * மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்து * ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்தஇராமாநுசன் பரன்பாதமும்என்
சென்னித்தரிக்கவைத்தான் * எனக்கு ஏதும்சிதைவில்லையே. (௪)

எனக்குற்றசெல்வம் இராமாநுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன்மன்னியசீர்
தனக்குற்றஅன்பர் அவன்திருநாமங்கள்சாற்றும்என்பா
இனக்குற்றம்காணகில்லார் * பத்தியேய்ந்தஇயல்விதென்றே. (௫)

இயலும்பொருளும் இசையத்தொடுத்து * ஈன்கவிகள்அன்பால்
மயல்கொண்டுவாழ்த்தும்இராமாநுசனை * மதியின்மையால்
பயிலும்கவிகளில்பத்தியில்லாத என்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்தன்பெருங்கீர்த்தி மொழிந்திடவே. (௬)

பியாகடை ராகம்-ரூபக தாளம்.

மொழியைக்கடக்கும்பெரும்புகழான் * வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும்நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *
பழியைக்கடத்தும்இராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்குஇனியாதும் வருத்தமன்றே. (௭)

வருத்தும் புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையும் செந்தமிழ்தன்னையும்கூட்டி * ஒன்றத்
திரித்துஅன்றெரித்ததிருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
இருத்தும்பரமன் * இராமாநுசன் எம்இறையவனே. (௮)

இறைவனைக்காணும் இதயத்திருள்கெட * ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிதாள்கள் * நெஞ்சத்து
உறையவைத்தாளும்இராமாநுசன் புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே. (௯)

மன்னியபேரிருள்மாண்டபின் * கோவலுள்மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும் * தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றும்இராமாநுசற்கு அன்புபூண்டவர்தாள்
சென்னியில்சூடும் * திருவுடையார் என்றும்சீரியரே. (௧௦)

கல்யாணிராகம்-ரூபகதாளம்.

சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் * சரணாம்பதுமத்
தாரியல்சென்னிஇராமாநுசன் தன்னைச்சார்ந்தவர்தம்
காரியவண்மை * என்னாற்சொல்லொணாது இக்கடலிடத்தே. (௧௧)

இடங்கொண்டகீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போது
அடங்குமிதயத்து இராமாநுசன் * அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கே * அடியேன் அன்புசெய்வதுவே. (௧௨)

செய்யும் பசுந்துளவத்தொழில்மாலையும் * செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராதசீரரங்கத்து
அய்யன் கழற்கணியும்பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன் * இராமாநுசன் சரணேகதிவேறெனக்கே. (௧௩)

கதிக்குப்பதறி * வெங்கானமும்கல்லும்கடலுமெல்லாம் [ல்
கொதிக்கத்தவம்செய்யும்கொள்கையற்றேன் * கொல்லிகாவலன்சொ
பதிக்கும்கலைக்கவிபாடும்பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன் * இராமாநுசன் என்னைச்சோர்விலனே. (௧௪)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலையொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்றுகாப்பிடும் * பாண்மையன்தாள்
பேராதஉள்ளத்துஇராமாநுசன்தன் பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேன் * எனக்கென்னதாழ்வினியே? (௧௫)

நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

‡ தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்து * தலமுழுதும்கலியே
ஆள்கின்றநாள்வந்து அளித்தவன்காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள்தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுசனென்னும் மாமுனியே. (௧௬)

முனியார் துயரங்கள்முந்திலும் * இன்பங்கள்மொய்த்திடினும்
கனியார்மனம் கண்ணமங்கைநின்றானை * கலைபரவும்
தனியானையைத்தண்தமிழ்செய்தநீலன் தனக்கு உலகில்
இனியானை * எங்களிராமாநுசனை வந்தெய்தினரே. (௧௭)

எய்தற்கரியமறைகளை * ஆயிரம்இன்தமிழால்
செய்தற்குஉலகில்வரும் சடகோபனை * சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும்பெரியவர்சீரை உயிர்களெல்லாம்
உய்தற்குதவும் * இராமாநுசன் எம்உறுதுணையே. (௧௮)

உறுபெருஞ்செல்வமும் தந்தையும்தாயும் * உயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும் * மாறன்விளங்கியசீர்
நெறிதரும்செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர்
அறிதரநின்ற இராமாநுசன் எனக்குஆரமுதே. (௧௯)

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள்நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் * இராமாநுசன் என்தன்மாநிதியே. (௨௦)

நிதியைப்பொழியும்முகிலென்று * நீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகில் துவள்கின்றிலேன் இனி * தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன்யமுனைத்துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய * இராமாநுசன் என்னைக்காத்தனனே. (௨௧)

கார்த்திகையானும்கரிமுகத்தானும் * கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும்வெப்பும்முதுகிட்டு * மூவுலகும்
பூத்தவனேயென்றுபோற்றிட வாணன்பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும் * இராமாநுசன் என்தன்சேமவைப்பே. (௨௨)

வைப்பாயவான்பொருளென்று * நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும்வைக்கும் இராமாநுசனை * இருநிலத்தில்
ஒப்பாரில்லாதஉறுவினையேன் வஞ்சநெஞ்சில்வைத்து
முப்போதும் வாழ்த்துவன் * என்னாம்இது அவன்மொய்புகழ்க்கே?

மொய்த்தவெந்தீவினையால் பல்லுடல்தொறும்மூத்து * அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம் * இன்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும் புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து * இராமாநுசனென்னும் கார்தன்னையே. ()

காரேய்கருணை இராமாநுச! * இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின் தன்மை? * அல்லலுக்கு
நேரேஉறைவிடம் நான்வந்துநீஎன்னையுய்த்தபின் உன்
சீரேஉயிர்க்குயிராய் * அடியேற்குஇன்று தித்திக்குமே. (௨௫)

திக்குற்றகீர்த்தி இராமாநுசனை * என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கியமேகத்தை * மேவும்நல்லோர்
எக்குற்றவாளர் எதுபிறப்புஏதியல்வாகநின்றோர்
அக்குற்றம்அப்பிறப்பு * அவ்வியல்வே நம்மைஆட்கொள்ளுமே. ()

கொள்ளக்குறைவற்றிலங்கி * கொழுந்துவிட்டோங்கியஉன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம்புகுந்தாய் *
வெள்ளைச்சுடர்விடும் உன்பெருமேன்மைக்குஇழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் * இராமாநுச! என்தனிநெஞ்சமே. (௨௭)

நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன்காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய இராமாநுசன் புகழன்றிஎன்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது * என்னவாழ்வுஇன்றுகூடியதே! (௨அ)

கூட்டும்விதி என்றுகூடுங்கொலோ? * தென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப் பசுந்தமிழ்தன்னை * தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த இராமாநுசன் புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை * என்னாட்டங்கள் கண்டுஇன்பமெய்திடவே. (௨௯)

இன்பந்தரு பெருவீடுவந்தெய்திலென்? * எண்ணிறந்த
துன்பந்தரு நிரயம்பலசூழிலென்? * தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன் மாயனெனமொழிந்த
அன்பன் அனகன் * இராமாநுசன் என்னையாண்டனனே. (௯0)

‡ ஆண்டுகள்நாள் திங்களாய் * நிகழ்காலமெல்லாம்மனமே!
ஈண்டு பல்யோனிகள்தோறுழல்வோம் * இன்றுஓரெண்ணின்றியே.
காண்தகுதோளண்ணல் தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டஅன்பாளன் * இராமாநுசனைப் பொருந்தினமே. (௯௧)

பொருந்தியதேசும் பொறையும்திறலும்புகழும் * நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும் * செறுகலியால்
வருந்தியஞாலத்தை வண்மையினால்வந்தெடுத்தளித்த
அருந்தவன் * எங்களிராமாநுசனை அடைபவர்க்கே. (௯௨)

அடையார்கமலத்து அலர்மகள்கேள்வன் * கையாழியென்னும்
படையோடுநாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்கவில்லும் *
புடையார்புரிசங்கமும் இந்தப்பூதலம்காப்பதற்கென்று *
இடையே இராமாநுசமுனியாயின இந்நிலத்தே. (௯௩)

நிலத்தைச்செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய
பலத்தைச்செறுத்தும் பிறங்கியதில்லை * என்மெய்வினைநோய்
புலத்தில்பொறித்த அப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்
நலத்தைப்பொறுத்தது * இராமாநுசன்தன் நயப்புகழே. (௯௪)

நயவேன் ஒருதெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்
புயலேயெனக் கவிபோற்றிசெய்யேன் * பொன்னரங்கமென்னில்
மயலேபெருகும்இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள்
அயரேன் * அருவினை என்னைஎவ்வாறுஇன்றுஅடர்ப்பதுவே? (௯௫)

அடல்கொண்டநேமியன் ஆருயிர்நாதன் * அன்றுஆரணச்சொல்
கடல்கொண்டஒண்பொருள் கண்டளிப்ப * பின்னும்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத் தானும்அவ்வொண்பொருள்கொண்டுஅவர்பின்
படரும்குணன் * எம்இராமாநுசன்தன் படியிதுவே. (௯௬)

படிகொண்டகீர்த்தி இராமாயணமென்னும் பத்திவெள்ளம்
குடிகொண்டகோயி லிராமாநுசன்குணங்கூறும் * அன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள் கலந்துஉள்ளம்கனியும்நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து * என்னையும் ஆளவர்க்குஆக்கினரே. (௯௭)

ஆக்கிஅடிமைநிலைப்பித்தனை என்னை இன்று * அவமே
போக்கிப் புறத்திட்டது என்பொருளா முன்பு? * புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா இராமாநுச! நின்னருளின்வண்ணம்
நோக்கில்தெரிவரிதால் * உரையாய் இந்த நுண்பொருளே. (௩௮)

பொருளும்புதல்வரும்பூமியும் * பூங்குழலாரும்என்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்குநெஞ்சே! மற்றுளார்தரமோ?
இருள்கொண்டவெந்துயர்மாற்றித் தன்னீறில்பெரும்புகழே
தெருளும்தெருள்தந்து * இராமாநுசன்செய்யும் சேமங்களே. (௩௯)

சேமநல்வீடும் பொருளும்தருமமும் * சீரியநற்
காமமும் என்றிவைநான்கென்பர் * நான்கினும்கண்ணனுக்கே
ஆமதுகாமம் அறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்
வாமனன்சீலன் * இராமாநுசன் இந்தமண்மிசையே. (௪௦)

மண்மிசையோனிகள்தோறும்பிறந்து * எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்களெல்லாம்
அண்ணல்இராமாநுசன் வந்துதோன்றியஅப்பொழுதே
நண்ணருஞானம் தலைக்கொண்டு * நாரணற்காயினரே. (௪௧)

ஆயிழையார் கொங்கைதங்கும் * அக்காதலளற்றழுந்தி
மாயும்என்ஆவியை வந்தெடுத்தான்இன்று * மாமலராள்
நாயகன் எல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்
தூயவன் * தீதில்இராமாநுசன் தொல்லருள்சுரந்தே. (௪௨)

சுரக்கும்திருவும்உணர்வும் * சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும் * படியிலுள்ளீர்!
உரைக்கின்றனன்உமக்கு யான்அறஞ்சீறுமுறுகலியைத்
துரக்கும்பெருமை * இராமாநுசனென்று சொல்லுமினே. (௪௩)

சொல்லார் தமிழ்ஒருமூன்றும் * சுருதிகள்நான்கும் எல்லை
யில்லாஅறநெறியாவும் தெரிந்தவன் * எண்ணருஞ்சீர்
நல்லார்பரவும்இராமாநுசன் திருநாமம்நம்பிக்
கல்லார் அகலிடத்தோர் * எதுபேறென்றுகாமிப்பரே. (௪௪)

பேறொன்றுமற்றில்லை நின்சரணன்றி * அப்பேறளித்தற்கு
ஆறொன்றுமில்லை மற்றச்சரணன்றி * என்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்கும் உனைத்தந்தசெம்மை சொல்லால்
கூறும்பரமன்று * இராமாநுச! மெய்ம்மைகூறிடிலே. (௪௫)

கூறும்சமயங்களாறும்குலைய * குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை * மதியிலியேன்
தேறும்படி என்மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறும்குணனை * இராமாநுசனை இறைஞ்சினமே. (௪௬)

இறைஞ்சப்படும்பரன் ஈசன் அரங்கனென்று * இவ்வுலகத்து
அறஞ்செப்பும் அண்ணல்இராமாநுசன் * என்னருவினையின்
திறஞ்செற்று இரவும்பகலும்விடாது என்தன்சிந்தையுள்ளே
நிறைந்துஒப்பறஇருந்தான் * எனக்குஆரும் நிகரில்லையே. (௪௭)

நிகரின்றிநின்ற என்நீசதைக்கு * நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை அருட்குமஃதேபுகல் * புன்மையிலோர்
பகரும்பெருமைஇராமாநுசா! இனிநாம்பழுதே
அகலும்பொருளென்? * பயனிருவோமுக்குமானபின்னே. (௪௮)

ஆனதுசெம்மைஅறநெறி * பொய்ம்மைஅறுசமயம்
போனதுபொன்றிஇறந்ததுவெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன்கழல்சென்னிவைத்துத்
தானதில்மன்னும் * இராமாநுசன் இத்தலத்துதித்தே. (௪௯)

உதிப்பன உத்தமர்சிந்தையுள் ஒன்னலர்நெஞ்சம்அஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன * கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தஎன்புன்கவிப்பாவினம்பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலைநாதன் * இராமாநுசன்தன் இணையடியே. (௫௦)

அடியைத்தொடர்ந்தெழும் ஐவர்கட்காய் * அன்றுபாரதப்போர்
முடியப் பரிநெடுந்தேர்விடுங்கோனை * முழுதுணர்ந்த
அடியர்க்கமுதம்இராமாநுசன் என்னையாளவந்துஇப்
படியிற்பிறந்தது * மற்றில்லைகாரணம் பார்த்திடிலே. (௫௧)

பார்த்தான் அறுசமயங்கள்பதைப்ப * இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினேனிடைத்தான்புகுந்து *
தீர்த்தான் இருவினைதீர்த்து அரங்கன்செய்ய தாளிணையோடு
ஆர்த்தான் * இவைஎம்மிராமாநுசன் செய்யும்அற்புதமே. (௫௨)

அற்புதன் செம்மைஇராமாநுசன் * என்னையாளவந்த
கற்பகம் கற்றவர்காமுறுசீலன் * கருதரிய
பற்பலுயிர்களும்பல்லுலகுயாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை * இந்நானிலத்தேவந்து நாட்டினனே. (௫௩)

நாட்டிய நீசச்சமயங்கள்மாண்டன * நாரணனைக்
காட்டியவேதம் களிப்புற்றது * தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்தமிழ்மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து * இராமாநுசன்தன் இயல்வுகண்டே. (௫௪)

கண்டவர்சிந்தைகவரும் * கடிபொழில்தென்னரங்கன்
தொண்டர்குலாவும் இராமாநுசனை * தொகையிறந்த
பண்தருவேதங்கள் பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழும் * குடியாம்எங்கள் † கோக்குடியே (௫௫)

† கோக்குலமே என்றும் பாடம்.

கோக்குலமன்னரை மூவெழுகால் * ஒருகூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும்புனிதன் * புவனமெங்கும்
ஆக்கியகீர்த்தி இராமாநுசனை அடைந்தபின் என்
வாக்குரையாது * என்மனம்நினையாது இனிமற்றொன்றையே. (௫௬)

மற்றொருபேறு மதியாது * அரங்கன்மலரடிக்கு ஆள்
உற்றவரே தனக்கு உற்றவராக் கொள்ளும்உத்தமனை *
நற்றவர்போற்றும் இராமாநுசனை இந்நானிலத்தே
பெற்றனன் * பெற்றபின் மற்றறியேன் ஒருபேதைமையே. (௫௭)

பேதையர்வேதப்பொருளிதென்று உன்னி * பிரமம்நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிரும் அஃதென்று * உயிர்கள்மெய்விட்டு
ஆதிப்பரனொடொன்றாமென்று சொல்லும் அவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான் * எம்இராமாநுசன் மெய்ம்மதிக்கடலே. (௫௮)

கடலளவாய திசையெட்டினுள்ளும் கலியிருளே *
மிடைதருகாலத்து இராமாநுசன் * மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத்துரந்திலனேல் உயிரை
யுடையவன் * நாரணனென்று அறிவாரில்லை உற்றுணர்ந்தே. (௫௯)

உணர்ந்தமெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் * திருவாய்மொழியின்
மணந்தரும் இன்னிசைமன்னுமிடந்தொறும் * மாமலராள்
புணர்ந்தபொன்மார்பன் பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல் * இராமாநுசன் எம்குலக்கொழுந்தே. (௬0)

கொழுந்துவிட்டோடிப்படரும் வெங்கோள்வினையால் * நிரயத்து
அழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும் * அருமுனிவர்
தொழுந்தவத்தோன் எம்இராமாநுசன் தொல்புகழ்சுடர்மிக்கு
எழுந்தது * அத்தால்நல்லதிசயம்கண்டது இருநிலமே. (௬௧)

இருந்தேன் இருவினைப்பாசம்கழற்றி * இன்றுயான்இறையும்
வருந்தேன் இனி எம்இராமாநுசன் * மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கு ஒன்றும்நன்மைசெய்யாப்
† பெருந்தேவரைப்பரவும் * பெரியோர்தம்கழல்பிடித்தே. (௬௨)

பிடியைத்தொடரும் களிறென்ன * யான்உன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படி நல்கவேண்டும் * அறுசமயச்
செடியைத்தொடரும் மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்து இப்
படியைத்தொடரும் * இராமாநுசா! மிக்கபண்டிதனே! (௬௩)

பண்தருமாறன் பசுந்தமிழ் * ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிட எங்களிராமாநுசமுனிவேழம் * மெய்ம்மை
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது * வாதியர்காள்! உங்கள்வாழ்வற்றதே. (௬௪)

† 'பெருந்தேவனை' என்றும் பாடம்.

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு என்றும்மறையவர்தம்
தாழ்வற்றது தவம்தாரணிபெற்றது * தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்கு அந்
நாழற்றது * நம்இராமாநுசன் தந்த ஞானத்திலே. (௬௫)

ஞானம்கனிந்த நலங்கொண்டு * நாள்தொறும்நைபவர்க்கு
வானம்கொடுப்பது மாதவன் * வல்வினையேன்மனத்தில்
ஈனம்கடிந்தஇராமாநுசன் தன்னையெய்தினர்க்கு அத்
தானம்கொடுப்பது * தன் தகவென்னும் சரண்கொடுத்தே. (௬௬)

சரணமடைந்த தருமனுக்கா * பண்டுநூற்றுவரை
மரணமடைவித்த மாயவன் * தன்னைவணங்கவைத்த
கரணமிவை உமக்கன்றென்றுஇராமாநுசன் உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல் * அரணார் மற்றிவ்வாருயிர்க்கே? (௬௭)

ஆரெனக்கின்று நிகர்சொல்லில் * மாயன் அன்றைவர்தெய்வத்
தேரினில் செப்பியகீதையின்செம்மை * பொருள்தெரியப்
பாரினில்சொன்ன இராமாநுசனைப் பணியும்நல்லோர்
சீரினில்சென்றுபணிந்தது * என்ஆவியும்சிந்தையுமே. (௬௮)

சிந்தையினோடுகரணங்கள் யாவும்சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு * அவைஎன்தனக்குஅன்று அருளால்
தந்தஅரங்கனும்தன்சரண் தந்திலன் தான்அதுதந்து *
எந்தைஇராமாநுசன் வந்தெடுத்தனன் இன்றுஎன்னையே. (௬௯)

என்னையும்பார்த்துஎன்னியல்வையும்பார்த்து *எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம் * அன்றிஎன்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதே உன்பெருங்கருணை
தன்னை என்பார்ப்பர் ? * இராமாநுசா ! உன்னைச்சார்ந்தவரே. (௭௦)

சார்ந்ததுஎன்சிந்தை உன்தாளிணைக்கீழ் * அன்புதான்மிகவும்
கூர்ந்தது அத்தாமரைத்தாள்களுக்கு * உன்தன்குணங்களுக்கே
தீர்ந்ததுஎன்செய்கை முன்செய்வினை நீசெய்வினையதனால்
பேர்ந்தது * வண்மைஇராமாநுசா ! எம்பெருந்தகையே ! (௭௧)

கைத்தனன் தீயசமயக்கலகரை * காசினிக்கே
உய்த்தனன் தூயமறைநெறிதன்னை * என்றுஉன்னிஉள்ளம்
நெய்த்தஅன்போடு இருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனன்என்னை * இராமாநுசன் மிக்கவண்மைசெய்தே. (௭௨)

வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்
தண்மையினாலும் இத்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநன்ஞானமுரைத்த இராமாநுசனை உன்னும்
திண்மையல்லால் எனக்கில்லை * மற்றோர்நிலை தேர்ந்திடிலே. (௭௩)

தேரார் மறையின் திறமென்று * மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது * கொண்டலனைய வண்மை
ஏரார்குணத்தெம் இராமாநுசன் அவ்வெழில்மறையில்
சேராதவரைச் சிதைப்பது * அப்போது ஒருசிந்தைசெய்தே. (எ௪)

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்து ஆழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னைவிடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து * இராமாநுசா! என்னைமுற்றும்நின்றே. ( )

நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும்வைகுந்தநாடும் குலவியபாற்கடலும் *
உன்தனக்கெத்தனையின்பந்தரும்? உன்னிணைமலர்த்தாள்
என்தனக்குமது * இராமாநுசா! * இவையீந்தருளே. (எ௬)

ஈந்தனனீயாதஇன்னருள் * எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்
ஏய்ந்தனன்கீர்த்தியினால் என்வினைகளைவேர்பறியக்
காய்ந்தனன் * வண்மையிராமாநுசற்கென்கருத்துஇனியே? (எஎ)

கருத்தில்புகுந்து உள்ளில்கள்ளம்கழற்றி * கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து * நீஇந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள்கேள்வனுக்கு ஆக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்இராமாநுசா! மற்றோர்பொய்ப்பொருளே.

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து * இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்கும் இராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வம் இங்குயாதென்றுலர்ந்துஅவமே
ஐயப்படாநிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. (எ௯)

நல்லார்பரவும்இராமாநுசன் * திருநாமம்நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள்யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலும்என்றும் எப்போதிலும் எத்தொழும்பும்
சொல்லால்மனத்தால் * கருமத்தினால்செய்வன்சோர்வின்றியே. (அ0)

சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்றவெனக்கு * அரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றிஇன்று பெறுத்தும்இராமாநுசா! இனிஉன்
சீரொன்றியகருணைக்கு * இல்லைமாறு தெரிவுறிலே. (அ௧)

தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந்தீவினையால்
உருவற்றஞானத்துழல்கின்றவென்னை * ஒருபொழுதில்
பொருவற்றகேள்வியனாக்கிநின்றான் என்னபுண்ணியனோ?
தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனென்னும் சீர்முகிலே. (அ௨)

சீர்கொண்டுபேறறஞ்செய்து * நல்வீடுசெறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதயுகமாம்
ஏர்கொண்டவீட்டை எளிதினில்எய்துவன் உன்னுடைய
கார்கொண்டவண்மை * இராமாநுசா! இதுகண்டுகொள்ளே. (அ௩)

கண்டுகொண்டேன் எம்இராமாநுசன்தன்னை * காண்டலுமே [நோய்
தொண்டுகொண்டேன் அவன்தொண்டர்பொற்றாளில் * என்தொல்லைவெந்
விண்டுகொண்டேன் அவன் சீர்வெள்ளவாரியைவாய்மடுத்து இன்று
உண்டுகொண்டேன் * இன்னம்உற்றனஓதில்உலப்பில்லையே. (அ௪)

ஓதியவேதத்தின் உட்பொருளாய் * அதனுச்சிமிக்க
சோதியைநாதனென அறியாது உழல்கின்றதொண்டர் *
பேதைமைதீர்த்தஇராமாநுசனைத் தொழும்பெரியோர்
பாதமல்லால்என்தன் ஆருயிர்க்கு* யாதொன்றும்பற்றில்லையே. (அ௫)

பற்றா மனிசரைப்பற்றி * அப்பற்றுவிடாதவரே
உற்றாரெனஉழன்று ஓடிநையேன் இனி * ஒள்ளியநூல்
கற்றார்பரவும்இராமாநுசனைக் கருதும்உள்ளம்
பெற்றார்யவர் * அவர்எம்மைநின்றாளும்பெரியவரே. (அ௬)

பெரியவர்பேசிலும் பேதையர்பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று † முடையவனென்றென்று*உணர்வின்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி இராமாநுசன் மறைதேர்ந்துஉலகில்
புரியுநன்ஞானம் * பொருந்தாதவரைப் பொரும்கலியே. (அ௭)

கலிமிக்கசெந்நெல் கழனிக்குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து * அதனால்
வலிமிக்கசீயம்இராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில்வந்தமை போற்றுவனே. (அ௮)

போற்றருஞ்சீலத்துஇராமாநுச! * நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வுஅதுதீரில் * உன்சீர்தனக்குஓர்
ஏற்றமென்றேகொண்டிருக்கிலும் என்மனமேத்தியன்றி
ஆற்றகில்லாது * இதற்குஎன்னினைவாயென்றிட்டஞ்சுவனே. (அ௯)

‡ நினையார்பிறவியை நீக்கும்பிரானை * இந்நீணிலத்தே
எனையாளவந்த இராமாநுசனை * இருங்கவிகள்
புனையார் புனையும்பெரியவர்தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில்வருந்துவர் மாந்தர்மருள்சுரந்தே. (௯௦)

மருள்சுரந்து ஆகமவாதியர்கூறும் * அவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்த உலகிருள்நீங்க * தன்ஈண்டியசீர்
அருள்சுரந்துஎல்லாவுயிர்கட்குமநாதன் அரங்கனென்னும்
பொருள்சுரந்தான் * எம்இராமாநுசன் மிக்கபுண்ணியனே. (௯௧)

---

† 'உடையவனென்று' என்றும் பாடம்.

‡ 'நினைவார்பிறவியை' என்று பாடாந்தரம்.

புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் * செம்மைநூற்புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி இராமாநுச! இன்றுநீபுகுந்தென்
கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும் * நின்றஇக்காரணம் கட்டுரையே. (கூஉ)

கட்டப்பொருளைமறைப்பொருளென்று * கயவர்சொல்லும்
பெட்டைகெடுக்கும் பிரானல்லனே? * என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னும்ஒள்வாளுருவி
வெட்டிக்களைந்த * இராமாநுசனென்னும் மெய்த்தவனே. (கூங)

தவம்தரும்செல்வம் தகவும்தரும் * ‡ சலியாப்பிறவிப்
பவம்தரும் தீவினைபாற்றித்தரும் * பரந்தாமமென்னும்
திவம்தரும் தீதிலிராமாநுசன் தன்னைச்சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் * அவன்சீரன்றி யானொன்றும்உள்மகிழ்ந்தே. (கூச)

உண்ணின்றுஉயிர்களுக்கு உற்றனவேசெய்து * அவர்க்குஉயவே
பண்ணும்பரனும் பரிவிலனாம்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின்தலைநின்று வீடளிப்பான் எம்இராமாநுசன்
மண்ணின்தலத்துதித்து * மறைநாலும் வளர்த்தனனே. (கூரு)

வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்கநல்வினையில்
கிளரும்துணிவு கிடைத்தறியாது * முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும்விழுந்தும் தனிதிரிவேற்கு
உளர்எம்இறைவர் * இராமாநுசன்தன்னை உற்றவரே. (கூகா)

தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய என்னையுற்றான் இன்று * தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமாநுசன் குணம்சாற்றிடுமே. (கூஎ)

‡ இடுமே இனியசுவர்க்கத்தில் * இன்னும்நரகிலிட்டுச்
சுடுமே அவற்றைத்தொடர்தருதொல்லை * சுழல்பிறப்பில்
நடுமேஇனிநம்இராமாநுசன் நம்மைநம்வசத்தே
விடுமே சரணமென்றால் * மனமே! நையல் மேவுதற்கே. (கூஅ)

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்இராமாநுசமுனி போந்தபின்னே. (கூகூ)

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு * உனதடிப்போதிலொண்சீ
ராந்தெளிதேனுண்டு அமர்ந்திடவேண்டி * நின்பாலதுவே
ஈந்திடவேண்டும்இராமாநுசா! இதுவன்றியொன்றும்
மாந்தகில்லாது * இனிமற்றொன்றுகாட்டி மயக்கிடலே. (கoo)

‡'சரியா' என்றும் பாடம்.

மயக்கும் இருவினை † வல்லியில்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும்பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டுநல்கும் இராமாநுச! என்றதுஉன்னையுன்னி
நயக்குமவர்க்கு இழுக்கென்பர் * நல்லவரென்றுநைந்தே. (கoக)

தையும்மனம் உன்குணங்களைஉன்னி * என்நாஇருந்துஎம்
ஐயன் இராமாநுசனென்றழைக்கும் * அருவினையேன்
கையும்தொழும் கண்கருதிடும் காணக்கடல்புடைசூழ்
வையமிதனில் * உன்வண்மை என்பால்என்வளர்ந்ததுவே? (கoஉ)

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் * அன்றுவாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம் கிழித்தவன் * கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தை இராமாநுசன் என்தன்மெய்வினைநோய்
களைந்து நன்ஞானம்அளித்தனன் * கையில்கனியென்னவே. (கoந)

கையில்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரிலும் * உன்தன்
மெய்யில்பிறங்கியசீரன்றி வேண்டிலன்யான் * நிரயத்
‡ தொய்யில்கிடக்கிலும் சோதிவிண்சேரிலும் இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன் * இராமாநுசா! என்செழுங்கொண்டலே! (கoச)

‡ செழுந்திரைப்பாற்கடல் கண்துயில்மாயன் * திருவடிக்கீழ்
விழுந்திருப்பார்நெஞ்சில் மேவுநன்ஞானி * நல்வேதியர்கள்
தொழும்திருப்பாதன் இராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத்தாடும்இடம் * அடியேனுக்கு இருப்பிடமே. (கoரு)

‡ இருப்பிடம் வைகுந்தம்வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்குஎன்பர்நல்லோர் * அவை தன்னொடும்வந்
திருப்பிடம்மாயன் இராமாநுசன்மனத்துஇன்று அவன்வந்
திருப்பிடம் * என்தனிதயத்துள்ளே தனக்குஇன்புறவே. (கoசு)

‡ இன்புற்றசீலத்து இராமாநுசா! * என்றும்எவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்திறந்து * எண்ணரிய
துன்புற்றுவீயினும்சொல்லுவது ஒன்றுஉண்டுஉன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கி அங்காட்படுத்தே. (கoஎ)

‡ அங்கயல்பாய்வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுதும் * பத்தியெல்லாம்
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சே! நம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி * இராமாநுசனடிப்பூமன்னவே. (கoஅ)

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

இராமாநுசநூற்றந்தாதி ஸம்பூர்ணம்.

---

† 'வல்லியைப்பூண்டு' என்றும் பாடம்.

‡ 'தொய்யில்கிடக்கிலென் சோதிவிண்சேரிலென்' என்றும் பாடம்.

நாலாயிரத் தனியன்கள்.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்-
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.
லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்-
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.
யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே-
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.
மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா.
பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந்-
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.
குருமுகமநதீத்ய ப்ராஹவேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஸுல்கமாதாதுகாம:-
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம் விஷ்ணுசித்தம் நமாமி.
மின்னார்தடமதிள்சூழ்வில்லிபுத்தூரென்று, ஒருகால் *
சொன்னார்கழற்கமலஞ்சூடினோம் *—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம் * கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.
பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்று *
ஈண்டியசங்கமெடுத்தூத *—வேண்டிய
வேதங்களோதிவிரைந்துகிழியறுத்தான் *
பாதங்கள் யாமுடையபற்று.

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ-
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூயஏவாஸ்து பூய:.
அன்னவயல்புதுவையாண்டாள் * அரங்கற்குப்
பன்னுதிருப்பாவைப்பல்பதியம் *—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை, பூமாலை *
சூடிக்கொடுத்தாளைச்சொல்லு.
சூடிக்கொடுத்தசுடர்க்கொடியே! * தொல்பாவை
பாடியருளவல்லபல்வளையாய்! *—நாடிநீ

வேங்கடவற்கென்னை விதியென்றவிம்மாற்றம் *
நாம்கடவா வண்ணமேநல்கு.

அல்லிநாள்தாமரைமேலாரணங்கினின்துணைவி *
மல்லிநாடாண்டமடமயில் *—மெல்லியலாள்
ஆயர்குலவேந்தனாகத்தாள் * தென்புதுவை
வேயர்பயந்தவிளக்கு.

இன்னமுதமூட்டுகேனிங்கேவா பைங்கிளியே! *
தென்னரங்கம்பாட வல்லசீர்ப்பெருமாள் *—பொன்னஞ்
சிலைசேர்நுதலியர்வேள் சேரலர்கோன் * எங்கள்
குலசேகரனென்றேகூறு.
ஆரங்கெடப்பரனன்பர்கொள்ளாரென்று, அவர்களுக்கே
வாரங்கொடுகுடப்பாம்பில்கையிட்டவன் * மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோல் கொல்லிகாவலன்வில்லவர்கோன் *
சேரன் குலசேகரன் முடிவேந்தர்சிகாமணியே.

தருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின்துயர்தீர *
திருச்சந்தவிருத்தம்செய் திருமழிசைப்பரன்வருமூர் *
கருச்சந்தும்காரகிலும்கமழ்கோங்குமணநாறும் *
திருச்சந்தத்துடன்மருவு திருமழிசைவளம்பதியே.
உலகுமழிசையுமுள்ளுணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க *—உலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்தும், மாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம்வலிது.

மற்றொன்றும்வேண்டாமனமே! மதிளரங்கர் *
கற்றினம்மேய்த்தகழலிணைக்கீழ் *—உற்ற
திருமாலைபாடும்சீர்த்தொண்டரடிப்பொடியெம்
பெருமானை * எப்பொழுதும்பேசு.
† தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்-
ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.
மண்டங்குடியென்பர்மாமறையோர்மன்னியசீர் *
தொண்டரடிப்பொடிதொன்னகரம் *—வண்டு
திணர்த்தவயல்தென்னரங்கத்தம்மானை * பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்தவூர்.

---

† 'த்வாமேவமத்வா' என்ற பாடம் இவ்விருத்தத்துக்குச் சேருமென்பர்.

ஆபாதசூடமநுபூய ஹரிம் ஸயாநம்
மத்யேகவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா-
அத்ரஷ்டதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோநிஸ்சிகாய மநவை முநிவாஹநம் தம்.
காட்டவேகண்டபாதகமலம்நல்லாடையுந்தி *
தேட்டருமுதரபந்தம் திருமார்புகண்டம்செவ்வாய்
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து *
பாட்டினால்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்-
யஸ்ய கோபி: ப்ரகாஸாபி ராவித்யம் நிஹதம்தம:.
வாழிபரகாலன் வாழிகலிகன்றி *
வாழிகுறையலூர்வாழ்வேந்தன் *—வாழியரோ
மாயோனைவாள்வலியால்மந்திரங்கொள்மங்கையர்கோன் *
தூயோன்சுடர்மானவேல்.
நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்காநெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதம் தமிழ்நன்னூல்துறைகள்
அஞ்சுக்கிலக்கியம ஆரணசாரம் * பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறி பரகாலன்பனுவல்களே.
எங்கள்கதியே! இராமாநுசமுனியே! *
சங்கைகெடுத்தாண்டதவராசா! *—பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்த மறையாயிரமனைத்தும்
தங்குமனம்நீயெனக்குத்தா.

கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த *
பொய்கைப்பிரான் கவிஞர்போரேறு *—வையத்
தடியவர்கள்வாழவருந் § தமிழ்நூற்றந்தாதி *
படிவிளங்கச்செய்தான்பரிந்து.

என்பிறவிதீரவிறைஞ்சினேன் இன்னமுதா *
அன்பேதகளியளித்தானை *—நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துக்கள்சேரும் * கடல்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல்.

சீராரும்மாடத்திருக்கோவலூரதனுள்
காரார்கருமுகிலைக்காணப்புக்கு *—ஓராத்
திருக்கண்டேனென்றுரைத்தசீரான்கழலே *
உரைக்கண்டாய் நெஞ்சே! உகந்து.

---

§ 'தமிழந்தாதி' என்ற பாடம் செய்யுளிலக்கணத்துக்குச் சேரும்.

நாராயணன்படைத்தான்நான்முகனை * நான்முகனுக்கு
ஏரார்சிவன்பிறந்தானென்னுஞ்சொல் *—சீரார்
மொழிசெப்பிவாழலாம் நெஞ்சமே! * மொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து.

கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்து *
ஒருவிருத்தம்புக்குழலுறுவீ ருயிரின்பொருள்கட்கு *
ஒருவிருத்தம்புகுதாமல் குருகையர்கோனுரைத்த *
திருவிருத்தத்தோரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

காசினியோர்தாம்வாழக் கலியுகத்தேவந்துதித்து *
ஆசிரியப்பாவதனாலருமறைநூல்விரித்தானை *
தேசிகனைப பராங்குசனைத் திகழ்வகுளத்தாரானை *
மாசடையாமனத்துவைத்துமறவாமல்வாழ்த்துதுமே.

முந்துற்றநெஞ்சே! முயற்றிதரித்துரைத்து *
வந்தித்துவாயாரவாழ்த்தி *—சந்த
முருகூருஞ்சோலைசூழ்மொய்பூம்பொருநல் *
குருகூரன் மாறன்பேர் கூறு.
வாழிபரகாலன் வாழிகலிகன்றி *
வாழிகுறையலூர் வாழ்வேந்தன் *—வாழியரோ
மாயோனை வாள்வலியால்மந்திரங்கொள்மங்கையர்கோன் *
தூயோன்சுடர்மானவேல்.

முள்ளிச்செழுமலரோதாரான்முளைமதியம் *
கொள்ளிக்கெனுள்ளங்கொதியாமே *—வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியைவெட்டி *
மருவாளன் தந்தான்மடல்.
பொன்னுலகில்வானவரும்பூமகளும்போற்றிசெய்யும் *
நன்னுதலீர்! நம்பிநறையூரர் *—மன்னுலகில்
என்னிலைமைகண்டுமிரங்காரேயாமாகில் *
மன்னுமடலூர்வன்வந்து.
அவிதிதவிஷயாந்தர: ஶடாரே
ருபநிஷதாமுபகாநமாத்ரபோக:-
அபிசகுணவஶாத்ததேகஶேஷீ
மதுரகவிர்ஹ்ருதயே மமாவிரஸ்து.
வேறொன்றும்நானறியேன் வேதம்தமிழ்செய்த *
மாறன்சடகோபன் வண்குருகூ—ரேறுஎங்கள்
வாழ்வாமென்றேத்தும்மதுரகவியா ரெம்மை
ஆள்வார், அவரே யரண்.

பக்தாம்ருதம் விஸ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும் *
மருவினியவண்பொருநலென்றும் *— அருமறைக
ளந்தாதிசெய்தா னடியிணையே யெப்பொழுதும் *
சிந்தியாய்நெஞ்சே! தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும் *
இனத்தாரையல்லா திறைஞ்சேன் *— தனத்தாலும்
ஏதுங்குறைவிலேன் * எந்தைசடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன் *
வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன் *— ஆய்ந்தபெரு
சீர்சடகோபன் செந்தமிழ்வேதம் தரிக்கும்
பேராதவுள்ளம்பெற.

வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் *
ஆன்றதமிழ்மறைகளாயிரமும் *— ஈன்ற
முதல்தாய்சடகோபன் மொய்ம்பால்வளர்த்த *
இதத்தாய்இராமாநுசன்.

மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும் *
தக்கநெறியும் தடையாகித்— தொக்கியலும் *
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன் *
யாழினிசைவேதத்தியல்.

முன்னைவினையகலமூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் *— என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன், தென்புலத்தார்க்கு *
என்னுக்கடவுடையேன் யான்.

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்றுநண்ணினர்பால் *
சயந்தருகீர்த்தியிராமாநுசமுனிதாளிணைமேல் *
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்கும் * அன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோதிசைநெஞ்சமே!

சொல்லின்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும் *
நல்லன்பரேத்துமுன்நாமமெல்லாம் என்றன்நாவினுள்ளே *
அல்லும்பகலுமமரும்படிநல்கு * அறுசமயம்
வெல்லும்பரம! இராமாநுச! இதுஎன்விண்ணப்பமே.

நாலாயிரத்தனியன்கள் ஸம்பூர்ணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.



மணவாள மாமுனிகள்.

ஸ்ரீவரவரமுநயே நம:

பெரியஜீயர் அருளிச்செய்த
உபதேசரத்தினமாலை.

தனியன்.

(கோயில்கந்தாடை அண்ணன் அருளிச்செய்தது.)

கட்டளைக்கலித்துறை.

முன்னந்திருவாய்மொழிப்பிள்ளை தாம்உபதேசித்த * நேர்
தன்னின்படியைத் தணவாதசொல் மணவாளமுனி *
தன்னன்புடன்செய் உபதேசரத்தினமாலைதன்னை *
தம்நெஞ்சுதன்னில் தரிப்பவர்தாள்கள் சரண்நமக்கே.

நேரிசைவெண்பா.

‡ எந்தைதிருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால் *
வந்தஉபதேசமார்க்கத்தைச்—சிந்தைசெய்து *
பின்னவரும்கற்க உபதேசமாய்ப்பேசுகின்றேன் *
மன்னியசீர் வெண்பாவில் வைத்து. (க)

கற்றோர்கள்தாமுகப்பர் கல்விதன்னிலாசையுள்ளோர் *
பெற்றோமெனவுகந்து பின்புகற்பர் *—மற்றோர்கள்
மாச்சரியத்தாலிகழில் வந்ததுஎன்நெஞ்சே! * இகழ்கை
ஆச்சரியமோதான் அவர்க்கு. (உ)

‡ ஆழ்வார்கள்வாழி அருளிச்செயல்வாழி *
தாழ்வாதுமில்குரவர் தாம்வாழி *—ஏழ்பாரும்
உய்ய அவர்களுரைத்தவைகள்தாம்வாழி *
செய்யமறைதன்னுடனேசேர்ந்து. (ங)

பொய்கையார்பூதத்தார் பேயார் * புகழ்மழிசை
அய்யன்அருள்மாறன் சேரலர்கோன் *—துய்யபட்ட
நாதன்அன்பர்தாள்தூளி நற்பாணன்நற்கலியன் *
ஈதிவர்தோற்றத்தடைவாம்இங்கு. (ச)

அந்தமிழால்நற்கலைகள் ஆய்ந்துரைத்தஆழ்வார்கள் *
இந்தவுலகிலிருள்நீங்க *—வந்துதித்த
மாதங்கள்நாள்கள் தன்னை மண்ணுலகோர்தாமறிய *
ஈதென்றுசொல்லுவோம்யாம். (ரு)

‡ ஐப்பசியிலோணம் அவிட்டம்சதயமிவை *
ஒப்பிலவாநாள்கள் உலகத்தீர்! *—எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார்பூதத்தார்பேயாழ்வார் *
தேசுடனேதோன்றுசிறப்பால். (சு)

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னேவந்துதித்து *
நல்தமிழால் நூல்செய்துநாட்டையுய்த்த *—பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்களென்னும்பேர் இவர்க்கு *
நின்றதுஉலகத்தே நிகழ்ந்து. (௭)

பேதைநெஞ்சே! இன்றைப்பெருமையறிந்திலையோ! *
ஏதுபெருமை இன்றைக்கென்னென்னில்? *—ஓதுகின்றேன்
வாய்த்தபுகழ்மங்கையர்கோன் மாநிலத்தில்வந்துதித்த *
கார்த்திகையில் கார்த்திகைநாள்காண். (௮)

‡ மாறன்பணித்த தமிழ்மறைக்கு * மங்கையர்கோன்
ஆறங்கம்கூற அவதரித்த *—வீறுடைய
கார்த்திகையில்கார்த்திகைநாள் என்றென்று * காதலிப்பார்
வாய்த்தமலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து. (௯)

கார்த்திகையில்ரோகிணிநாள் காண்மின் இன்றுகாசினியீர்! *
வாய்த்தபுகழ்ப்பாணர் வந்துதிப்பால் *—ஆத்தியர்கள்
அன்புடனேதான் அமலனாதிபிரான் கற்றதற்பின் *
நன்குடனேகொண்டாடும்நாள். (௧௦)

மன்னியசீர்மார்கழியில் கேட்டைஇன்றுமாநிலத்தீர்! *
என்னிதனுக்கேற்றமெனில் உரைக்கேன் *—துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார்பிறப்பால் *
நான்மறையோர் கொண்டாடும்நாள். (௧௧)

தையில்மகம்இன்று தாரணியீர்! ஏற்றம் * இந்தத்
தையில்மகத்துக்குச் சாற்றுகின்றேன் *—துய்யமதி
பெற்ற மழிசைப்பிரான்பிறந்தநாளென்று *
நல்தவர்கள்கொண்டாடும்நாள். (௧௨)

மாசிப்புனர்பூசம் காண்மின் இன்றுமண்ணுலகீர்! *
தேசித்திவசத்துக் கேதென்னில் *—பேசுகின்றேன்
கொல்லிநகர்க்கோன் குலசேகரன்பிறப்பால் *
நல்லவர்கள்கொண்டாடும்நாள். (௧௩)

‡ ஏரார்வைகாசி விசாகத்தினேற்றத்தை *
பாரோரறியப்பகர்கின்றேன் *—சீராரும்
வேதம்தமிழ்செய்தமெய்யன் எழில்குருகை
நாதன் * அவதரித்தநாள். (௧௪)

‡ உண்டோவைகாசி விசாகத்துக்கொப்புஒருநாள்? *
உண்டோ சடகோபர்க்கொப்பொருவர்? *—உண்டோ
திருவாய்மொழிக்கொப்பு? தென்குருகைக்குஉண்டோ *
ஒருபார்தனிலொக்குமூர்? (௧௫)

இன்றைப்பெருமைஅறிந்திலையோ ஏழைநெஞ்சே! *
இன்றைக்கென்னேற்றமெனில் உரைக்கேன் *—நன்றிபுனை
பல்லாண்டுபாடிய நம்பட்டர்பிரான் வந்துதித்த *
நல்லானியில் சோதிநாள். (௧௬)

மாநிலத்தின்முன் நம்பெரியாழ்வார்வந்துதித்த *
ஆனிதன்னில்சோதியென்றால் ஆதரிக்கும் *—ஞானியர்க்கு
ஒப்போரில்லைஇவ்வுலகுதனில் என்றுநெஞ்சே! *
எப்போதும் சிந்தித்திரு. (௧௭)

மங்களாசாசனத்தில் மற்றுள்ளஆழ்வார்கள் *
தங்களார்வத்தளவுதா னன்றி *—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப்பட்டர்பிரான் பெற்றான் *
பெரியாழ்வாரென் னும்பெயர். (௧௮)

கோதிலவாம்ஆழ்வார்கள் * கூறுகலைக்கெல்லாம் *
ஆதிதிருப்பல்லாண் டானதுவும் *—வேதத்துக்கு
ஓமென்னுமதுபோல்உள்ளதுக்கெல்லாம்சுருக்காய் *
தான் மங்கலமாதலால். (௧௯)

‡ உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்கலைதான் ? *
உண்டோ பெரியாழ்வார்க்கொப்பொருவர் ? *—தண்தமிழ்நூல்
செய்தருளும்ஆழ்வார்கள்தம்மில் அவர்செய்கலையில் *
பைதல்நெஞ்சே! நீஉணர்ந்துபார். (௨௦)

ஆழ்வார்திருமகளார் ஆண்டாள் * மதுரகவி
யாழ்வாரெதிராசராமிவர்கள் *—வாழ்வாக
வந்துதித்தமாதங்கள்நாள்கள் தம்மின் வாசியையும் *
இந்தவுலகோர்க்கு உரைப்போம்யாம். (௨௧)

‡ இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
வன்றோ இங்குஆண்டாள்அவதரித்தாள் *—குன்றாத
வாழ்வான வைகுந்தவான்போகந்தன்னைஇகழ்ந்து *
ஆழ்வார்திருமகளாராய். (௨௨)

பெரியாழ்வார் பெண்பிள்ளையாய் * ஆண்டாள்பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை *—ஒருநாளைக்கு
உண்டோ மனமே! உணர்ந்துபார் * ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்புஇதற்கும்உண்டு. (௨௩)

அஞ்சுகுடிக்கு ஒருசந்ததியாய் * ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும்தன்மையளாய் *—பிஞ்சாய்ப்
பழுத்தாளைஆண்டாளைப் பத்தியுடன்நாளும் *
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து. (௨௪)

‡ ஏரார்மதுரகவி இவ்வுலகில்வந்துதிக்க *
சீராரும்சித்திரையில் சித்திரைநாள் *—பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்தநாள்களிலும் *
உற்றதெமக்கென்று நெஞ்சே! ஓர். (உரு)

‡ வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம்பதம்போல் *
சீர்த்தமதுரகவி செய்கலையை *—ஆர்ந்தபுகழ்
ஆரியர்கள்தாங்கள் அருளிச்செயல்நடுவே *
சேர்வித்தார் தாற்பரியம்தேர்ந்து. (உசு)

‡ இன்றுஉலகீர்! சித்திரையில் ஏய்ந்ததிருவாதிரைநாள் *
என்றையினும் இன்றிதனுக்கேற்றமென்தான்? *—என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் எதிராசர்தம்பிறப்பால் *
நால்திசையும் கொண்டாடும்நாள். (உஎ)

‡ ஆழ்வார்கள்தாங்கள் அவதரித்தநாள்களிலும் *
வாழ்வானநாள்நமக்கு மண்ணுலகீர் *—ஏழ்பாரும்
உய்ய எதிராசருதித்தருளும் * சித்திரையில்
செய்ய திருவாதிரை. (உஅ)

‡ எந்தையெதிராசர் இவ்வுலகில்எந்தமக்கா *
வந்துதித்தநாளென்னும் வாசியினால் *—இந்தத்
திருவாதிரைதன்னின் சீர்மைதனைநெஞ்சே! *
ஒருவாமல் எப்பொழுதும்ஓர். (உகூ)

எண்ணருஞ்சீர்ப்பொய்கைமுன்னோர் இவ்வுலகில்தோன்றியவூர் *
வண்மைமிகுகச்சி மல்லைமாமயிலை *—மண்ணியில்நீர்
தேங்கும்குறையலூர் சீர்க்கலியன்தோன்றியவூர் *
ஓங்கும் உறையூர் பாணனார். (௩௦)

தொண்டரடிப்பொடியார் தோன்றியவூர் * தொல்புகழ்சேர்
மண்டங்குடியென்பர் மண்ணுலகில் *—எண்திசையும்
ஏத்தும் குலசேகரனூரெனஉரைப்பர் *
வாய்த்த திருவஞ்சிக்களம். (௩க)

மன்னு திருமழிசை மாடத்திருக்குருகூர் *
மின்னுபுகழ்வில்லிபுத்தூர் மேதினியில் *—நன்னெறியோர்
ஏய்ந்தபத்திசாரர் எழில்மாறன் பட்டர்பிரான் *
வாய்ந்துதித்த ஊர்கள்வகை. (௩உ)

சீராரும்வில்லிபுத்தூர் செல்வத்திருக்கோளூர் *
ஏரார்பெரும்பூதூர் என்னுமிவை *—பாரில்
மதியாரும்ஆண்டாள் மதுரகவியாழ்வார் *
எதிராசர் தோன்றியவூர் இங்கு. (௩௩)

ஆழ்வார்களேற்றம் அருளிச்செயலேற்றம் *
தாழ்வாதுமின்றியவைதான் வளர்த்தோர் *— ஏழ்பாரும்
உய்ய அவர்கள்செய்த வியாக்கியைகளுள்ளதெல்லாம் *
வையமறியப் பகர்வோம்வாய்ந்து. (௩௪)

ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் *
தாழ்வா நினைப்பவர்கள்தாம் நரகில் வீழ்வார்க
ளென்று நினைத்து நெஞ்சே! எப்பொழுதும்நீ அவர்பால் *
சென்றணுகக்கூசித்திரி. (௩௫)

தெருளுற்றஆழ்வார்கள் சீர்மையறிவாரார்? *
அருளிச்செயலை அறிவாரார்? *— அருள்பெற்ற
நாதமுனிமுதலான நம்தேசிகரையல்லால் *
பேதைமனமே! உண்டோபேசு. (௩௬)

ஓராண்வழியாய் உபதேசித்தார்முன்னோர் *
ஏராரெதிராசரின்னருளால் *— பாருலகில்
ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று *
பேசிவரம்பறுத்தார்பின். (௩௭)

‡ எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு *
நம்பெருமாள் பேரிட்டுநாட்டிவைத்தார் † *— அம்புவியோர்
இந்தத்தரிசனத்தை எம்பெருமானார்வளர்த்த
அந்தச்செயலறிகைக்கா. (௩௮)

பிள்ளான்நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை *
தெள்ளார்வடக்குத் திருவீதிப்— பிள்ளை *
மணவாளயோகி திருவாய்மொழியைக்காத்த *
குணவாளரென்றுநெஞ்சே! கூறு, (௩௯)

முந்துறவேபிள்ளான் முதலானோர் செய்தருளும் *
அந்தவியாக்கியைகளன்றாகில் *— அந்தோ!
திருவாய்மொழிப்பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல
குருவார் * இக்காலம் நெஞ்சே! கூறு. (௪௦)

தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான்
பிள்ளான் * எதிராசர்பேரருளால் *— உள்ளாரும்
அன்புடனே மாறன்மறைப்பொருளை அன்றுரைத்தது *
இன்பமிகும் ஆறாயிரம். (௪௧)

தஞ்சீரைஞானியர் தாம்புகழும்வேதாந்தி *
நஞ்சீயர்தாம் பட்டர்நல்லருளால் *— எஞ்சாத
ஆர்வமுடன் மாறன்மறைப்பொருளை ஆய்ந்துரைத்தது *
ஒன்பதினாயிரம். (௪௨)

---

† 'நாட்டுவித்தார்' என்பது பாடாந்தரம்.

நம்பிள்ளை தம்முடைய நல்லருளால்ஏவியிட *
பின்பெரியவாச்சான்பிள்ளையதனால் *—இன்பா
வருபத்தி மாறன்மறைப்பொருளைச்சொன்னது *
இருபத்துநாலாயிரம். (சங)

‡ தெள்ளியதாநம்பிள்ளை செப்புநெறிதன்னை *
வள்ளல்வடக்குத்திருவீதிப்பிள்ளை *—இந்த
நாடறிய மாறன்மறைப்பொருளை நன்குரைத்தது *
ஈடுமுப்பத்தாறாயிரம். (சச)

அன்போடு அழகியமணவாளச்சீயர் *
பின்போரும்கற்றறிந்து பேசுகைக்கா *—தம்பெரிய
போதமுடன் மாறன்மறையின்பொருளுரைத்தது *
ஏதமில்பன்னீராயிரம். (சரு)

பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய * வியாக்கியைகள் செய்தார் *—அரிய
அருளிச்செயற்பொருளை ஆரியர்கட்குஇப்போது *
அருளிச்செயலாய்த் தெரிந்து. (சசா)

நஞ்சீயர்செய்தவியாக்கியைகள் நாலிரண்டுக்கு *
எஞ்சாமையாவைக்கும் இல்லையே *—தம்சீரால்
வையகுருவின்தம்பி மன்னுமணவாளமுனி *
செய்யுமவைதாமும்சில. (சஎ)

சீரார் வடக்குத்திருவீதிப்பிள்ளை * எழு
தேரார் தமிழ்வேதத்துஈடுதனை *—தாருமென
வாங்கிமுன்நம்பிள்ளை ஈயுண்ணிமாதவர்க்குத் *
தாம்கொடுத்தார் * பின்னதனைத்தான். (சஅ)

ஆங்கவர்பால்பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை *
தாம்கொடுத்தார் தம்மகனார் தம்கையில் *—பாங்குடனே
நாலூர்பிள்ளைக்குஅவர்தாம் நல்லமகனார்க்குஅவர்தாம் *
மேலோர்க்குஈந்தார் அவரேமிக்கு. (சசு)

‡ நம்பெருமாள்நம்மாழ்வார் நஞ்சீயர்நம்பிள்ளை
யென்பர் * அவரவர்தம்ஏற்றத்தால் *—அன்புடையோர்
சாற்றுதிருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே! *
ஏத்துஅதனைச்சொல்லிநீ யின்று. (ரு0)

துன்னுபுகழ்க்கந்தாடைத்தோழப்பர் தம்முகப்பால் *
என்னஉலகாரியனோ என்றுஉரைக்க *—பின்னை
உலகாரியனென்னும்பேர் நம்பிள்ளைக்குஓங்கி *
விலகாமல் நின்றதுஎன்றும்மேல். (ருக)

பின்னை வடக்குத்திருவீதிப்பிள்ளை * அன்பால்
அன்னதிருநாமத்தை ஆதரித்து *—மன்னுபுகழ்
மைந்தர்க்குச்சாற்றுகையால் வந்துபரந்தது * எங்கும்
இந்தத்திருநாமம் இங்கு. (௫௨)

‡ அன்னபுகழ்முடும்பை அண்ணல் உலகாசிரியன் *
இன்னருளால்செய்தகலை யாவையிலும் *—உன்னில்
திகழ்வசனபூடணத்தின்சீர்மை ஒன்றுக்கில்லை *
புகழல்லஇவ்வார்த்தை மெய்இப்போது. (௫௩)

முன்னம்குரவோர் மொழிந்தவசனங்கள்
தன்னை * மிகக்கொண்டு கற்றோர்தம்முயிர்க்கும் *—இன்னணியாச்
சேரச்சமைத்தவரே சீர்வசனபூடணமென்
பேர் * இக்கலைக்குஇட்டார்பின். (௫௪)

ஆர்வசனபூடணத்தின் ஆழ்பொருளெல்லாம்அறிவார் ? *
ஆரதுசொன்னேரில் அநுட்டிப்பார் ? *—ஒரொருவர்
உண்டாகில் அத்தனைகாண்உள்ளமே ! * எல்லார்க்கும்
அண்டாததன்றோஅது. (௫௫)

உய்யநினைவுடையீர் ! உங்களுக்குச்சொல்லுகின்றேன் *
வையகுருமுன்னம்வாய்மொழிந்த *—செய்யகலை
யாம்வசனபூடணத்தினாழ்பொருளை * கற்றதனுக்
காம் நிலையில்நில்லும்அறிந்து. (௫௬)

தேசிகர்பால்கேட்டசெழும்பொருளை * சிந்தைதன்னில்
மாசறவேயூன்றமனநஞ்செய்து *— ஆசரிக்க
வல்லார்கள்தாம் வசனபூடணத்தின் வான்பொருளை *
கல்லாததுஎன்னோ ! கவர்ந்து. (௫௭)

சச்சம்பிரதாயம் தாமுடையோர்கேட்டக்கால் *
மெச்சும்வியாக்கியைதானுண்டாகில் *—நச்சி
அதிகரியும்நீர் வசனபூடணத்துக்கற்ற
மதியுடையீர் * மத்தியத்தராய். (௫௮)

சீர்வசனபூடணத்தின் செழும்பொருளை * சிந்தைதன்னால்
தேறிலுமாம் வாய்கொண்டுசெப்பிலுமாம் *—ஆரியர்காள் !
என்தனக்குநாளும் இனிதாகநின்றதையோ ! *
உந்தமக்குஎவ்வின்பம்உளதாம் ? (௫௯)

தன்குருவின்தாளிணைகள்தன்னில் அன்பொன்றில்லாதார் *
அன்புதன்பால்செய்தாலும் அம்புடைகோன் *—இன்பமிகு
விண்ணாடு தானளிக்கவேண்டியிரான் * ஆதலால்
நண்ணார்அவர்கள் திருநாடு. (௬௦)

ஞானம்அநுட்டானம்இவை நன்றாகவேயுடைய
னான * குருவை அடைந்தக்கால் *—மாநிலத்தீர்!
தேனார்கமலத் திருமாமகள்கொழுநன் *
தானே வைகுந்தம்தரும். (சுக)

உய்யநினைவுண்டாகில் உங்குருக்கள் தம்பதத்தே
வையும் * அன்புதன்னை இந்தமாநிலத்தீர்! *—மெய்யுரைக்கேன்
பையரவில்மாயன்பரமபதம் உங்களுக்காம் *
கையிலங்கு நெல்லிக்கனி. (சுஉ)

ஆசாரியன்செய்த உபகாரமானவது *
தூய்தாக நெஞ்சு தன்னில்தோன்றுமேல் *—தேசாந்
தரத்திலிருக்க மனந்தான்பொருந்தமாட்டாது *
இருத்தலினி ஏதறியோம்யாம். (சுங)

தன்னாரியனுக்குத் தான்அடிமைசெய்வது * அவன்
இந்நாடுதன்னில் இருக்கும்நாள் *—அந்நேர்
அறிந்தும் அதிலாசையின்றி ஆசாரியனைப்
பிரிந்திருப்பாரார்? * மனமே! பேசு. (சுச)

ஆசாரியன் சிச்சனாருயிரைப்பேணுமவன் *
தேசாரும்சிச்சனவன் சீர்வடிவை *—ஆசையுடன்
நோக்குமவனென்னும் நுண்ணறிவைக்கேட்டுவைத்தும் *
ஆர்க்கும்அந்நேர்நிற்கைஅரிதாம். (சுரு)

பின்பழகராம்பெருமாள்சீயர் * பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்கஆசையினால் *—நம்பிள்ளைக்கு
ஆனஅடிமைகள்செய் அந்நிலையைநன்னெஞ்சே! *
ஊனமற எப்பொழுதும்ஓர். (சுசு)

ஆசாரியர்க ளனைவருமுன்னாசரித்த *
ஆசாரந்தன்னை அறியாதார் *—பேசுகின்ற
வார்த்தைகளைக்கேட்டு மருளாதே *—பூருவர்கள்
சீர்த்தநிலைதன்னை நெஞ்சே! சேர். (சுஎ)

நாத்திகரும் நற்கலையின் நன்னெறிசேர் ஆத்திகரும் *
ஆத்திகநாத்திகருமாமிவரை *—ஓர்த்துநெஞ்சே!
முன்னவரும்பின்னவரும் மூர்க்கரெனவிட்டு * நடுச்
சொன்னவரை நாளும்தொடர். (சுஅ)

நல்லமணமுள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு *
நல்லமணமுண்டாம் நயமதுபோல் *—நல்ல
குணமுடையோர்தங்களுடன் கூடியிருப்பார்க்கு *
குணமதுவேயாம் சேர்த்திகொண்டு. (சுகூ)

தியகந்தமுள்ளதொன்றைச் சேர்ந்திருப்பதொன்றுக்கு *
தியகந்தமேறும் நிறமதுபோல் *—நேய
குணமுடையோர் தங்களுடன் கூடியிருப்பார்க்கு *
குணமதுவேயாம் செறிவுகொண்டு. (௭௦)

✠ முன்னோர்மொழிந்த முறைதப்பாமல்கேட்டு *
பின்னோர்ந்துதாம் அதனைப் பேசாதே *—தந்நெஞ்சில்
தோற்றினதேசொல்லி இதுசுத்தவுபதேசப
வாற்றதென்பர் * மூர்க்கராவார். (௭௧)

சாற்றுப்பாட்டுக்கள்.

✠ பூருவாசாரியர்கள் போதம்அனுட்டானங்கள் *
கூறுவார்வார்த்தைகளைக் கொண்டு நீர்—தேறி *
இருள்தருமாஞாலத்தே இன்பமுற்றுவாழும் *
தெருள்தருமாதேசிகனைச்சேர்ந்து. (௭௨)

✠ இந்தவுபதேசரத்தினமாலைதன்னை *
சிந்தைதன்னில் நாளும்சிந்திப்பார் *—எந்தை
எதிராசரின்னருளுக்கு என்றும்இலக்காகி *
சதிராகவாழ்ந்திடுவர்தாம். (௭௩)

(எரும்பியப்பா அருளிச்செய்தது.)

மன்னுயிர்காள்! இங்கே மணவாளமாமுனிவன் *
பொன்னடியாம்செங்கமலப்போதுகளை *—உன்னிச்
சிரத்தாலேதீண்டில் அமானவனும்நம்மை
கரத்தாலேதீண்டல் கடன். (௭௪)

அடிவரவு:—எந்தை கற்றோர் ஆழ்வார்கள் பொய்கை அந்தமிழ் ஐப்பசியில் மற்றுள்ள பேதை மாறன் கார்த்திகையில் மன்னிய தையில் மாசி ஏரார் உண்டோ இன்றை மாநிலத்தில் மங்கள கோதில உண்டோ ஆழ்வார் இன்றோ பெரியாழ்வார் அஞ்சுகுடி ஏரார் வாய்த்த இன்று ஆழ்வார்கள்தாங்கள் எந்தை எண்ணரும் தொண்டரடி மன்னுதிரு சீராரும் ஆழ்வார்களேற்றம் ஆழ்வார்களை தெருளுற்ற ஓரான் எம்பெருமானார் பிள்ளான் முந்துற தெள்ளாரும் தஞ்சீரை நம்பிள்ளை தெள்ளிய அன்போடு பெரியவாச்சான் நஞ்சீயர் சீரார் ஆங்கவர்பால் நம்பெருமாள் துன்னுபுகழ் பின்னை அன்னபுகழ் முன்னம் ஆர்வசன உய்ய நினைவு தேசிகர்பால் சச்சம் சீர்வசன தன்குருவின் ஞானம் உய்யநினைவுண்டாகில் ஆசாரியன் தன்னாரியன் ஆசாரியன்சிச்சன் பின்பழகராம் ஆசாரியர்கள் நாத்திகரும் நல்லமணம் தியகந்தம் முன்னோர் பூருவாசாரியர்கள் இந்தவுபதேச மன்னுயிர்காள்.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

உபதேசரத்தினமாலை ஸம்பூர்ணம்.

மணவாளமாமுனிகள்

அருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

தனியன்கள்.

நேரிசைவெண்பா.

அல்லும்பகலும் அனுபவிப்பார் தங்களுக்கு *
சொல்லும்பொருளும் தொகுத்துரைத்தான் *—நல்ல
மணவாளமாமுனிவன் மாறன்மறைக்கு *
தணவா நூற்றந்தாதிதான்.

மன்னுபுகழ்சேர் மணவாளமாமுனிவன் *
தன்னருளால் உட்பொருள்கள் தம்முடனே—சொன்ன *
திருவாய்மொழி நூற்றந்தாதியாம்தேனை *
ஒருவாதருந்து நெஞ்சே! உற்று.

---

‡ † உயர்வேபரன்படியை உள்ளதெல்லாம்தான்கண்டு *
உயர்வேதம்நேர்கொண்டுரைத்து *—மயர்வேதும்
வாராமல் மானிடரைவாழ்விக்கும்மாறன்சொல் *
வேராகவேவிளையும்வீடு. (க)

‡ வீடுசெய்துமற்றெவையும் மிக்கபுகழ்நாரணன்தாள் *
நாடுநலத்தாலடையநன்குரைக்கும் *—நீடுபுகழ்
வண்குருகூர்மாறன் இந்தமாநிலத்தோர்தாம்வாழ *
பண்புடனேபாடியருள்பத்து. (உ)

பத்துடையோர்க்குஎன்றும் பரனெளியனும்பிறப்பால் *
முத்திதரும்மாநிலத்தீர்! மூண்டுஅவன்பால் *—பத்திசெய்யும்
என்றுரைத்த மாறன்தனின்சொல்லால்போம் * நெடுகச்
சென்றபிறப்பாமஞ்சிறை. (௩)

அஞ்சிறையபுட்கள்தமை ஆழியானுக்கு * நீர்
என்செயலைச் சொல்லுமெனஇரந்து *—விஞ்ச
நலங்கியதும்மாறன் இங்கே நாயகனைத்தேடி *
‡ மலங்கியதும் பத்திவளம். (௪)

வளம்மிக்கமால்பெருமை மன்னுயிரின் தன்மை *
உளமுற்று அங்கூடுருவவோர்ந்து *—தளர்வுற்று
நீங்கநினைமாறனைமால் நீடிலகுசீலத்தால் *
பாங்குடனேசேர்த்தான்பரிந்து. (௫)

---

† 'உயர்வேய' என்பதும் பாடம். ‡ மலங்குதல் - திண்டாட்டம்.

பரிவதிலீசன்படியைப் பண்புடனே பேசி *
அரியனலன் ஆராதனைக்கென்று *—உரிமையுடன்
ஓதியருள்மாறன் ஒழிவித்தான் இவ்வுலகில் *
பேதையர்கள் தங்கள் பிறப்பு. (சு)

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்பமுய்க்கும் *
திறம்அளிக்கும் சீலத்திருமால் *—அறவினியன்
பற்றுமவர்க்குஎன்று பகர்மாறன்பாதமே *
உற்றதுணையென்று உள்ளமே! ஓடு. (எ)

ஓடுமனம்செய்கை யுரையொன்றினில்லாதாருடனே *
கூடிநெடுமால்அடிமைகொள்ளுநிலை *—நாடறிய
ஓர்ந்தவன்தன்செம்மை உரைசெய்தமாறனென *
வாய்ந்துநிற்கும் வாழ்வாமிவை. (அ)

இவையறிந்தோர்தம்மளவில் ஈசனுவந்தாற்ற *
அவயவங்கள்தோறு மணையும்—சுவையதனைப்
பெற்று * ஆர்வத்தால்மாறன் பேசினசொல்பேச * மால்
பொன்தாள்நம்சென்னி † பொரும். (கூ)

பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து *
தருமாறேதுவறத்தன்னை *—திரமாகப்
பார்த்துரைசெய்மாறன் பதப்பணிகள்என்சென்னி *
வாழ்த்திடுக என்னுடையவாய். (க0)

வாயுந்திருமால் மறையநிற்க * ஆற்றாமை
போய்விஞ்சி மிக்கபுலம்புதலாய் *— ‡ ஆய
அறியாதவற்றோடு அணைந்தழுதமாறன் *
செறிவாரைநோக்குந்தினித்து. (கக)

§ திண்ணிதாமாறன் திருமால்பரத்துவத்தை *
நண்ணிஅவதாரத்தே நன்குரைத்த *—வண்ணமறிந்து
அற்றார்கள்யாவர் அவரடிக்கேஆங்கவர்பால் *
உற்றாரைமேவிடாதான். (கஉ)

○ ஊனமறவேவந்து உள்கலந்தமாலினிமை
யானது * அநுபவித்தற் காம்துணையா *—வானில்
அடியார்குழாம்கூட ஆசையுற்றமாறன் *
அடியாருடன் நெஞ்சே! ஆடு. (கங)

ஆடிமகிழ்வானில் அடியார்குழாங்களுடன் *
கூடி இன்பமெய்தாக் குறையதனால் *—வாடிமிக
அன்புற்றார்தம்நிலைமை ஆய்ந்துரைக்கமோகித்து *
துன்புற்றான் மாறன் அந்தோ! (கச)

---

† பொரு என்று ஒப்பாய், அத்தால் சேருமென்றபடி. ‡ ஆய்தல் - ஆராய்தல்.
§ 'திண்ணியதாம்' என்பதும் பாடம். ○ ஊனம் - சங்கோசம்.

அந்தாமத்தன்பால் அடியார்களோடுஇறைவன் *
வந்தாரத் தான்கலந்த வண்மையினால் *—சந்தாமம்
தேர்ந்தசடகோபன் திருமுடிக்கே நெஞ்சமே! *
வாய்ந்தஅன்பை நாள்தோறும்வை. (௧௫)

வைகுந்தன்வந்து கலந்ததற்பின் வாழ்மாறன் *
செய்கின்றநைச்சியத்தைச் சிந்தித்து *—மைநின்ற
தன்மைதனைக்கண்டு உன்னைத்தான்விடேனென்றுரைக்க *
† வன்மையடைந்தான் கேசவன். (௧௬)

கேசவனால்எந்தமர்கள் கீழ்மேலெழுபிறப்பும் *
தேசடைந்தாரென்று ‡ சிறந்துரைத்த *—வீசுபுகழ்
மாறன்மலரடியே மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு *
ஆறென்று நெஞ்சே! அணை. (௧௭)

அணைந்தவர்கள் தம்முடனே ஆயனருட்காளாம்
§ குணந்தனையேகொண்டு உலகைக்கூட்ட *—இணங்கிமிக
மாசிலுபதேசம்செய் மாறன்மலரடியே *
வீசுபுகழ் எம்மாவீடு. (௧௮)

எம்மாவீடும்வேண்டா என்தனக்குஉன் தாளிணையே *
அம்மாஅமையுமென ஆய்ந்துரைத்த *—நம்முடைய
வாழ்முதலாம்மாறன் மலர்த்தாளிணைசூடி *
கீழ்மையற்று நெஞ்சே! கிளர். (௧௯)

⸸ கிளரொளிசேர்கீழுரைத்த பேறுகிடைக்க *
வளரொளிமால் சோலைமலைக்கே *—தளர்வறவே
நெஞ்சைவைத்துச்சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள் *
முன்செலுத்துவோம் எம்முடி. (௨௰)

முடியார்திருமலையில் மூண்டுநின்றமாறன் *
அடிவாரந்தன்னில் அழகர்—வடிவழகைப்
பற்றி * முடியும்அடியும் படிகலனும் *
முற்றும் அனுபவித்தான்முன். (௨௧)

முன்னமழகரெழில்மூழ்கும் குருகையர்கோன் *
இன்னவளவென்ன எனக்கரிதாய்த்—தென்ன *
கரணக்குறையின் கலக்கத்தை * கண்ணன்
ஒருமைப்படுத்தான் ஒழித்து. (௨௨)

⸸ ஒழிவிலாக்காலம் உடனாகிமன்னி *
வழுவிலாஆட்செய்ய மாலுக்கு *—எழுசிகர
வேங்கடத்துப்பாரித்த மிக்கநலம்சேர்மாறன் *
பூங்கழலை நெஞ்சே! புகழ். (௨௩)

---

† வன்மை - ஸ்தைர்யம். ‡ சிறந்து - நன்றாக.

§ 'குணங்களையேகொண்டு' என்று பாடாந்தரம்.

புகழொன்றுமால் எப்பொருள்களும்தானாய் *
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க *—மகிழ்மாறன்
எங்கும்அடிமைசெய்ய இச்சித்து வாசிகமாய் *
அங்கடிமைசெய்தான் மொய்ம்பால். (௨௪)

மொய்ம்பாரும்மாலுக்கு முன்னடிமைசெய்துஉவப்பால் *
அன்பால்ஆட்செய்பவரை யாதரித்தும் *—அன்பிலா
மூடரைநிந்தித்தும் மொழிந்தருளும்மாறன்பால் *
நேடரியபத்திநெஞ்சே! செய். (௨௫)

செய்யபரத்துவமாய்ச் சீரார்வியூகமாய் *
துய்யவிபவமாய்த் † தோன்றிவற்றுள் *—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம்எளிதென்றான் *
பன்னுதமிழ்மாறன் பயின்று. (௨௬)

பயிலும்திருமால் பதந்தன்னில் * நெஞ்சம்
தயலுண்டுநிற்கும் ததியர்க்கு *—இயல்வுடனே
ஆளானார்க்குஆளாகும் மாறனடியதனில் *
ஆளாகார் சன்மம்முடியா. (௨௭)

முடியாத ‡ ஆசைமிக முற்றுகரணங்கள் *
அடியார்தம்மைவிட்டு அவன்பால்—படியா * ஒன்
றொன்றின்செயல்விரும்ப உள்ளதெல்லாம்தாம்விரும்ப *
துன்னியதே மாறன் தன்சொல். (௨௮)

சொன்னாவில்வாழ்புலவீர்! சோறுகூறைக்காக *
மன்னுதமானிடரை வாழ்த்துதலால்—என்னாகும்? *
என்னுடனேமாதவனை ஏத்துமெனும்குருகூர் *
மன்னருளால் மாறும்சன்மம். (௨௯)

சன்மம்பலசெய்து தான்இவ்வுலகளிக்கும் *
நன்மையுடைய மால்குணத்தை நாள்தோறும் *—இம்மையிலே
ஏத்துமின்பம்பெற்றேனெனும் மாறனைஉலகீர்! *
நாத்தழும்ப ஏத்தும்ஒருநாள். (௩௦)

ஒருநாயகமாய் உலகுக்கு * வானோர்
இருநாட்டிலேறியுய்க்கும் இன்பம்—திரமாகா *
மன்னுயிர்ப்போகம்தீது மாலடிமையேஇனிதாம் *
பன்னியிவை மாறனுரைப்பால். (௩௧)

பாலரைப்போல்சீழ்கிப் பரனளவில்வேட்கையால் *
காலத்தால்தேசத்தால் கைகழிந்த *—சால
அரிதானபோகத்தில் ஆசையுற்றுநைந்தான் *
குருகூரில்வந்துதித்தகோ. (௩௨)

---

† 'தோன்றிவற்றில்' என்று பாடாந்தரம்.

‡ 'ஆசைமிகு' என்று பாடாந்தரம்.

கோவானஈசன் குறையெல்லாம்தீரவே *
ஓவாதகாலத்துஉவாதிதனை *—மேவிக்
கழித்தடையக்காட்டிக் கலந்தகுணமாறன் *
வழுத்துதலால் வாழ்ந்தது இந்தமண். (கூகூ)

மண்ணுலகில்முன்கலந்து மால்பிரிகையால் * மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி *—எண்ணிடில்முன்
போலிமுதலானபொருளை அவனாய்நினைந்து *
மேல்விழுந்தான் மையல்தனின்வீறு. (கூச)

வீற்றிருக்கும்மால்விண்ணில் மிக்கமயல்தன்னை *
ஆற்றுதற்காத் தன்பெருமையானதெல்லாம் *—தோற்றவந்து
நன்றுகலக்கப்போற்றி நன்குஉகந்துவீறுஉரைத்தான் *
சென்றதுயர்மாறன் தீர்ந்து. (கூரு)

தீர்ப்பாரிலாதமயல் தீரக்கலந்தமால் *
ஓர்ப்பாதுமின்றி உடன்பிரிய *—நேர்க்க
அறிவழிந்து உற்றாரும் அறக்கலங்க * பேர்கேட்டு
அறிவுபெற்றான் மாறன் சீலம். (கூசு)

சீலமிகுகண்ணன் திருநாமத்தால்உணர்ந்து *
மேலவன்தன் மேனிகண்டு மேவுதற்கு *—சால
வருந்திஇரவும்பகலும் மாறாமல்கூப்பிட்டு *
இருந்தனனே தென்குருகூரேறு. (கூஎ)

ஏறுதிருவுடைய ஈசனுயப்புக்கு *
வேறுபடில் என்னுடைமை மிக்கவுயிர் *—தேறுங்கால்
† என்தனக்கும் வேண்டாவெனும் மாறன்தாளைநெஞ்சே! *
நந்தமக்குப்பேறாக நண்ணு. (கூஅ)

நண்ணாதுமாலடியை நானிலத்தே வல்வினையால் *
எண்ணாத்துன்பமுறும் இவ்வுயிர்கள் *—தண்ணிமையைக்
கண்டிருக்கமாட்டாமல் கண்கலங்கும்மாறனருள் *
உண்டுநமக்கு உற்றதுணையொன்று. (கூகூ)

⁂ ‡ ஒன்றுமிலைத்தேவு இவ்வுலகம்படைத்தமால் *
அன்றியென ஆருமறியவே *—நன்றாக
மூதலித்துப்பேசியருள் மொய்ம்மகிழோன்தாள்தொழவே *
காதலிக்கும் எனதுடையகை. (சo)

கையாரும்சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்க *
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு *—மெய்யான
பேற்றைஉபகரித்த பேரருளின்தன்மைதனை *
போற்றினனே மாறன் பொலிந்து. (சக)

---

† 'எந்தமக்கும்' எனும் பாடமும் வ்யாக்யாநத்துக்குப் பொருந்தும்.

‡ 'ஒன்றுமிலதே' என்பது பாடம்.

பொலிகபொலிகவென்று பூமகள்கோன்தொண்டர் *
மலிவுதனைக் கண்டுகந்துவாழ்த்தி *—உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்தியமாறன்சொல் *
மருந்தாகப்போகும் மனமாசு. (௪௨)

மாசறுசோதி கண்ணன்வந்துகலவாமையால் *
ஆசைமிகுந்து பழிக்குஅஞ்சாமல் *—† ஏசறவே
மண்ணில்மடலூர மாறன் ஒருமித்தான் *
உள்கடுங்கத் தான்பிறந்தவூர். (௪௩)

ஊரநினைந்தமடல் ஊரவும்ஒண்ணாதபடி *
கூரிருள்சேர்கங்குலுடன் கூடிநின்று *—பேராமல்
தீதுசெய்யமாறன் திருவுள்ளத்துச்சென்றதுயர் *
ஓதுவதுஇங்குஎங்ஙனேயோ ? (௪௪)

எங்ஙனேநீர்முனிவது என்னையினி? நம்பியழகு *
இங்ஙனேதோன்றுகின்றது ‡ என்முன்னே *—அங்ஙன்
உருவெளிப்பாடாவுரைத்ததமிழ்மாறன் *
கருதுமவர்க்கு இன்பக்கடல். (௪௫)

கடல்ஞாலத்தீசனை முன்காணாமல்நொந்தே *
உடன்று அநுகரிக்கலுற்று *—திடமாக
வாய்ந்தவனாய்த்தான்பேசும் மாறனுரையதனை *
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்யநோற்றார். (௪௬)

நோற்றநோன்பாதியிலேன் உன்தனைவிட்டாற்றகில்லேன் *
பேற்றுக்குஉபாயம் உன்தன்பேருருளே *—சாற்றுகிறேன்
இங்கென்னிலையெல்லாம் எழில்மாறன்சொல்வல்லார் *
அங்கு அமரர்க்கு ஆராவமுது. (௪௭)

‡ ஆராவமுதாழ்வார் ஆதரித்தபேறுகளை *
தாராமையாலே தளர்ந்துமிக *—தீராத
ஆசையுடன் ஆற்றாமைபேசி யலமந்தான் *
மாசறுசீர் மாறனெம்மான். (௪௮)

மாநலத்தால்மாறன் திருவல்லவாழ்புகப்போம் *
தானினைந்துவீழ்ந்து அவ்வூர்தன்னருகில் *—மேல்நலங்கித்
துன்பமுற்றுச்சொன்ன சொலவுகப்பார்தங்களுக்கு *
பின்பிறக்கவேண்டாபிற. (௪௯)

பிறந்துஉலகம்காத்தளிக்கும் பேரருட்கண்ணா! * உன்
சிறந்தகுணத்தாலுருகும் சீலத்—திறம்தவிர்ந்து *
சேர்ந்தநுபவிக்கும்நிலை செய்யென்றசீர்மாறன் *
வாய்ந்தபதத்தே மனமே! வைகு. (௫௦)

---

† 'ஏசவே' என்று பாடாந்தரம்.

‡ 'என்முன்னென' என்று பாடாந்தரம்.

வைகல்திருவண்வண்டூர் வைகும்இராமனுக்கு * என்
செய்கைதனைப் புள்ளினங்காள்! செப்புமென *—கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் காரிமாறன்கழலை *
மேதினியீர்! நீர்வணங்குமின். ருக

மின்னிடையார்சேர்கண்ணன் மெத்தெனவந்தமனென்று *
தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்த் தான்தள்ளி *—உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர்கோன்தாள்தொழுவே *
நாள்தோறும்நெஞ்சமே! நல்கு. ருஉ

நல்லவலத்தால்நம்மைச் சேர்த்தோன்முன்நண்ணாரை *
வெல்லும் விருத்தவிபூதியனென்று *—எல்லையறத்
தானிருந்துவாழ்த்தும் தமிழ்மாறன்சொல்வல்லார் *
வானவர்க்கு வாய்த்தகுரவர். ருங

குரவைமுதலாம்கண்ணன் கோலச்செயல்கள் *
இரவுபக லென்னுமல் * என்றும்—பரவுமனம்
பெற்றேனென்றேகளித்துப் பேசும்பராங்குசன்தன் *
சொல்தேனில் நெஞ்சே! துவள். ருச

துவளறுசீர்மால்திறத்துத் தொன்னலத்தால் * நாளும்
துவளறுதன் சீலமெல்லாம்சொன்னான் *—துவளறவே
முன்னமனுபவத்தில் மூழ்கிநின்றமாறனதில் *
மன்னுமுவப்பால் வந்தமால். ருரு

மாலுடனேதான்கலந்து வாழப்பெருமையால் *
சாலநைந்துதன்னுடைமை தானடையக்—கோலியே *
தானிகழவேண்டாமல் தன்னைவிடல்சொல்மாறன் *
ஊனமறுசீர்நெஞ்சே! உண். ருசு

உண்ணும்சோறுதி ஒருமூன்றும் எம்பெருமான் *
கண்ணனென்றேநீர்மல்கிக் கண்ணிணைகள் *—மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால்போம்மாறன் *
பொன்னடியே நந்தமக்குப்பொன். ருஎ

பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கேவழங்கி *
என்னிடரைமாலுக் கியம்புமென *—மன்னுதிரு
நாடுமுதல்தூதுநல்கிவிடும் மாறனையே *
நீடுலகீர்! போய்வணங்கும் நீர். ருஅ

நீராகிக்கேட்டவர்கள் நெஞ்சழிய * மாலுக்கும்
ஏரார்விசும்பில் இருப்பரிதா *—ஆராத
காதலுடன்கூப்பிட்ட காரிமாறன்சொல்லை *
ஓதிடவே உய்யும்உலகு. ருகூ

‡‡ உலகுய்யமால்நின்ற உயர்வேங்கடத்தே *
அலர்மகளைமுன்னிட்டு அவன்தன்—மலரடியே *
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன்தாளிணையே *
உன்சரணாய் நெஞ்சமே! உள். ௬௦

உண்ணிலாவைவருடனிருத்தி இவ்வுலகில் *
எண்ணிலாமாயன் எனைநலிய—எண்ணுகின்றான் *
என்றுநினைந்தோலமிட்ட இன்புகழ்சேர்மாறனென *
குன்றிவிடுமே பவக்கங்குல். ௬௧

‡‡ கங்குல்பகலரதி கைவிஞ்சிமோகமுற *
அங்கதனைக்கண்டோ ரரங்கரைப்பார்த்து *—இங்கிவள்பால்
என்செய்யநீரெண்ணுகின்றதென்னும் நிலைசேர்மாறன் *
அஞ்சொலுற நெஞ்சுவெள்ளையாம். ௬௨

வெள்ளியநாமம்கேட்டு விட்டகன்றபின்மோகம் *
தெள்ளியமால் தென்திருப்பேர்சென்றுபுக *—உள்ளம்அங்கே
பற்றிநின்றதன்மை பகரும்சடகோபற்கு *
அற்றவர்கள் தாம்ஆழியார். ௬௩

ஆழிவண்ணன்தன்விசயமானவை முற்றும்காட்டி *
வாழிதனாலென்று மகிழ்ந்துநிற்க *—ஊழிலவை
தன்னைஇன்றுபோல்கண்டு தானுரைத்த † மாறன்சொல் *
பன்னுவரே நல்லதுகற்பார். ௬௪

கற்றோர்கருதும் விசயங்களுக்கெல்லாம் *
பற்றாம்விபவகுணப் பண்புகளை *—உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர்தம்மிழவை வாய்ந்துரைத்தமாறன்சொல் *
பண்ணில்இனிதானதமிழ்ப்பா. ௬௫

பாமருவுவேதம் பகர்மால்குணங்களுடன் *
ஆமழகுவேண்டற்பாடாம்அவற்றை *—தாமனத்தால்
நண்ணிஅவனைக்காண நன்குருகிக்கூப்பிட்ட *
அண்ணலைநண்ணார் ஏழையர். ௬௬

ஏழையர்கள்நெஞ்சை இளக்குவிக்கும்மாலழகு *
சூழவந்துதோன்றித் துயர்விளைக்க *—ஆழுமனந்
தன்னுடனேஅவ்வழகைத் தானுரைத்தமாறன்பால் ||
மன்னுமவர் தீவினைபோம்மாய்ந்து. ௬௭

மாயாமல்தன்னைவைத்த வைசித்திரியாலே *
தீயாவிசித்திரமாச் சேர்பொருளோடு—ஓயாமல் *
வாய்ந்துநிற்கும்மாயன் வளமுரைத்தமாறனைநாம் *
ஏய்ந்துரைத்துவாழுநாள் என்று? ௬௮

---

† 'மாறனுரை' என்று பாடாந்தரம். || 'மாறன்சொல்' என்பதும் பாடம்.
‡ 'ஆயாமல்' என்பதும் பாடாந்தரம்.

என்தனைநீஇங்குவைத்தது எதுக்கென * மாலும்
என்தனக்கும்என்தமர்க்கும் இன்பமதா *—நன்றுகவி
பாடவெனக் கைம்மாறிலாமை * பகர்மாறன்
பாடலைவார்க்கு உண்டாம்இன்பம். ௬௯

இன்பக்கவிபாடுவித்தோனை இந்திரையோடு *
அன்புற்றுவாழ் திருவாறன்விளையில் *—துன்பமறக்
கண்டடிமைசெய்யக் கருதியமாறன்கழலே † *
திண்திறலோர் யாவர்க்கும் தேவு. ௭௦

தேவனுறைபதியில் சேரப்பெறாமையால் *
மேவுமடியார்வசனும் மெய்ந்நிலையும் *—யாவையும்தா
னும்நிலையும்சங்கித்து அவைதெளிந்தமாறன்பால் *
மாநிலத்தீர்! நங்கள்மனம். ௭௧

நங்கருத்தைநன்றாக நாடிநிற்கும்மாலறிய *
இங்கிவற்றிலாசை எமக்குளதென்?—சங்கையினால் *
தன்னுயிரில்மற்றில்நசை தானொழிந்தமாறன்தான் *
அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு. ௭௨

அங்கமரர்பேண அவர்நடுவேவாழ்திருமாற்கு *
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச—எங்கும் *
பரிவருளரென்னப் பயம்தீர்ந்தமாறன் *
வரிகழல்தாள்சேர்ந்தவர் வாழ்வார். ௭௩

வாராமல்அச்சம்இனி மால்தன்வலியினையும் *
சீரார்பரிவருடன் சேர்த்தியையும் *—பாருமெனத்
தானுகந்தமாறன்தாள் சார்நெஞ்சே! சாராயேல் *
மானிடவரைச் சார்ந்துமாய். ௭௪

மாயன்வடிவழகைக் காணாதவல்விடா
யாய் * அதறவிஞ்சிஅழுதலற்றும் *—தூயபுகழ்
உற்றசடகோபனை நாம்ஒன்றிநிற்கும்போதுபகல் *
அற்றபொழுதானது எல்லியாம். ௭௫

எல்லிபகல்நடந்த இந்தவிடாய்தீருகைக்கு *
மெல்லவந்து தான்கலக்கவேணுமென *—நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்கமாறன்கண்டு *
இந்நிலையைச் சொன்னான்இருந்து. ௭௬

இருந்தவன்தான்வந்து இங்கிவரெண்ணமெல்லாம் *
திருந்தஇவர்தந்திறத்தேசெய்து *—பொருந்தக்
கலந்துஇனியனாயிருக்கக் கண்டசடகோபர் *
கலந்தநெறி கட்டுரைத்தார்கண்டு. ௭௭

---

† 'கழல்சேர்' என்பதும் பாடம்.

கண்ணிறையவந்து கலந்தமால்இக்கலவி *
திண்ணிலையாலென்றுமெனச் சிந்தித்து *—தண்ணிதெனும்
ஆருயிரினேற்ற மதுகாட்ட ஆய்ந்துரைத்தான் *
காரிமாறன் தன்கருத்து. ௭௮

கருமால்திறந்தில் ஒருகன்னிகையாம்மாறன் *
ஒருமாகலவியுரைப்பால் *—திரமாக
அந்நியருக்காகாது அவன்தனக்கேயாகும்உயிர் *
இந்நிலையை யோர்நெடிதா. ௭௯

‡‡ நெடுமாலழகுதனில் நீள்குணத்தில் * ஈடு
படுமா நிலையுடைய பத்தர் *—அடிமைதனில்
எல்லைநிலம்தானாக என்னினான்மாறன் * அது
கொல்லைநிலமான நிலைகொண்டு. ௮௦

கொண்டபெண்டிர்தாம்முதலாக் † கூறும்உற்றார் * கன்மத்தால்
அண்டினவரென்றே அவரைவிட்டு *—தொண்டருடன்
சேர்க்கும்திருமாலைச் சேருமென்றான் * ஆர்க்கும்இதம்
பார்க்கும் புகழ்மாறன்பண்டு. ௮௧

பண்டையுறவானபரனைப் புளிங்குடிக்கே
கண்டு * எனக்குஎல்லாவுறவின் காரியமும் *—தண்டறநீ
செய்தருளென்றேயிரந்த சீர்மாறன் தாளிணையை *
உய்துணையென்று உள்ளமே! ஓர். ௮௨

ஓராநீர்வேண்டினவை உள்ளதெல்லாம்செய்கின்றேன் *
நாராயணனன்றோ நானென்று *—பேருறவைக்
காட்ட அவன்சீலத்தில்கால்தாழ்ந்தமாறனருள் *
மாட்டிவிடும் நம்மனத்துமை. ௮௩

மையார்கண்மாமார்பில் மன்னும்திருமாலை *
கையாழிசங்குடனே காணஎண்ணி *—மெய்யான
காதலுடன்கூப்பிட்டுக் கண்டுகந்தமாறன்பேர் *
ஓதவுய்யுமே இன்னுயிர். ௮௪

இன்னுயிர்மால்தோற்றினது இங்கென்னெஞ்சிலென்று * கண்ணால்
அன்றவனைக்காணவெண்ணி ஆண்பெண்ணாய் *—பின்னைஅவன்
தன்னைநினைவிப்பவற்றால் தான்தளர்ந்தமாறனருள் ‡ *
உன்னுமவர்க்கு உள்ளமுருகும். ௮௫

உருகுமால்என்னெஞ்சம் உன்செயல்களெண்ணி *
பெருகுமால் வேட்கையெனப்பேசி *—மருவுகின்ற
இன்னாப்புடன்அவன்சீரேய்ந்துரைத்தமாறன்சொல் *
|| என்னாச்சொல்லா திருப்பது எங்கு? ௮௬

---

† 'கூடுமுற்றார்' என்பதும் பாடம் ‡ 'மாறனுரை' என்பது பாடாந்தரம்.
|| 'என்னால்' என்பதும் பாடம்.

எங்காதலுக்கடி மாலேய்ந்தவடிவழகென்று *
அங்காதுபற்றுசா ஆங்கவன்பால் *—எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப்போகவிடும் மாறன்தாள் *
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும். ௮௭

அறுக்குமிடரென்று அவன்பால்ஆங்குவிட்டதூதர் *
மறித்துவரப் பற்றுமனத்தால் *—அறப்பதறிச்
செய்யதிருநாவாயில் செல்லநினைந்தான்மாறன் *
மையலினால் செய்வறியாமல். ௮௮

மல்லடிமைசெய்யும்நாள் மால்தன்னைக்கேட்க * அவன்
சொல்லுமளவும் பற்றாத்தொன்னலத்தால் *—செல்கின்ற
ஆற்றாமைபேசி அலமந்தமாறனருள் *
மாற்றாகப்போகும் என்தன்மால். ௮௯

‡‡ மால்உமதுவாஞ்சைமுற்றும் மன்னுமுடம்பின்முடிவில் *
சாலநண்ணிச்செய்வனெனத் தானுகந்து *—மேலவனைச்
சீரார்கணபுரத்தே சேருமெனும்சீர்மாறன் *
தாரானே நந்தமக்குத்தாள். ௯0

தாளடைந்தோர்தங்கட்குத் தானேவழித்துணையாம் *
காளமேகத்தைக் கதியாக்கி *—மீளுதலாம்
ஏதமிலாவிண்ணுலகில் ஏகவெண்ணும்மாறனென *
கேதமுள்ளதெல்லாம் கெடும். ௯௧

கெடுமிடர்வைகுந்தத்தைக் கிட்டினாற்போல் *
தடமுடை அனந்தபுரந்தன்னில் *—படவரவில்
கண்துயில்மாற்கு ஆட்செய்யக் காதலித்தான்மாறன் * உயர்
விண்தனிலுள்ளோர் வியப்பவே. ௯௨

வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தை *
தான்மருவாத்தன்மையினால் * தன்னைஇன்னம்—பூமியிலே
வைக்குமெனச்சங்கித்து மால்தெளிவிக்கத்தெளிந்த *
தக்கபுகழ்மாறன் எங்கள்சார்வு. ௯௩

சார்வாகவேஅடியில் தானுரைத்த பத்திதான் *
சீரார்பலத்துடனே சேர்ந்ததனை *—சோராமல்
கண்டுரைத்தமாறன் கழலிணையே நாள்தோறும் *
கண்டுகக்கும் என்னுடையகண். ௯௪

கண்ணனடியிணையில் காதலுறுவார்செயலை *
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே *—மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான்மாறன் *
ஆனபுகழ்சேர் தன்னருள். ௯௫

அருளால்அடியிலெடுத்த மாலன்பால் *
இருளார்ந்ததம்முடம்பை இச்சித்து *—இருவிசும்பில்
இத்துடன்கொண்டேக இவரிசைவுபார்த்திருந்த *
சுத்திசொல்லும் மாறன் செஞ்சொல். ௯௯

செஞ்சொற்பரன்தனது சீராரும்மேனிதனில் *
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின் *—விஞ்சுதலைக்
கண்டவினைக்காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட *
திண்திறல்மாறன் நம்திரு. ௯௭

‡‡ திருமால்தம்பால் விருப்பம் செய்கின்றநோர்கண்டு
அருமாயத்தன்றகல்விப்பானென் *—பெருமால்நீ
இன்றுஎன்பால்செய்வானென்னென்ன இடருற்றுநின்றான் *
துன்னுபுகழ்மாறனைத்தான்சூழ்ந்து. ௯௮

சாற்றுப் பாட்டுக்கள்.

‡‡ சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லைவழிகாட்ட *
ஆழ்ந்தத்னைமுற்றும் அனுபவித்து—*வாழ்ந்துஅங்கு
அடியருடனே இருந்தவாற்றைஉரைசெய்தான் *
முடிமகிழ்சேர்ஞானமுனி. ௯௯

‡‡ முனிமாறன் முன்புஉரைசெய் முற்றின்பம்நீங்கி
தனியாகி நின்றுதளர்ந்து *—நனியாம்
பரமபத்தியால்நைந்து பங்கயத்தாள்கோனை *
ஒருமையுற்றுச்சேர்ந்தான் உயர்ந்து. ௧00

திருவாய்மொழி நூற்றந்தாதி ஸம்பூர்ணம்.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீவரவரமுநயேநம: ·

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

ஆர்த்திப்ரபந்தம்

தனியன்கள்.

நேரிசைவெண்பா.

தேன்பயிலுந்தாரான் எதிராசன்சேவடிமேல் *
தான்பரமபத்தி தலையெடுத்து *—மாந்தர்க்கு
உணவாகஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள்செய்தான் *
மணவாளமாமுனிவன் வந்து.

வம்பவிழ்தார்வண்மை மணவாளமாமுனிகள் *
அம்புவியில்கால்பொருந்தா ஆர்த்தியினால் *—உம்பர்தொழும்
விண்ணுலகிற்செல்ல விரைந்தெதிராசன் பதங்கள் *
நண்ணியுரைத்தார் நமக்கு.

வாழியெதிராசன் வாழியெதிராஜன் *
வாழியெதிராசனெனவாழ்த்துவார் *—வாழியென
வாழ்த்துவார்வாழியெனவாழ்த்துவார் தாளிணையில் *
தாழ்த்துவார் விண்ணோர் தலை. க

இராமாநுசாயநமவென்றுசிந்தித்து *
இராமாநுசரோடுஇறைப்போழ்து *—இராமாநு
சிந்திப்பார்தாளிணையில் சேர்ந்திருப்பார்தாளிணையை *
வந்திப்பார்விண்ணோர்கள் வாழ்வு. உ

தந்தைநற்றாய்தாரம் தநயர்பெருஞ்செல்வம் *
என்தனக்குநீயே எதிராசா! *—இந்தநிலைக்கு
ஏலாதஇவ்வுடலைஇன்றே அறுத்தருள *
பாராததென்னோபகர்? ங

இந்தவுடற்சிறைவிட்டெப்பொழுது யானேகி *
அந்தமில்பேரின்பத்துளாகுவேன் *—அந்தோ!
இரங்காய்எதிராசா! என்னைஇனியுய்க்கை *
பரங்காண்உனக்குஉணர்ந்துபார். ச

தன்புதல்வன்கூடாமல் தான்புசிக்கும்போகத்தால் *
இன்புறுமோ? தந்தை எதிராசா! *—உன்புதல்வன்
அன்றோ † யானுனையாய் ஆதலால் * உன்போகம்
நன்றோவெனையொழிந்தநாள்? ௫

வேம்புமுற்றக் கைப்புமிகுவதுபோல் வெவ்வினையேன் *
தீம்புமுற்றும் தேகமுற்றிச்செல்லுங்கால் *—ஆம்பரிசால்
எற்கவேசிந்தித்து எதிராசா! * இவ்வுடலைத்
தீர்க்கவேயானவழிசெய். ௬

அன்னைகுடிநீருந்தி * முலையுண்குழவி
தன்னுடையநோயைத்தவிராளோ? * என்னே
எனக்காஎதிராசா! எல்லாம் நீசெய்தால் *
உனக்கதுதாழ்வோஉரை? ௭

தன்குழவிவான்கிணற்றைச் சார்ந்திருக்கக்கண்டிருந்தாள் *
என்பதன்றோ அன்னைபழியேற்கின்றாள் *—நன்குணரில்
என்றனிலையென்றனுக்குமேலும் எதிராசா! *
உன்றனிலையாமுறவையோர். ௮

கூபத்தில்வீழும் குழவியுடன்குதித்து * அவ்
வாபத்தைநீக்கும்அந்தவன்னைபோல் *—பாபத்தால்
யான்பிறப்பேனேனும் இனியெந்தையெதிராசன் *
தான்பிறக்குமென்னை யுய்ப்பதா. ௯

பூமகள்கோன்தென்னரங்கர் பூங்கழற்குப்பாதுகமாய் *
தாம்மகிழும்செல்வச்சடகோபர் *—தேமலர்த்தாட்கு
எய்ந்தினியபாதுகமாம்எந்தை இராமாநுசனை *
வாய்ந்தெனதுநெஞ்சமே! வாழ். ௧௦

உன்னையொழியவொருதெய்வம் மற்றறியா *
மன்னுபுகழ்சேர் வடுகநம்பி—தன்னிலையை *
என்தனக்குநீதந்து எதிராசா! * எந்நாளும்
உன்தனக்கே யாட்கொள்உகந்து. ௧௧

தேசந்திகழும் திருவாய்மொழிப்பிள்ளை *
மாசில்திருமலையாழ்வார் * என்னை—நேசத்தால்
எப்படியே எண்ணிநின்பால்சேர்த்தார்எதிராசா! *
அப்படியே நீசெய்தருள். ௧௨

எதிராசன்வாழி எதிராசன்வாழி *
எதிராசன்வாழியென்றென்றேத்தி *—சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர் *
ஆழ்வார்கள் தங்களருள். ௧௩

---

† இங்கு தளை பொருந்தவில்லை.

அதிகாரமுண்டேல் அரங்கர்இரங்காரோ *
அதிகாரமில்லாதார்க்கன்றோ *—எதிராசா!
நீயிரங்கவேண்டுவது * நீயும்அதிகாரிகளுக்
கேயிரங்கில் * என்செய்வோம்யாம்? கச

எம்பெருமானார் திருவடிகளே சரணம் *
என்பதுவேநாவுரைக்கும் இத்தாலென்? *—அன்பவர்பால்
இப்போதளவும் யாதொன்றுங்காண்கின்றிலேன் *
எப்போதுண்டாவ தினி? கரு

ஆகாததீதென்றறிந்தும் பிறர்க்குரைத்தும் *
ஆகாததேசெய்வ னாதலால் *—மோகாந்த
னென்றுநினைத்தென்னை இகழேலெதிராசா! *
என்றுஉன்னடிசேர்வன்யான்? கசா

பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு * நன்மையிலொன்
றில்லாவெனக்கும்எதிராசா! *—நல்லார்கள்
நண்ணும்திருநாட்டை நான் தருவனென்றுநீ *
தண்ணென்றிருக்கிறதென் தான்? கஎ

என்றுவிடிவதுஎனக்கு எந்தாய்எதிராசா! *
ஒன்றுமறிகின்றிலேன் உரையாய் *—குன்றுமல்
இப்படியே இந்தவுயிர்க்கென்றும் இருளேவிளைக்கும்
இப்பவமாம் நீண்ட இரவு. கஅ

அல்லும்பகலும் யானுக்கைவழியுழன்று *
செல்லுமதுஉன்தேசுக்குத் தீங்கன்றோ? *—நல்லார்கள்
தந்தநயர்சேர்க்காட்செய்யச் சகிப்பரோ? *
எந்தையெதிராசா! இசை. ககூ

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

போம்வழியைத்தருமென்றுமின்பமெல்லாம்
புசித்துவழிபோய் அமுதவிரசையாற்றி
நாம்மூழ்கிமலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணிநலந்திகழ்மேனி தன்னைப்பெற்று *
தாம்அமரர்வந்தெதிர் கொண்டலங்கரித்துச்
சற்கரிப்பமாமணி மண்டபத்துச்சென்று *
மாமலராள்கோன்மடியில் வைத்துகக்கும்
வாழ்வுநமக்கெதிராசனருளும் வாழ்வே. உO

கட்டளைக்கலித்துறை.

திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
தருமதிகொண்டவர் தம்மைஉத்தாரகராகவெண்ணி *
இருமனமே அவர்க்கா யெதிராசர்எமைக்கடுக *
பரமபதந்தன்னிலேற்றுவர் என்னபயம்நமக்கே? உக

தீதற்றஞானத்திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
ஏதத்தைமாற்றும் எதிராசர்தம்அபிமானமென்னும் *
போதத்தையேறிப்பவமாம் புணரிதன்னைக்கடந்து *
கோதற்றமாதவன்பாதக்கரையைக் குறுகுவனே. ௨௨

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அடியார்கள்குழாங்க ளழகோலக்கமிருக்க
ஆநந்தமயமான மாமணிமண்டபத்து *
படியாதுமில் படுக்கையாயிருக்கு மநந்தன்
பணாமணிகள் தம்மி னொளிமண்டலத்தினிடையில் *
வடிவாரும்மாமலராள் வலவருகும்மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும்இருக்க *
நடுவாகவீற்றிருக்கும் நாரணனைக்கடுக
நான்அநுபவிக்கும்வகை நல்குஎன்எதிராசா! ௨௩

இந்தவுடல்விட்டுஇரவி மண்டலத்தூடேகி
இவ்வண்டங்கழித் திடையிலாவரணமேழ்போய் *
அந்தமில்பாழ்கடந்து அழகார்விரசைதனிற்குளித்து * அங்கு
அமானவனாலொளிகொண்டசோதியும்பெற்று * அமரர்
வந்தெதிர்கொண்டலங்கரித்து வாழ்த்திவழிநடத்த
வைகுந்தம்புக்கு மாமணிமண்டபத்துச்சென்று *
நந்திருமாலடியார்கள்குழாங் களுடன்கூடும்
நாளெனக்குக்குறுகும்வகை நல்குஎன்எதிராசா! ௨௪

என்றுநிர்ஹேதுகமாக என்னையபிமானித்து
யானுமறிந்துஉனக்கேயாயிருக்கும் வகைசெய்தாய் *
அன்றுமுதலின் றளவும் அநவரதப்பிழையே
அடுத்தடுத்துச்செய்வது அறுதவிப்பதுஇனிச்செய்யேன் *
என்றுன்னைவந்திரப்பதாம் என்கொடுமைகண்டும்
இகழாதேயிரவுபகலடிமை கொண்டுபோந்தாய் *
இன்றுதிருநாடும்எனக்கருள எண்ணுகின்றாய்
இனிக்கடுகச்செய்தருளவேண்டும் எதிராசா! ௨௫

தென்னரங்கர்தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ? *
மன்னியசீர்மாறன் அருள்மாரிதனக்காமோ?
மற்றுமுள்ளதேசிகர்கள் தங்களுக்குமாமோ? *
என்னுடையபிழைபோக்க யாவருக்குமுடியும்?
எதிராசா! உனக்கன்றி யானொருவர்க்காகேன் *
உன்னருளால்எனக்குருசிதன்னையும் உண்டாக்கி
ஒளிவிசும்பில்அடியேனை யொருப்படுத்துவிரைந்தே. ௨௬

இவ்வுலகில்இனியொன்றுமெண்ணாதேநெஞ்சே!
இரவுபகலெதிராச ரெமக்கினிமேலருளும் *
அவ்வுலகைஅலர்மகள் கோனங்கிருக்குமிருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்களநுபவத்தை *
இவ்வுயிருமதுக்கிட்டுப் பிறந்திழந்துகிடந்த
தென்னுமத்தை என்றுமதுக்கிடைச்சுவராய்க்கிடக்கும் *
வெவ்வினையால்வந்தவுடல் விடும்பொழுதைவிட்டால்
விளையுமின்பந்தன்னைமுற்றும்விடாமலிருந்தெண்ணே. ()

பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனேசெய்தருளும் பல்கலைகள்தம்மை *
கண்டதெல்லாமெழுதியவைகற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன்கற்பித்தும் காலத்தைக்கழித்தேன் *
புண்டரிகைகேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போகநினைவொன்றுமின்றிப் பொருந்தியிங்கேயிருந்தேன்*
எண்டிசையுமேத்துமெதிராசனருளாலே
எழில்விசும்பையன்றி இப்போதென்மனமெண்ணாதே. உஅ

பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சாருவாகமதம்நீறுசெய்து சமணச்செடிக்கனல்கொளுத்தியே
சாக்கியக்கடலைவற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட *
மாறுசெய்திடுகணாதவாதியர்கள் வாய்தகர்த் தறமிகுத்துமேல்
வந்தபாசுபதர்சிந்தியோடும்வகை வாதுசெய்த எதிராசனார் *
கூறுமாகுருமதத்தொடோங்கிய குமாரிலன்மதமவற்றின்மேல்
கொடியதர்க்கசரம்விட்டபின் குறுகிமாயவாதியரைவென்றிட *
மீறிவாதில்வருபாற்கரன்மதவிலக்கடிக் கொடியெறிந்துபோய்
மிக்கயாதவமதத்தைமாய்த்த பெருவீரர்நாளும்மிகவாழியே. உகூ

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீராருமெதிராசர் திருவடிகள்வாழி
திருவரையிற்சாத்திய செந்துவராடைவாழி *
ஏராரும்செய்யவடிவு எப்பொழுதும்வாழி
இலங்கியமுந்நூல்வாழி இணைத்தோள்கள்வாழி *
† சோராததுய்ய செய்யமுகச்சோதிவாழி
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள்வாழி *
ஈராறுதிருநாமமணிந்த எழில்வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரைவாழியவே. ௩௦

அறுசமயச்செடியதனை யடியறுத்தான்வாழியே
அடர்ந்துவரும்குதிர்ட்டிகளை யறத்துறந்தான்வாழியே *
செறுகலியைச்சிறிதுமறத் தீர்த்துவிட்டான்வாழியே
தென்னரங்கர்செல்வமுற்றும் திருத்திவைத்தான்வாழியே *

---

† 'தோராத' என்பதும் பாடம்.

மறையதனில்பொருளனைத்தும் வாய்மொழிந்தான்வாழியே
மாறனுரைசெய்ததமிழ் மறைவளர்த்தோன்வாழியே *
|| அறம்மிகுநற்பெரும்பூதூர் அவதரித்தான்வாழியே
அழகாருமெதிராசர் அடியிணைகள்வாழியே. ௩௧

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சங்கரபாற்கரயாதவபாட்ட ப்ரபாகரர்தங்கள்மதம்
சாய்வுறவாதியர்மாய்குவரென்று சதுமறைவாழ்ந்திடுநாள் *
வெங்கலியிங்கினிவீறுநமக்கிலையென்றுமிகத்தளர்நாள்
மேதினிநஞ்சுமையாறுமெனத் துயர்விட்டுவிளங்கியநாள் *
மங்கையாளிபராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரிமாலை ‡ மற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்தபெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருள்நாள்திருவாதிரைநாளே. ௩௨

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இன்னமெத்தனைகாலம்இந்தவுடம்புடன் யானிருப்பேன்?
இன்னபொழுதுடம்புவிடும் இன்னபடியதுதான் *
இன்னவிடத்தேயதுவும் என்றுமிவையெல்லாம்
எதிராசா! நீயறிதி யானிவையொன்றறியேன் *
என்னைஇனிஇவ்வுடம்பை விடுவித்துஉன்னருளால்
ஏராரும்வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல் *
பின்னைவிரையாமல் மறந்திருக்கிறதென்? பேசாய்
பேதைமைதீர்த்தென்னை யடிமைகொண்டபெருமானே! ௩௩

முன்னைவினைபின்னைவினை பிராரத்தமென்று
மூன்றுவகையான வினைத்தொகையனைத்தும் * யானே
என்னையடைந்தோர்தமக்குக் கழிப்பனெனுமரங்கர்
எதிராசா! நீயிட்ட வழக்கன்றோ? சொல்லாய் *
உன்னையல்லதறியாதயான் இந்தவுடம்போடு
உழன்றுவினைப்பயன் புசிக்கவேண்டுவதொன்றுண்டோ? *
என்னுடையஇருவினையை இறைப்பொழுதில் மாற்றி
ஏராரும்வைகுந்தத் தேற்றிவிடாய்நீயே. ௩௪

அருளாலேஅடியேனை அபிமானித்தருளி
அநவரதம்அடிமைகொள்ள நினைத்துநீயிருக்க *
மருளாலேபுலன்போக வாஞ்சைசெய்யுமென்தன்
வல்வினையைமாற்றி உன்பால்மனம்வைக்கப்பண்ணாய் *
தெருளாருங்கூரத்தாழ்வானும் அவர்செல்வத்
திருமகனார்தாமும்அருளிச்செய்த * தீமைத்
திரளானதித்தனையும் சேரவுளவென்னைத்
திருத்தியுயக்கொள்ளும்வகை தேருமெதிராசா! ௩௫

|| 'அறம்மிக' என்பது பாடாந்தரம். ‡ 'முற்றும்' என்பது பாடாந்தரம்.

நேரிசைவெண்பா.

வாதனையி னாற்றமோ? மாளாதவல்வினையோ? *
ஏதென்றறியேனெதிராசா! *—தீதாகும்
ஐம்புலனிலாசை அடியேன்மனந்தன்னை *
வன்புடனேதானடரும் வந்து. ௩௬

இன்றளவுமில்லா அதிகாரம் * மேலும்எனக்கு
என்றுளதாம்சொல்லாயெதிராசா! *—குன்று
வினைத்தொடரைவெட்டிவிட்டு * மேலைவைகுந்தத்து
எனைக்கடுகவேற்றாததென்? ௩௭

அஞ்சிலறியாதார்ஐம்பதிலும் தாமறியார் *
என்சொலெனக்கோ எதிராசா! *—நெஞ்சம்
உனதாளொழிந்தவற்றையே † யுகக்க * இன்றும்
அநுதாபமற்றிருக்கையால் ௩௮

வேம்புகறியாகவிரும்பினர் கைத்ததென்று *
தாம்புகடாதேபுசிக்குந்தன்மைபோல் *—தீம்பனிவ
னென்றுநினைத்துஎன்னையிகழாதெதிராசர் *
அன்றறிந்தங்கீகரிக்கையால். ௩௯

அவத்தேபொழுதைஅடியேன்கழித்து * இப்
பவத்தேயிருக்குமதுபண்போ? *—திவத்தேயான்
சேரும்வகையருளாய் சீராரெதிராசா! *
போருமினியிவ்வுடம்பைப்போக்கு. ௪௦

எனைப்போல்பிழைசெய்வார் இவ்வுலகிலுண்டோ? *
உனைப்போல்பொறுக்கவல்லார் உண்டோ?—அனைத்துலகும்
வாழப்பிறந்தஎதிராசமாமுனிவா! *
ஏழைக்கிரங்காயினி. ௪௧

ஐம்புலன்கள்மேலிட்டடரும்பொழுது அடியேன் *
உன்பதங்கள்தம்மை நினைந்தோலமிட்டால் *—பின்பவைதாம்
என்னையடராமல் இரங்காஎதிராசா! *
உன்னையல்லாதார் எனக்குண்டோ? ௪௨

இந்தவுலகிற்பொருந்தாமைஏதுமில்லை *
அந்தவுலகிற்போகஆசையில்லை *—இந்தநமக்கு
எப்படியோதான் தருவர்எந்தையெதிராசர்! *
ஒப்பில்திருநாடுகந்து? ௪௩

மாகாந்தநாரணனார் வைகும்வகையறிந்தோர்க்கு *
ஏகாந்தமில்லை இருளில்லை *—மோகாந்தர்
இவ்விடமேகாந்த மிருளென்று பயமற்றிருந்து *
செய்வார்கள்தாம் பாவத்திறம். ௪௪

---

† 'உகக்கும்' என்பதும் பாடம்.

நாராயணன் திருமால் நாரம்நாமென்னுமுறவு *
ஆராயில்நெஞ்சே! அநாதியன்றோ? *—சீராரும்
ஆசாரியனாலேயன்றோ? நாமுய்ந்ததென்று *
கூசாமல் எப்பொழுதுங்கூறு. சரு

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோந்தம்மை *
குருவாகிவந் துய்யக்கொண்டு *—பொருவில்
மதிதானளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே! *
எதிராசர்க் காளானோம்யாம். சசு

கட்டளைக்கலித்துறை.

இராமாநுசாயநமவென்று இரவும்பகலும்சிந்தித்து *
இராமாநுசர்களிருப்பிடந்தன்னி லிறைப்பொழுதும் *
இராமாநுசரவர்க்கெல்லாவடிமையுஞ் செய்யவெண்ணி *
இராமாநுசர் தம்மை மாநுசரவென்கொலென்னுவதே! சஎ

என்றுமென்னெஞ்சம் இசையாதென்நா இறைஞ்சாதுசென்னி *
கன்றுனவையொன்றுங்காணாது * கலியார்கலிய
வொன்றுதவன்னம் உலகளிக்கேதாமென திராசனடி
நன்றுதவனை * அரங்கேசர்செய்தநலம்நமக்கே. சஅ

நந்தாநரகத்தழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்! *
எந்தாதையான எதிராசனைநண்ணும் * என்றும்அவ
னந்தாதிதன்னையனுசந்தியும் அவன்தொண்டருடன் *
சிந்தாகுலம்கெடச்சேர்ந்திரும் முத்திபின்சித்திக்குமே. சகூ

அவத்தேபருமந்தகாலத்தைப்போக்கி * அறிவின்மையால்இப்
பவத்தேயுழல்கின்ற பாவியர்காள்! * பலகாலம்நின்று
தவத்தேமுயல்பவர்தங்கட்கு மெய்தவொண்ணாத * அந்தத்
திவத்தேஉம்மைவைக்கும் சிந்தியும்ளீர்எதிராசனென்றே. ருo

என்றுளனீசனுயிருமன்றேயுண் டிக்காலமெல்லாம் *
இன்றளவாகப்பழுதே கழிந்துஇருவினையால் *
என்றிழவின்றியிருக்குமென்னெஞ்சம் இரவுபகல்
நின்றுதவிக்கும் * எதிராசா! நீயருள்செய்தபின்னே. ருக

நேரிசைவெண்பா.

கனககிரிமேல் கரியமுகில்போல் *
வினதைசிறுவன்மேற்கொண்டு *—தனுவிடும்போது
ஏராரங்கரெதிராசர்க்காக * என்பால
வாராமுன்னிற்பர் மகிழ்ந்து. ருஉ

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இதத்தாலே தென்னரங்கர் செய்கின்றதென்றறிந்தே
யிருந்தாலும் தற்காலவேதனையின் கனத்தால் *
பதைத்தாவோ என்னுமிந்தப்பாவவுடம்புடனே
பலநோவுமநுபவித் திப்பவத்திருக்கப்போமோ? *
மதத்தாலே வல்வினையின்வழியுழன்று திரிந்த
வல்வினையேன்தன்னை யுனக்காளாக்கிக்கொண்ட *
இதத்தாயும்தந்தையுமா மெதிராசா! என்னை
இனிக்கடுகவிப்பவத்தினின்று மெடுத்தருளே. ருங

கட்டளைக்கலிப்பா.

இன்ன மெத்தனை நாளிவ் வுடம்புடன்
இருந்து நோவுப டக்கட வேனையோ! *
என்னை யிதினின் றும்விடு வித்துநீர்
என்று தான்திரு நாட்டினு ளேற்றுவீர்? *
அன்னை யுமத்த னுமல்லாத சுற்றமும்
ஆகி யென்னைய ளித்தருள் நாதனே! *
என்னி தத்தையி ராப்பக லின்றியே
ஏக மெண்ணுமெ திராச வள்ளலே! ருச

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்பெற்றோம்
திருவரங்கம்திருப்பதியே யிருப்பாகப்பெற்றோம் *
மன்னியசீர்மாறன்கலை யுணவாகப்பெற்றோம்
மதுரகவிசொற்படியே நிலையாகப்பெற்றோம் *
முன்னவராம்நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம்
முழுதும்நமக்கவை பொழுதுபோக்காகப்பெற்றோம் *
பின்னையொன்று தனில் நெஞ்சுபோமல் பெற்றோம்
பிறர்மினுக்கம்பொறாமையில்லாப் பெருமையும்பெற்றோமே

நேரிசைவெண்பா.

உன்தனபிமானமேயுத்தாரகமென்று *
சிந்தைதெளிந்திருக்கச்செய்தநீ *— அந்தோ!
எதிராசா! நோய்களா லென்னைநலக்காமல் *
சதிராக நின்திருத்தாள் தா. ருசு

தேசிகர்கள்போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை *
வாசமலர்த்தாளடைந்த வத்துவென்று *— நேசத்தால்
என்பிழைகள்காணு வெதிராசரே! * அடியேன்
புன்பகர்வைக்கேளும் பொறுத்து. ருஎ

எந்தைதிருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால் *
உந்தனுறவையுணர்த்தியபின் *—இந்தவுயிர்க்
கெல்லாவுறவும் நீயென்றே யெதிராசா! *
நில்லாத துண்டோ வென்னெஞ்சு? ௫௮

எந்தைதிருவரங்க ரேரார்கருடன்மேல் *
வந்துமுகங்காட்டி வழிநடத்த *—சிந்தைசெய்திப்
பொல்லாவுடம்புதனைப் போக்குவதென்னாள்கொலோ? *
சொல்லாயெதிராசா! சூழ்ந்து. ௫௯

இந்தவரங்கத் தினிதிருநீ யென்றரங்கர் *
எந்தையெதிராசர்க் கிந்தவரம் *—சிந்தைசெய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! * நற்றாதைசொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறைதான். ௬௦

அடிவரவு:—வாழி இராமாநுசாய தந்தை இந்தவுடல் தன் புதல்வன் வேம்புமுற்ற அன்னைகுடி தன்குழவி கூபத்தில் பூமகள் உன்னை தேச எதிராசன் அதிகாரம் எம்பெருமானார் ஆகாத பொல்லாங்கு என்று அல்லும் போம்வழி திருமலை தீதற்ற அடியார்கள் இந்த இன்று நிரேதுகம் தென்னரங்கர் இவ்வுலகில் பண்டுபல சாருவாக சீராரும் அறுசமயம் சங்கர இன்ன முன்னைவினை அருளாலே வாதனையில் இன்றளவும் அஞ்சில் வேம்புகறி அவத்தே எனைப் போல் ஐம்புலன் இந்தவுலகு மாகாந்த நாராயணன் திருவாய் இராமாநுச என்றுதென் நந்தா அவத்தே என்றுளன் கனககிரி இதத்தாலே இன்னமெத்தனை தென்னரங்கர் உன்றன் தேசிகர்கள் எந்தை திருவாய் எந்தை இந்தவரங்கத்து.

ஆர்த்திப்ரபந்தம் ஸம்பூர்ணம்.

பெரியசீயர் திருவடிகளே சரணம்.

அருளாளப்பெருமாளெம்பெருமானார்
அருளிச்செய்த
ஞானஸாரமும்,
மணவாளமாமுனிகள் சேர்த்தருளின
ஜ்ஞானஸார ஸ்லோகங்களும்.

தனியன்.
கட்டளைக் கலித்துறை.

சுருளார்கருங்குழல்தோகையர்வேல்விழியில்துவளும் *
மருளாம்வினைகெடும்மார்க்கம்பெற்றேன் * மறைநான்கும்சொன்ன
பொருள்ஞானஸாரத்தைப்புந்தியில் தந்தவன் * பொங்கொளிசேர்
அருளாளமாமுநியம்பொற் கழல்களடைந்தபின்னே.

நேரிசைவெண்பா.

☸ ஊனவுடற்சிறைநீத் தொண்கமலைகேள்வனடித் *
தேனுகருமாசைமிகு சிந்தையராய் * - தானே
பழுத்தால்விழும்கனிபோல் பற்றற்றுவீழும் *
விழுக்காடே தானருளும்வீடு. க

ஸநத்குமாரஸம்ஹிதாயாம்.— [illegible] ॥

நரகும்சுவர்க்கமும் நாண்மலராள்கோனைப் *
பிரிவும்பிரியா மையுமாத் * - துரிசற்று
சாதகம்போல்நாதன் றனதருளேபார்த்திருத்தல் *
கோதிலடியார் குணம். உ

[illegible] ॥

ஆனையிடர்க்கடிந்த வாழியங்கையம்புயத்தாள் *
கோனைவிடில்நீரில் குதித்தெழுந்த * - மீனெனவே
ஆக்கைமுடியும்படிபிறத்த லன்னவன்தாள் *
நீக்கமிலா வன்பர்நிலை. ௩

ஶா - ௧ - ௫௩ - ௩௯.— [illegible] ।

மற்றொன்றையென்றுமே மாதவனுக்காட்செயலே *
உற்றதிதுவென் றுளந்தெளிந்து * - பெற்ற
பெரும்பேற்றின்மேலுளதோ பேறென்றிருப்பார் *
அரும்பேறு வானத்தவர்க்கு. ௪

ஸ்ரீ பாஞ்சராத்ரே — யேஷாம் ஹ்ருதய ஹ்ருத்வயவக்தாரோ ஹோமைகநிரதா ஸ்தா । தேவிர்யாதிரயம் ப்ராப்தா ஸ்ரீவைகுண்டநிவாஸிநாம்॥

தீர்த்தமுயன்றாடுவதும் செய்தவங்கள்செய்வனவும் *
பார்த்தனைமுன்காத்தபிரான் பார்ப்பதன்முன் * - சீர்த்துவரை
மன்னனடியோமென்னும் வாழ்வுநமக்கீந்ததற்பின் *
என்னகுறை வேண்டுமினி. ௫

ஸ்ரீவிஷ்ணுதர்மே — தாவத்வேதாஶ்ச தீர்த்தாநி ஸரித்ஸ்ஸராம்ஸி ச । யாவந்நாஸக்ருத் ஸம்ஸேவ்யோ விஷ்ணுர்ஹ்ருத்வாஸஶோபந:॥ உக்தஞ்ச — கிம் தஸ்ய தாநை: கிம் தீர்த்தை: கிம் தபோபி: கிமத்வரை:। யோ நித்யம் த்யாயதே தேவம் நாராயணமநந்யதீ:॥

புண்டரிகைகேள்வ னடியார் * அப்பூமிசையோ
னண்டமொருபொருளா வாதரியார் * - மண்டி
மலங்கவொருமீன்புரண்ட மாத்திரத்தால் * ஆர்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க்கடல். ௬

ப்ரஹ்மாண்டே — ப்ரஹ்மணஶ்ஶ்ரீபதேஸ்ஸ்தாநம் கிம்புநர்மோஹயந்தி ந: । ஶக்ரஸ்ய ஸுரஸ்ய தேநாப்யம் க்ஷாமம் ஸ்யாந்நைவ ஜாயதே ॥ (பாகவ - ௧௦-௨௦-௧௫. — ஶ்ரேயோவஸ்துஷ்ய பராஹிரஷ்ய ந்யஸ்தா நாநவிஷ்யய:। கஹிஷ்யே ஸ்தாநாவ்யஸநைர்ந்யாயோக்ஷஜவேதஸ:॥)

தோளார்சுடர்த்திகிரி சங்குடையசுந்தரனுக்
காளானார் * மற்றொன்றி லன்புசெய்யார் * - மீளாப்
பொருவரியவின்னாட்டில் போகம்நுகர்வார்க்கு *
நாகன்றோ விந்திரன்றன்னாடு. ௭

ப்ரஹ்மவைவர்த்தே — தத்த்வம் ப்ராப்ய காரயே விஷ்ணோ ஶேஷாம்ஶோத்பவாம் । ஹோ கா: வாஞ்சந்தி நாம தேஜஸ்வி நிரயோ வஸோ: ॥

முற்றப்புவனமெல்லா முண்டமுகில்வண்ணன் *
கற்றைத்துழாய்சேர் கழலன்றி * - மற்றொன்றை
யிச்சியாவன்பர்தனக் கெங்ஙனேசெய்திடினும் *
உச்சியா லேற்றுமுகந்து. ௮

பார-மோ-௧௭௧. — யா: க்ரியாஸ்ஸம்ப்ரயுக்தாஸ்ஸ்யுரேகாந்தகதபுத்திபி:। தாஸ்ஸர்வாஶ்ஶிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்॥

ஆசிலருளாலனைத்துலகம் காத்தளிக்கும் *
வாசமலராள்மணவாளன் * - தேசுபொலி
விண்ணாட்டில்சால விரும்புமே * வேறொன்றை
யெண்ணாதார் நெஞ்சத்திருப்பு. ௯

யேऽநந்யமநஸ: ஸூரய: யேநாகாராம் நாராயணா: ॥ தேஷாம் ஹ்ருதயம் விஷ்ணோர்வைகுண்டாத் அதிகம் ப்ரியம் ॥

நாளுமுலகை நலிகின்றவாளரக்கன் *
தோளுந்தலையும் துணிந்தவன்றன் * - தாளில்
பொருந்தாதாருள்ளத்துப் பூமடந்தை கேள்வன்
இருந்தாலும் * முள்ளே விருப்பு. ௰

ப்ராஹ்மணவ்யாஸ.—ஸர்வஸ்வமபி யோ தத்யாத் ஸம்ஸ்ரயேத் நவித்யதே । தேஷாம் ஹ்ருதிஸ்தோ தேவ: ஸுலபோ உபஸ்தித: ॥

தன்பொன்னடியன்றி மற்றொன்றில்தாழ்வுசெய்யா *
அன்பருகந்திட்ட தணுவெனிலும் * - பொன்பிறழும்
மேருவாய்க்கொள்ளும் விரையார்துழாயலங்கல் *
மாரிமாக்கொண்டல்நிகர் மால். கக

பௌஷ்கரஸம்ஹிதாயாம்.—ஸமுத்ரவஸ்த்ராம் பூமிம் தத்யாத் ஸர்வரத்நஸமந்விதாம் । ஸர்வஸ்வமபி யஸ்மை தத்தம் நகிஞ்சிதபி ஸ்வீகரோதி ॥ (ஸ்ரீ-கு-உரு—பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி । ததஹம் பக்த்யுபஹ்ருதமஸ்நாமி ப்ரயதாத்மந: ॥ ஸார-உத்ரா-ருக - ௩௫—கநிஷ்டாபி ஸ்வயம் பக்தாம் தாமஹம் ப்ரதிக்ருஹ்ணாமி । ஸஹஸ்ரகோடிஸ்வர்ணாநி அபக்தாத்புருஷாத்தமாத் நப்ரதிக்ருஹ்ணாமி ॥

மாறுயிணைந்த மருதமிறந்தவழ்ந்த *
சேறாரவிந்தச் சேவடியை * - வேறாக
வுள்ளாதாரொண்ணிதியை யீந்திடினும் * தானுகந்து
கொள்ளான் மலர்மடந்தைகோன். கஉ

ப்ரீதிபூர்வம் ப்ரதத்தஸம்பந்தம் ச ஸ்வீகரோதி । தஸ்ய ப்ரீதிஸம்பந்தஸ்ய ஸ்வீகரோதி ॥

பண்டேயுயிரனைத்தும் பங்கயத்தாள்நாயகற்கே *
தொண்டாமெனத்தெளிந்த தூமனத்தர்க்கு * - உண்டோ
பலகற்றும்தம்முடம்பைப் பார்த்தபிமானிக்கும் *
உலகத்தவரோ டுறவு. கங

வில்லிபுத்தூர்ப்பகவான் வார்த்தை.—விஷ்ணுதாஸாவயம்யேஷாம் ப்ராஹ்மணா வர்ணயோநிந:। ஸ்வாதந்த்ர்யஸாம்ஸ்ருஷ்டிநாம் ஸ்வாதிகம் நர ஷிஸம்மதி: ॥ நாஸ்திஸம்மதிஸ்வாதந்த்ர்யம் ஸ்வாதிகம் பவாநஸ்ய। வப

ஆகிஞ்சந்யவிஷயேऽபி ப்ரதிநிதிரூபகிஞ்சந:॥ ஸ்வாதந்த்ர்யஹேதோ காரியப்ரியமயப்ரியம்வயம்வயம்। ஸர்வகாரியபரமாத்மப்ரியம் நாராயணபராவயம்॥ (ஸ்ருதிஸ்ம்ருதி: ப்ராக்ருத: ப்ராக்ருத: வைஷ்ணவோ வைஷ்ணவ உச்யதே। ஸ்ருதிஸ்ம்ருதிநாவிவேத்ய: ஸம்விஷ்ணோர்வச:॥

பூதங்களைந்தும் பொருந்துடலினூற்பிறந்த *
சாதங்கள்நான்கினொடும் சங்கதமாம் * - பேதங்கொண்
டென்னபயன்பெறுவீர் * எவ்வுயிர்க்குமிந்திரகோன்
தன்னடியே காணுஞ்சரண். ௧௪

ஸர்வேஷாம் நியதே — தேஹாத்மஜ்ஞாநகாரேண வர்ணஹேதுகமேவம்। மதிஸ்ஸர்வாத்மநாம் ஸ்ரீமந்நாராயணபதத்வயம்॥

குடியுங்குலமுமெல்லாம் கோகனகைகேள்வ
னடியார்க்கு * அவனடியே யாகும் * - படியின்மேல்
நீர்கெழுவுமாறுகளின் பேரும்நிறமுமெல்லாம் *
ஆர்கலியைச்சேர்ந்திடமாய்க் காற்று. ௧௫

ஸர்வேஷாம் ஜீவதேஹேஷு தேவாதிஷு ப்ராணசேஷ்டாதிபி:॥ விஷ்ணோர்நாராயணஸ்யைவ ஸர்வஸ்ய ஸஹஜவஹி॥ நித்யாந்தர்யாமிணே விஷ்ணோராயணாய நம:। ஸர்வாத்மநா ப்ரபந்நஸ்ய விஷ்ணோர்மோக்ஷே நஸம்ஶய:॥

தேவர்மனிசர் திரியக்குத்தாவரமாம் *
யாவையுமல்லேல விலகுமுயிர் * - பூவின்மிசை
ஆரணங்கின்கேள்வ னமலனறிவேவடிவாம்
நாரணன்தாட் கேயடிமைதான். ௧௬

நாஹம்தேவோ ந மர்த்யோ வா ந திர்யக்ஸ்தாவரோऽபி வா। ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மந:॥ (நாஹம் விப்ரோ ந ச நரபதிர் நாபி வைஶ்யோ ந ஶூத்ரோ நோ வா வர்ணீ ந ச க்ருஹபதிர் நோ வநஸ்தோ யதிர்வா। கிந்து ப்ரோத்யந்நிகிலபரமாநந்தபூர்ணாம்ருதாப்தே: கோபீபர்து: பதகமலயோர் தாஸதாஸாநுதாஸ:॥)

ஒன்றிடுகவிண்ணவர்கோன் செல்வமொழிந்திடுக *
என்றுமிறவா திருந்திடுக * - இன்றே
யிறக்கக்களிப்பும் கவர்வும் * இவற்றால்
பிறக்குமோ தற்றெளிந்தபின். ௧௭

ஶுத்தஸ்வாந்தாம் ஸதா நிந்த்யம் வாத்யவாசரதி:। தோஷவாநுத விஷாதம் வா நைவ ஶக்நுவந்தி வர்ணிதா:॥

ஈனமிலாவன்ப ரென்றுமெய்திலா
மானிடரை * எல்லாவண் ணத்தாலும் * - தானறிய
விட்டார்க்கெளியன் விடாதார்க்கருவரியன் *
மட்டார்துழாயலங்கல் மால். ௧௮

[illegible]

நல்லபுதல்வர் மனையாள்நவையில்கிளை *
இல்லம்நிலம்மாடிவையனைத்தும் * - அல்லலெனத்
தோற்றியெரிதீயிற் சுடுமேல் * அவர்க்கெளிதாம்
ஏற்றரும் வைகுந்தத்திருப்பு. ககூ

[illegible]

விருப்புறினும்தொண்டர்க்கு வேண்டுமிதமல்லால்
திருப்பொலிந்தமார்பனருள் செய்யான் * - நெருப்பை
விடாதேகுழவி விழவருந்தினும் *
தடாதே யொழியுமோதாய். ௨௦

[illegible]

ஆரப்பெருந்துயரே செய்திடினுமன்பர்கள்பால் *
வேரிச்சரோருகைகோன் மெய்ந்நலமாம் * - தேரில்
பொறுத்தற்கரிதெனினும் மைந்தனுடற்புண்ணை *
அறுத்தற்கிசைதாதை யற்று. ௨க

[illegible]

உடைமைநானென்று முடையானுயிரை *
வடமதுரைவந்துதித்தா னென்றும் * - திடமாய்
அறிந்தவன்றன்தாளி லடைந்தவர்க்குமுண்டோ *
பிறந்துபடும் நீள்துயரம்பின். ௨௨

[illegible]

ஊழிவினைக்குறும்பர் ஓட்டருவரென்றஞ்சி *
ஏழைமனமே யினித்தளரேல் * - ஆழிவண்ணன்
தன்னடிக்கீழ்வீழ்ந்து சரணென்றிருந்தொருக்கால் *
சொன்னதற்பின் உண்டோதுயர். ௨௩

[illegible]

வண்டுபடி துளப மார்பனிடைச்செய்தபிழை *
உண்டுபலவென் றுளந்தளரேல் * - தொண்டர்செயும்
பல்லாயிரம்பிழைகள் பார்த்திருந்தும் * காணுங்கண்
இல்லா தவன்காணிறை. உச

கவிஜநதாவிஸத்ரா நாநாதிஹஸ்லாகதிஜெக்ஷண:। ஸதாஜநத்ர
ஸநவஸ்ய நவிஹாரதிஷ்டித: ॥

அற்றமுரைக்கி லடைந்தவர்பாலம்புயைகோன்
குற்றமுணர்ந்திகழும் கொள்கையனோ? * - எற்றே! தன்
கன்றினுடம்பின் வழுவன்றோகாதலிப்பது *
அன்றதனையீன் றுகந்த வா. உரு

ப்ரவநாநுஸாயவஸ்லவ்யாநுஷொஷேண வஸிதாஸ்யதே ॥ ஸ
ஷ்யஜாதயயாவஸ்ஸஂஷொஷேணஸஹவஸ்ஸா ॥

தப்பில்குருவருளால் தாமரையாள்நாயகன்றன் *
ஒப்பிலடிகள்நமக் குள்ளத்து * - வைப்பென்று
தேறியிருப்பார்கள் தேசுபொலிவைகுந்தத்து *
ஏறியிருப்பார் பணிகட்கேய்ந்து. உசா

ஶ்ரவாஸ்யஸ்ய ப்ரஶாஜெந ஃஃஸஹஃஹிஸ்திதா। ப்ராவ்யாதீதி
விஸ்வாஷொயஸ்யாஷிஸஸவிஸஷெஷ ॥

நெறியறியா தாரு மறிந்தவர்பால்சென்று *
செறிதல்செய்யாத் தீமனத்தார் தாமும் * - இறையுரையைத்
தேறுதவரும் * திருமடந்தைகோனுலகத்
தேறிடாரழுந்து வார். உஎ

ஸஹவத்தாயாம்-ச-சம—ஸஜ்ஞஸ்வாஸ்ஸ்யாநஸ்வஸஂஶயாத்தாவி
நஶ்யதி। நாயஂஜொகொஷிநவரொநஸவஂஸஂஶயாத்நஃ ॥

சரணாகதிமற்றோர் சாதநத்தைப்பற்றில் *
அரணாகாதஞ்சனைதன் சேனை * - முரணழிக்
கட்டியதுவேறோர் கயிறுகொண்டார்ப்பதன்முன் *
விட்டபடை போலவிடும். உஅ

ஸநகஸகாஸாஸஂஹிதாயாம்॥ ப்ரவெத்ததிவெஷ்யஂவாஸ
வெக்ஷாநவிஷ்யதெ। வாஹிஸவர்த்தஸவெஷாஂ ஸவகாஃஹெஷ
ப்ரஷா॥ ஸகாதாஹூரிதாயெநதஸ்யஸஂஸாஸநாஶிநீ। ஶாக்ஷஸா
நாவிஸ்ஸஂஹாதாஜ்ஜநெயஸ்யஸஂயநெ ॥ யயாவிஶஷிதாஸஷ்யஸ்
ஷொஹாவ்யஸ்ஸஂயநா। தயாவஂஸா விஸ்ஸஂஹாஸப்ரத்தி: ப்ர
வ்யதாஹவெஷ॥ தஸ்விஸ்ஸஂஷயத்தாநாஂ ஃகிஂஷாஸ்யதி ஸாவி
நாஷ ॥

மந்திரமுமீந்த குருவும் * அம்மந்திரத்தால்
சிந்தனைசெய்கின்ற திருமாலும் * - நந்தலிலா
தென்றுமருள்புரிவர் யாவர் * அவரிடரை
வென்று கடிதடைவர்வீடு. ௪௯

ப்ராணஸம்ரக்ஷணே ஸம்ப்ரஸந்நோ ஹாரேத்ர—தேவதாயா தாரோசைஶ்வர்யம் ஸர்வஸ்வப்ரஸாதக:। வைஷ்ணவஸ்ஸ்ரீஷ்டிகஸ்ஸி த்திர்ஜ்யாஸ்ஸ்ய ஸத்யஸம்ஶய: ॥

மாடும்மனையும் கிளையும்மறைமுனிவர் *
தேடுமுயர்வீடும் சென்னெறியும் * - பீடுடைய
எட்டெழுத்தும்தந்தவனை யென்றிராதாருறவை *
விட்டிடுக்கை கண்டீர்விதி. ௫௦

வைஷ்ணவஸ்ஸ்ரீஷ்டிகம்ஸர்வம் த்யாஜ்யம்ஸ்ராக்ஷாத்ப்ரத: । உதேத்ய வம்யேந ஸந்தம் தேத்ஸ்வரூபாஜ்ஞோஸஜ்ஜீவிஷிபி: ॥

வேதமொருநான்கி னுட்பொதிந்தமெய்ப்பொருளும் *
கோதில்மநுமுதல்வநூல் கூறுவதும் * - தீதில்
சரணாகதிதந்த தன்னிறைவன்தாளே *
அரணாகு மென்னுமது. ௫௧

